*1*

# தேவன், ஆராதனையின் மையப்பொருள்

*தேவன் நமது ஆராதனையின் மையப்பொருளாக இருக்க வேண்டும் (மத்தேயு 4:10). நமது செயல்கள், மதரீதியான நிகழ்ச்சி நிரல்கள், மற்றும் தியானங்கள் ஆகியவை அவசியமானவைகளாக இருந்தாலும், இவைகள் நமது ஆராதனையின் தேவனே கவனக்குவிப்பிடமாக இருத்தல் என்பதற்கு ஒரு பதிலியாக இருப்பதில்லை.*

*ஜான் E. பர்கார்ட் என்பவர் தேவனைப் பற்றிய விழிப்புணர்வானது நமது ஆராதனைக்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்று எழுதினார்:*

> *பொறுப்புள்ள ஆராதனை தேவனை ஒப்புக்கொள்கிறது. அது நமக்கு அப்பால் பாத்திரமான ஒரு உண்மைநிலை உள்ளது என்ற கிருபையுள்ள உணர்வில் ஆரம்பமாகிறது; அது தேவன் யாராக இருக்கின்றார் என்பதன் கொடையான மதித்துணருதலில் வளருகிறது; மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7:12ல் "ஆமென்! எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக! ஆமென்" என்று கூறப்பட்டபடி, துதியின் குறிப்புகள் ஒன்றின்மீது ஒன்று தாராளமாகப் புரளும் அளவுக்கு தேவனுடைய கிருபைத் தன்மையை மகிழ்வுடன் அனுபவித்தலின் பொங்கிப் பெருகுதலினால் ஆராதனையானது தனது உச்சநிலையில் நிறைவடைகிறது.[1]*

*தேவனை நமது ஆராதனையின் மையப்பொருளாக்குவதற்கு, நாம் தேவனைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் யார் என்பதையும் அவர் என்ன செய்கிறார் என்பதையும் நாம் அறிந்திராதபோது நாம் அவரை எவ்வாறு ஆராதிக்க முடியும்? அத்தேனே பட்டணத்தில் இருந்தவர்களிடம் பவுல், அவர்களால் அறியப்பட்டிராத ஒரு கடவுளின் விக்கிரகத்தை அவர்கள் தொழுதுகொண்டிருந்தது பற்றிக் கூறினார். அவர்கள் உண்மை யான தேவனை அறியாதிருந்ததால், அவர்கள் அறியாமல் ஆராதித்துக் கொண்டிருந்தனர். அவரை அறிதல் என்பது ஆராதனைக்கு இன்றியமை யாததாக உள்ளது.*

## தேவனை அறிதல்

*நாம் தேவனை அறிந்துகொள்ளுதலின் முக்கியத்துவத்தை வேதாகமம்*

வலியுறுத்துகிறது. இது அவருடனான நமது உறவிற்கும் அவரால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்தலுக்கும் அத்தியாவசியமானதாக உள்ளது.

> "ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைப் பாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 9:23, 24).

> "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மை ... அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3).

இயேசு திரும்பவும் வரும்போது, அவர் "தேவனை அறியாதவர்களுக்கு ... நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு ..." (2 தெசலோனிக்கேயர் 1:7) வருவார்..

### தடைசெய்வது எது?

நாம் தேவனை அறிவதைச் சிலவிஷயங்கள் தடைசெய்யக்கூடும். இவற்றில் செல்வம் (மாற்கு 4:19), தேவன் படைத்துள்ளவற்றின்மீது ஆரோக்கியமற்ற வகையிலான ஈர்ப்பு (ரோமர் 1:25), துன்மார்க்கமான செயல்கள் (கொலோசெயர் 1:21), உடைமையினால் உரிமை கொள்ளப்பட்டிருத்தல் (பேராசை; கொலோசெயர் 3:5), சுயமகிமை (2 தீமோத்தேயு 3:2), மற்றவர்களை மிகவும் மதிப்புள்ள ஸ்தானத்தில் வைத்தல், மற்றவர்களுடன் உறவில் குறைபாடு (1 பேதுரு 3:7ஐக் காணவும்), வேலை மற்றும் தொழில் சார்ந்த வற்புறுத்துதல்கள், மனித கண்டுபிடிப்புகள் மற்றும் உருவாக்குதல்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன. தேவனைக் காட்டிலும் வேறு எந்த விஷயமும் நமக்குப் பெரிதாகிவிடக் கூடாது. தேவனைக் காட்டிலும் நமக்கு அதிக நெருக்கமாக உள்ள எந்த ஒரு நபரும் அல்லது உடைமையும், நாம் தேவனை அறிவதைத் தடைசெய்யக் கூடும். நாம் ஒரு கண்ணை மூடிக்கொண்டு இன்னொரு கண்ணிற்கு மிக அருகில் ஒரு நாணயத்தை வைத்தோம் என்றால், அது சூரியனை(யும்) மறைக்கக் கூடும். நமக்கு மிகவும் பிரியமான எந்த ஒரு விஷயமும் நாம் தேவனை ஆராதிப்பதைத் தடைசெய்கிறது, ஏனெனில் அது நமது தியானம் மற்றும் ஆராதனை ஆகியவற்றிற்கு உரிய தேவனுக்குப் பதிலாக நம் இருதயத்தில் இடம் பெறுகிறது.

### எது உதவுவதாக உள்ளது?

நாம் தேவனை அறிவதைத் தடைசெய்து அவரை நாம் ஆராதிப்பதைத் தடுக்கும் விஷயங்களைத் தவிர்த்தல் மாத்திரம் போது

மானதாக இருப்பதில்லை. நாம் தேவனை அறிவதற்கு நேர்மறையான படி முறைகளையும் மேற்கொள்ள வேண்டும். நாம் பின்வருபவற்றின் மூலமாகத் தேவனை அறிய இயலும் ... .

1. அவரது படைப்பு. தேவனுடைய இயல்பும் வல்லமையும், இந்த அண்டம் முழுவதிலும் உள்ள உயிரினத்தின் மிகச்சிறிய வடிவத்தில் இருந்து இரவுநேர ஆகாயத்தை ஒளிரச் செய்கிற கெம்பீரமான வானவியல் பொருட்களின் கூட்டம் வரையிலான அவருடைய படைப்பைக் கொண்டு வெளிப்படுத்தப்படுகிறது. “எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளி வாய்க் காணப்படும் ...” (ரோமர் 1:20). “வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது” (சங்கீதம் 19:1). நமது இன்றைய உலகமானது, தேவன் படைத்துள்ளவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடியான அவருடைய மகிமையைச் சிலவேளைகளில் மூடிச்சூழ்ந்து கொள்ளு மளவுக்கு மனிதர்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் கிரியைகளினால் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

நாம் கலை, இயந்திரங்கள், மின்னணுவியல், மற்றும் மனிதத்திறமை களின் பிற சித்தரிப்புகள் என்ற நமது சொந்தத் தயாரிப்புகளினால் மனம் ஈர்க்கப்படுகிறோம். பொழுதுபோக்கு, விளையாட்டு, மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் உயர்ந்திருப்பவர்களை நாம் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கிறோம். அறிவியல் மற்றும் மருத்துவம் ஆகியவற்றின் முன்னேற் றங்கள், நம்மை இத்துறையில் உள்ள மக்களுக்கு, தேவன் மாத்திரம் பெறத்தகுதியான கனத்தைக் கொடுக்கும்படி வழிநடத்துகின்றன. தேவனு டைய கரங்களின் கிரியைகளுக்குப் பதிலாக மனிதனின் கிரியைகள் நம்மைப் பெரும்பாலும் ஈர்க்கின்றன. மனிதனின் எந்த அருஞ்செய்கை களும் தேவனுடைய பலத்த செயல்களுக்குப் போட்டியாக இருக்க இயலாது.

2. வேதவசனங்கள். தேவனுடைய வசனம், அவர் தனிநபர்கள், குடும்பங்கள், மக்களினங்கள், நாடுகள், மற்றும் உலகம் ஆகியவற்றுடன் இடைப்பட்டுள்ள வகையில் அவரது இயல்பின் பல்வேறு வடிவங்களை வெளிப்படுத்துகிறது. வேதாகமத்தின் தொடக்கத்தில் இருந்து முடிவு வரையிலும், அது மனிதர்கள் மற்றும் தேவனுடைய அண்டம் ஆகியவற்றுடன் அவரது நடவடிக்கைகள் பற்றிக் கூறுகிறது. அது படைப்பாளராக உள்ள தேவனைக் கொண்டு தொடங்கி, படைப்பு யாவற்றையும் நிறைவடையச் செய்கிறவராக உள்ள தேவனைக் கொண்டு முடிகிறது. மனிதன் செய்துள்ள எதுவும் தேவனுடைய வல்லமை அல்லது அவரது தனிப்பட்ட பண்பு ஆகியவற்றுடன் போட்டியிட இயலாது. அவரது அன்பு, கிருபை, இரக்கம் ஆகியவை ஒப்பீட்டுக்கு அப்பால் உள்ளன. அதே அளவுக்கு உலகத்தில் இடையூறு மற்றும் அழிவை ஏற்படுத்தும் துன் மார்க்கத்தின்மீதான அவரது வெறுப்பும் இணையற்றதாக உள்ளது.

3. தேவபக்தியுள்ள வாழ்வு. பவுல் தமக்குள் கிறிஸ்து வாழ்வதாகக்

கூறினார் (கலாத்தியர் 2:20). மேலும் அவர் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல நாமும் அவரை [பவுலை] பின்பற்ற வேண்டும் என்றும் எழுதினார் (1 கொரிந்தியர் 11:1). கிறிஸ்தவர்கள் பவுலைக் கண்ணோக்குவதன்மூலம், அவருக்குள் வாழ்ந்த கிறிஸ்துவைக் காண முடியும். வேதாகமத்தின் மாபெரும் மக்களுடைய வாழ்வுகளில் நாம் தேவனைக் காணுகிறோம். அதுபோலவே, இன்றைய நாட்களில் நமது உலகத்தில் தேவபக்தியுள்ள மக்களில் அவர் வாழ்வதையும் நாம் காணமுடியும்.

4. ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய கொள்கைகள். தேவன் நமக்குக் கொடுத்துள்ள ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய கொள்கைகள், அவரது இயல்பை நமக்கு வெளிப்படுத்துகின்றன. இந்த நல்ல மற்றும் பாராட்டத்தக்க பண்பினங்கள் பின்பற்றப்பட்டால், இவைகள் சமூகங்களை மாபெரியவைகளாக்கவும் உலகத்திற்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவரவும் முடியும். தேவனுடைய நீதியையும் ஒழுக்கரீதியான நற்தன்மையையும் புரிந்துகொள்ளுதலானது நாம் அவரைக் கனப்படுத்தும்படி நம்மை வழிநடத்த வேண்டும். சங்கீதக்காரர், "நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்" என்று கூறினார் (சங்கீதம் 7:17). தேவனுடைய இயல்பை உள்ளடக்கும் கொள்கைகள் இல்லாமல் வாழ்கிற சமுதாயங்கள் ஒழுக்கவீனமானவைகளாகவும், குழப்பமானவைகளாகவும், நாகரிகமற்றவைகளாகவும், பண்பற்றவைகளாகவும், காட்டுமிராண்டித்தன மானவைகளாகவும் இருக்கின்றன.

5. அவரது அருளிரக்கமான அக்கறை. தேவனை அவரது படைப்பின்மீது அவருடைய அருளிரக்கமான அக்கறையில் காணமுடியும். "அவர் ... ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங் களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" (நடபடிகள் 14:17).

தேவன் தமது படைப்பிற்குப் பயன்நிறைந்த செயல்களின் சாட்சியத்தைக் கொடுத்துள்ளார். வாழ்வின் ஒவ்வொரு வனப்புமிக்க அம்சமும் அவரது அக்கறையை அறிவிக்கிறது. அவர் படைத்த பூமியானது காண்பதற்குப் பிரியமான காட்சிகளையும், கேட்பதற்கு அழகான ஒலிகளையும், ருசிப்பதற்குச் சுவை மிகுந்த உணவுகளையும், கண்டுபிடிப்ப தற்குப் பயன்நிறைந்த விஷயங்களையும், மற்றும் செய்வதற்கு மன எழுச்சிமிக்க செயல்களையும் அளிக்கிறது. அவரது உலகமானது இருதயங்களைப் பூரிக்கச் செய்யவும் வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியதாகவும் தகுதியானதாகவும் ஆக்கும் பல ஆசீர்வாதங்களை அளிக்கிறது. அவர் எல்லாருக்கும், அதிலும் விசேஷமாக தம்மீது அன்புகூர்ந்து தம்மைச் சேவிக்கிறவர்களுக்கும் (ரோமர் 8:28), தமது பூரண நற்குணத்தையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார் (மத்தேயு 5:45; ரோமர் 2:4).

தேவன் எவ்வாறு இருக்கிறார் என்பதை நாம் தனிப்பட்ட வகையில் அனுபவித்து உணரும்படி நாம் அவரால் அழைக்கப்பட்டு இருக்கிறோம். கர்த்தர்மீது நம்பிக்கையாக இருப்பவர்களின் தேவைகளுக்கு அவருடைய

*[கர்த்தருடைய] பதில்செயலைப் பற்றித் தாவீது பின்வருமாறு விவரித்தார். தேவனுடைய அக்கறையையும் அளிப்பையும் கற்றுக்கொள்ள தேவனை சோதித்து அறியும்படி அவர்களுக்கு அவர் புத்தி சொன்னார்:*

> *நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து,*
> *என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்.*
> *அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்;*
> *அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.*
> *இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு,*
> *அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.*
> *கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளய மிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.*
>
> *கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்;*
> *அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 34:4-8).*

*தேவன்மீது நம்பிக்கைகொண்டு அவரது சித்தத்தைச் செய்ய நாடு கிறவர்களைத் தேவன் தோல்வியுறச் செய்வதில்லை. அவர் நேர்மையுடன் நடப்பவர்களுக்கு எந்த நன்மையையும் குறைவுபடச் செய்வதில்லை (சங்கீதம் 84:11, 12).*

*6. கீழ்ப்படிதல். தேவனுடைய சித்தத்தைச் செய்தல் மூலமாக, நாம் அவருடைய இயல்பின் தன்மைகளைக் கற்கிறோம். அவர் நாம் வாழ்வதற்கான ஒரு மாதிரியாகத் தம்மையே முன்வைத்துள்ளார் (1 பேதுரு 1:16). இன்னொரு நபரின் வாழ்வு நடையைப் பகிர்ந்துகொள்வதால் அவரைப் பற்றி நாம் புரிந்துகொள்ளக்கூடுவது போலவே, தேவனுடைய இயல்பை மேற்கொள்ள நாடி, அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிதலுடன் பதில் செய்வதனால் நாம் தேவனை அறிந்துகொள்ள முடியும். தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் அவரை அறிவதில்லை (1 யோவான் 2:3-5) மற்றும் அவரை அறிய இயலாது.*

*7. இயேசு. தேவன் தம்மை இயேசுவின் மூலமாக மிகவும் முழுமை யாக வெளிப்படுத்தியிருக்கிறார் (யோவான் 1:18). அவர் (இயேசு) இல்லை யென்றால், நாம் தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை, மற்றும் நற்தன்மை ஆகியவற்றைப் புரிந்துகொள்ளாதிருப்போம். புதிய உடன்படிக்கைக்குரிய இயேசுவின் இரத்தத்தின் மூலமாக (மத்தேயு 26:28). தேவனுடைய இரக்கம் அறியப்பட்டுள்ளது. புதிய உடன்படிக்கையின்கீழ் இருப்பவர்களைப் பற்றி எரேமியா, "என்னை அறிந்து கொள்வார்கள் ... அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" என்று [கர்த்தர் கூறியதாக] எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார் (எரேமியா 31:34; எபிரெயர் 8:12ஐக் காணவும்). தேவன் நமக்கு அருளியுள்ள இரக்கம் நிறைந்த மீட்பில் நாம் அவரது இயல்பைக் காணுகிறோம் என்பது புதிய ஏற்பாட்டின்கீழ் உள்ளவர்கள் தேவனை அறிய அது கொண்டுவரும் வழிகளில் ஒன்றாகும். இதை அவர்*

இயேசுவின் மரணத்தின் மூலமாகக் கிடைக்கச் செய்தார். இயேசுவினுடைய இயல்பின் முழுமைத்தன்மை மூலமாக, அவர் தேவனுடைய மகத்தான பண்பின் சிறுகண்ணோக்கை நமக்குக் கொடுத்துள்ளார்.

நாம் தேவனை அறிவதினால், இந்த மாபெரும் பயபக்திக்குரிய மற்றும் ஆச்சரியம் நிறைந்த ஜீவியை எவ்வாறு [நமது வாழ்வில்] தொடர்பு படுத்துவது என்று கற்றுக்கொள்ள முடியும். நாம் ஒரு நபரைப் பற்றி அறியாதிருந்தால், அவரை எவ்வாறு மதித்து கனப்படுத்துவது என்பதை அறியாமல் இருப்போம். இதே விஷயம், நாம் தேவனை ஆராதித்தல் குறித்தும் உண்மையாக உள்ளது: நாம் அவரை அறியாதிருந்தால், அவரை எவ்வாறு ஆராதிப்பது என்பதை நம்மால் புரிந்துகொள்ள இயலாது.

## தேவன் யாராக இருக்கிறார் என்பதற்காகவே அவரை ஆராதித்தல்

நாம் தேவனை ஆராதிக்க நாடுகையில், அவரது இயல்பின் சில பண்புகளை நாம் விளங்கிக்கொள்வது நமக்கு முக்கியமானவைகளாக உள்ளன. நாம் அவரது பண்பைப் புரிந்துகொண்டால், நாம் அவரது இயல்பு மற்றும் மாபெரும் தன்மை ஆகியவற்றினால் அவர்மீது பயபக்தி கொள்வோம். இந்தக் காரணத்தினால், நாம் அவரை ஆராதிக்க விரும்புவோம்.

1. அவர் ஒரு ஆவியாக இருக்கிறார் (யோவான் 4:23, 24) மற்றும் அவர் பௌதீகரீதியான பொருளெதுவும் இல்லாதிருக்கிறார். அவர் மனிதக் கண்களால் காணப்பட முடியாதவராக இருக்கிறார் (கொலோசெயர் 1:15; 1 தீமோத்தேயு 6:16). தேவனை நாம் ஆராதிப்பதில், அவர் பௌதீகரீதியான பொருள் கொண்டவராக இருப்பது போன்று அவரை நாம் கண்ணோக்க முயற்சி செய்யக் கூடாது.

ஆவிக்குரிய கருத்தமைவில், காணப்பட இயலாததை நாம் காணுகிறோம். நாம் தேவனைத் தொடவோ, அவரைக் காணவோ, அல்லது அவர் கூறுவதைக் கேட்கவோ முடியாதிருப்பினும், தேவனுடைய பிரசன்னத்தை நாம் ஆவிக்குரிய வகையில் உணர்ந்தறிய முடியும். நடைமுறைக்கு உகந்த வகையில் கூறுவதென்றால், அவர் படைத்துள்ளவற்றில் அவரை நாம் காணவும் (ரோமர் 1:20), அவர் படைத்த அண்டம் மற்றும் மனிதனின் விஷயங்கள் ஆகியவற்றில் அவரது தொடர்ந்த இயக்கங்களை புரிந்துகொள்ளவும் நம்மால் முடியும்.

2. அவர் சிருஷ்டிகராகவும், இருக்கின்ற எல்லா உயிர்களுக்கும் மேலான நித்திய வல்லமை உடையவராகவும் (ரோமர் 1:20) இருக்கிறார். அவர் எல்லாருக்கும் மேலான தேவனாக இருக்கிறார் (எபேசியர் 4:6). இப்படிப்பட்ட வல்லமை பயபக்திக்குரியதாக இருக்கிறது. இந்த அண்டத்தின் விரிவளவு பற்றியும், அதற்குள் உள்ள சக்தியைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். தேவனுடன் ஒப்பிடுகையில், அவருடைய படைப்பு வலுவற்றதாகவும், எனவே அவரைச் சார்ந்திருப்பதாகவும் உள்ளது. தேவனுடைய படைப்பைக் கண்ணோக்குவதில், நாம் அவரது

மாபெரும் தன்மை பற்றிப் புரிந்துணரத் தொடங்க முடியும். எல்லாவற்றையும் படைத்த மாபெரும் ஜீவியுடன் ஒப்பிடுகையில் நமது பெலம் என்பது ஒன்றுமில்லை என்பதால், நாம் தேவனுடன் போட்டியிட இயலாது (1 கொரிந்தியர் 1:25ஆ). அவரது மாபெருந்தன்மையினிமித்தமாக, அவர் - நாம் கொண்டுள்ள மற்றும் அறிந்துள்ள எல்லாவற்றிற்கும் மேலாக - நமது மாபெரும் மதிப்பைப் பெறுவதற்குப் பாத்திரராக இருக்கிறார். படைக்கப்பட்டவற்றைத் தொழுதுகொள்வதற்கு மாறாக, நாம் நம்மைப் படைத்தவர் என்ற வகையில் அவரை [தேவனை] தொழுதுகொள்ள வேண்டும் (ரோமர் 1:25).

3. அவர் மிகமேன்மையான மதிநுட்பம் கொண்டுள்ளார், அது அவரது படைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பவுல் பின்வரும் ஒப்பீட்டை ஏற்படுத்தினார்: "தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 1:25அ). பெரும்பான்மையான சமூகங்களில், மிகமேன்மையான மதிநுட்பம் உடையவர்கள் உயர்வாக மதிக்கப்படுகின்றனர். மனிதகுலம் முழுவதும் கொண்டுள்ள யாவற்றையும் ஒன்றுகூட்டினாலும் அதற்கும் மேலானதாக உள்ள தேவனுடைய அளவற்ற ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றிற்காக, அவர் மதிக்கப்பட வேண்டியவராக இருக்கிறார்.

4. அவர் சகலத்தையும் அறிந்திருக்கிறார். தேவனுடைய இந்தப் பண்பைத் தாவீது, தேவன் நம்மை முற்றிலுமாக அறிந்துள்ளார் என்று எழுதுவதன்மூலம் விளக்கப்படுத்தினார். நாம் எங்கு இருந்தாலும், அவர் [தேவன்] எப்போதுமே நமது சிந்தனைகளை அறிகிறார் (சங்கீதம் 139:1-12). அவரை ஆராதிப்பதற்கான நமது மிக பெலவீனமான முயற்சிகளை அவர் அறிந்துள்ளார் என்று நாம் நிச்சயப்படுத்திக் கொண்டவர்களாக இருக்க முடியும். அவரது கவனத்திற்குத் தப்புவது எதுவுமில்லை (எபிரெயர் 4:13). சில வேளைகளில் மக்களை நாம் புகழ நாடினாலும், அவர்கள் நம்மைப் புறக்கணிக்கின்றனர். தேவனை ஆராதித்தல் என்பது வீணானதாக இருப்பதில்லை. அவர் நமது பௌதீகரீதியான நடவடிக்கைகளைக் கண்டு கேட்பது மட்டுமின்றி, ஆராதிக்கும் ஒவ்வொருவரின் இருதயத்திலும் இருப்பது என்ன என்பதையும் அறிந்து புரிந்துகொண்டுள்ளார்.

5. அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். " 'யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ?' என்று கர்த்தர் சொல்லுகிறார்; 'நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ?' என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 23:24). இந்தப் பண்பானது நாம் தனியாக இருப்பினும் அல்லது பெரிய அல்லது சிறிய கூட்டத்துடன் இருப்பினும், எந்த இடத்திலும் நம்மால் தேவனைத் தொழுதுகொள்ள முடியும் என்று சுட்டிக் காண்பிக்கிறது. "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:20).

தேவன் ஆவியாக இருப்பதால், ஒரே வேளையில் அவரது பிரசன்னம் எங்கும் இருப்பது சாத்தியமாக உள்ளது. இந்தப் பண்பினால் அவர் எல்லாம் அறிந்தவராக இருக்கிறார். அவர் நமது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்திலும்,

நாம் ஆராதிக்கும் வேளையிலும் நம்முடன் இருக்கிறார்.

6. அவர் அன்பும், பரிசுத்தமும், நற்குணமும், நீதியும், இரக்கமும், கிருபையும் உடையவராக இருக்கிறார். அவரது பண்பை விவரிப்பதற்கு மாபெரும் தனிப்பட்ட குணம் ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட முடியும். அவர் நீதியை நேசித்து அக்கிரமத்தை வெறுக்கிறார் (எபிரெயர் 1:9). அவரது பண்பு நம்மால் பாராட்டப்படத் தகுதியானதாக உள்ளது. நாம் தேவனைச் சார்ந்திருந்தது அவரிடமிருந்து நன்மை யான விஷயங்களை எதிர்பார்க்க முடியும் (யாக்கோபு 1:17). அவர் இருந்ததுபோலவே எப்போதும் இருப்பார்; ஏனெனில் அவர் தமது இயல்பில் மாறாதவராக இருக்கிறார் (மல்கியா 3:6).

அவரது நற்குணம் மற்றும் அன்பான இரக்கம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள, நாம் தகுதியற்றவர்களாக இருப்பினும் அவை நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆசீர்வாதங்கள் நாம் அவரை ஆராதிப்பதில் நமது நன்றியை வெளிப்படுத்தும்படி நம்மைத் தூண்ட வேண்டும்.

> அவர் வாசல்களில் துதியோடும்,
> அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து,
> அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்.
> கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்,
> அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது
> (சங்கீதம் 100:4, 5; 106:1; 107:1; 118:1, 29ஆகியவற்றையும் காணவும்).

7. அவர் கோபம், வெறுப்பு, புறக்கணித்துத் தள்ளுதல், பிரியமின்மை, மற்றும் உக்கிரமம் ஆகியவற்றின் தேவனாக இருக்கிறார். அவர் முற்றிலும் பரிசுத்தமானவராக இருப்பதால், பரிசுத்தமற்ற யாவும் அவரால் வெறுத்துத் தள்ளப்படக் கூடியதாக உள்ளது. அவர் நன்மையை நேசித்து தீமையை வெறுக்கிறார் (எபிரெயர் 1:9). அவர் துன்மார்க்கரையோ அல்லது அவர்களின் ஆராதனையையோ ஏற்றுக்கொள்ள மாட்டார். நாம் ஆராதனையில் பயன்படுத்தக்கூடிய விஷயங்கள் ஒவ்வொன்றும் தேவனுக்குப் பிரியமில்லாது இருக்கலாம் என்பதால், நமது ஆராதனை யானது வடிவத்திலும் கருப்பொருளிலும், அவரது சித்தத்திற்கு இசைந்த தாக இருக்க வேண்டும் என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அவர் பாராட்டத்தக்க ஒவ்வொரு பண்பையும், நீதிநெறியையும், இயல்பையும் கொண்டுள்ளார். அவருக்கு இணையாக அல்லது அவரைப் போன்று இருப்பவர் ஒருவரும் இல்லை (ஏசாயா 46:9). அவர் பரிசுத்தத்திலேயே மிகவும் பரிசுத்தமானவராக, பெரியவர்களிலேயே மகாப் பெரியவராக, மேன்மையானவர்களிலேயே மிகவும் மேன்மை யானவராக இருக்கிறார். அவர் எல்லார் மேலும் எல்லாருக்குள்ளும் இருக்கிறார் (எபேசியர் 4:6).

நாம் தேவனை அறிந்திருந்தால், அவரது மாபெரும் தன்மை குறித்து நாம் மனப்பதிவு பெற்று, பயபக்தியினால் தாக்கம் பெற்று, திகைப்

படைவோம். நாம் தேவனை எவ்வளவுக்கு அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நாம் அவரை ஆராதித்தல், வியப்படைதல், மற்றும் அவரை வழிபடுதல் ஆகியவற்றினால் நிறைந்திருப்போம்.

## தேவன் செய்கின்றவைகளுக்காக அவரை ஆராதித்தல்

தேவன் யாராக இருக்கிறார் என்பதற்காக மாத்திரமல்ல, ஆனால் அவர் செய்துள்ளவை, செய்கின்றவை, மற்றும் செய்யப்போகின்றவை ஆகியவற்றிற்காகவும் நாம் அவரை ஆராதிக்க வேண்டும். தேவனுடைய இந்தச் செயல்களைப் புரிந்து அறிந்துள்ள நிலையானது நாம் அவருக்கு நன்றிசெலுத்துதலிலும் ஆராதனையிலும் நமது பாராட்டை வெளிப்படுத்த நம்மைத் தூண்ட வேண்டும்.

தேவனுடைய செயல்கள் அவரைத் துதிக்கக் காரணமாகிறது என்று தாவீது கண்டறிந்தார். 106ம் சங்கீதத்தில் அவர் பின்வருமாறு எழுதினார்,

> *அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்;*
> *அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.*
> *கர்த்தருடைய வல்லமையான செய்கைகளைச் சொல்லி,*
> *அவருடைய துதியையெல்லாம் பிரஸ்தாபப்படுத்தத்தக்கவன் யார்?*
> *(வசனங்கள் 1, 2).*

இந்த அறிமுகத்தைத் தொடர்ந்து தாவீது இஸ்ரவேலைப் பாதுகாப்பதில் தேவனுடைய அக்கறை என்ற துதிக்கத்தக்க செயல்பாடுகள் மற்றும் அவர்களின் மீறுதலுக்காக அவர்களைத் தண்டிப்பதில், தேவனுடைய செயல்பாடுகள் ஆகியவற்றைத் திரும்பவும் நினைத்துப்பார்த்தார்.

> *அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ,*
> *அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி,*
> *அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து,*
> *தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தாபப்பட்டு*
> *(வசனங்கள் 44, 45).*

தாவீது, இஸ்ரவேலுடன் தேவன் செயல்பட்ட வழியைக் கண்ணோக்கி யதன் விளைவாகப் பின்வரும் முடிவுக்கு வந்தார்:

> *இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்*
> *அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்.*
> *ஜனங்களெல்லாரும்: ஆமென், அல்லேலூயா, என்பார்களாக*
> *(வசனம் 48).*

## தொகுப்புரை

தேவன்மீது கவனம்குவித்தல் என்பதே ஆராதனை எல்லாவற்றின் அடிப்படையாக உள்ளது; ஏனெனில் இந்த விஷயமின்றி, தேவன்

ஆராதிக்கப்படுவதில்லை. ஆவிக்குரிய நடவடிக்கைகள், மனிதரீதியான ஈடுபாடுகள், முறைப்படுத்தப்பட்ட செயல்வகைகள், மற்றும் தக்கவகையிலான நோக்கம் ஆகியவை ஆராதனைக்கு அத்தியாவசியமான உட்பொருட்களாக இருக்கின்றன, ஆனால் இவைகள் ஆராதனையின் மையமாக இருக்க வேண்டியதில்லை. இந்த இடத்தைத் தேவன் ஒருவர் மாத்திரமே நிரப்புகிறார்.

தேவனை ஆராதிப்பதில் சரியான எண்ணப்போக்கையும் நோக்கத்தையும் வளர்த்துக்கொள்வதற்கு நாம் தேவனை அவரது இயல்பின் முழுமைத் தன்மையில் அறிய வேண்டும். அவரை அறிவதன் மூலமாகவே நாம் அவரை மதிக்கவும் அவரது மாட்சிமை மற்றும் மாபெரும் தன்மை ஆகியவற்றிற்காக அவரை துதிக்கவும் வழிபடவும் கற்றுக்கொள்ள முடியும்.

---

குறிப்பு

[1]John E. Burkhart, *Worship* (Philadelphia: Westminster Press, 1982), 29-30.

# நியாயப்பிரமாணத்திற்கு முந்திய காலத்தில் ஆராதனை

தேவன் ஆராதனையைப் பற்றி ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வெளிப்படுத்தியது என்ன என்பதைப் பற்றி வேதாகமம் நமக்குத் தகவல் தருவதில்லை. அவர்கள் ஏதேன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப் பட்டது வரையில், அவர்கள் தேவனுடன் உரையாடவும் அவருக்கு ஆராதனையைத் தனிப்பட்ட வகையில் வெளிப்படுத்தவும் முடிந்திருந்த தாகக் காணப்படுகிறது. அவர்கள் தேவனை ஆராதித்தனரா அல்லது தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ அவர்கள் எவ்வாறு ஆராதித்தனர் என்பது வெளிப்படுத்தப்பட வில்லை.

காயீனும் ஆபேலும் தேவனை ஆராதித்த விஷயம்தான் ஆராதனை பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் விஷயமாகும் (ஆதியாகமம் 4:3-5அ). மோசேயின் பிரமாணத்தின்கீழ் தேவன் தானியப் பலிகளை ஏற்றுக்கொண்ட காரணத்தினால், காயீன் எதை அளித்தான் என்பதல்ல, ஆனால் அவன் தனது காணிக்கையைக் கொடுக்கையில் அவனது எண்ணப்போக்குதான் பிரச்சனையாக இருந்ததென்று சிலர் கருதியிருக்கின்றனர்.

> விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமா னென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் (எபிரெயர் 11:4).

ஆபேலின் பலி "விசுவாசத்தினால்" செலுத்தப்பட்டது, இது காயீனின் பலி விசுவாசத்தினால் செலுத்தப்படவில்லை என்று மறைமுக மாய் உணர்த்துவதாக இருக்க வேண்டும். தேவன் காயீனுக்கும் மற்றும் ஆபேலுக்கும் நேரடியாகவோ அல்லது ஆதாம் மூலமாகவோ, எதைப் பலியாகச் செலுத்த வேண்டும் மற்றும் அந்தப் பலியை எவ்வாறு தயாரிக்க வேண்டும் என்று வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆபேல் ஒரு மிருகத்தை மட்டுமல்ல, ஆனால் அவர் தமது மந்தையில் இருந்தவற்றில் கொழுத்ததும் தலையீற்றுமான மிருகத்தைப் பலியாகச் செலுத்தினார் (ஆதியாகமம் 4:4). இதைச் செய்ததில், அவர் தாம் நீதிமான் என்ற சாட்சியத்தைப் பெற்றார் (எபிரெயர் 11:4).

"தன் [காயீனின்] கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனு

டைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்தது'' என்று யோவான் எழுதினார் (1 யோவான் 3:12ஆ). தேவன் கேட்பவைகளை விசுவாசத்தினாலே செய்தல் என்பது செய்வதற்கு நீதியுள்ளதாக இருக்கிறது. இதைத்தான் ஆபேல் செய்தார். தேவனிடத்தில் இருந்து அதிகாரம் பெற்றிராதவற்றைச் செய்தல் துன்மார்க்கமாக உள்ளது. இதைத்தான் காயீன் செய்தான், எனவே அவன் செயல்கள் பொல்லாதவைகளாக இருந்தன.

காயீனும் ஆபேலும் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தினர் (ஆதியாகமம் 4:3, 4). அவர்கள் இருவருமே தங்களுடைய பலிகளைச் செலுத்துவதினால் தேவனை ஆராதிக்க நாடினர். தேவன் ஆராதனையை மாத்திரமல்ல, ஆனால் தமக்குப் பிரியமான வகையிலான ஆராதனையைக் கேட்கிறார் என்பது தெளிவு.

ஆதியாகமம் பலிசெலுத்துதலுக்கான பீடங்களைக் கட்டுதல் பற்றிக் குறிப்பிடுகிறது, ஆனால் அவற்றின்மீது பலிசெலுத்தப்பட்டது என்ன என்பதை அப்புத்தகம் எப்போதுமே வெளிப்படுத்துவதில்லை (ஆதியாகமம் 12:7, 8 [13:4ஐக் காணவும்]; 13:18; 26:25; 33:20; 35:1-3, 7). பலியின் இயல்பு எடுத்துரைக்கப்படுகிறபோது, நியாயப்பிரமாணம் தரப்படுவதற்கு முன்பு மிருகங்கள் மாத்திரமே பலிசெலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (ஆதியாகமம் 8:20; 22:9-13). இந்த உண்மைகளின் அடிப்படையில், தேவன் ஆபேலினால் செலுத்தப்பட்ட மிருகபலியைக் கேட்டார், ஆனால் அவர் காயீனால் செலுத்தப்பட்ட போஜன (கனிகளின்) பலியை விரும்பவில்லை என்று முடிவு செய்வதில் நாம் சரியாக இருக்கலாம்.

காயீன் மற்றும் ஆபேல் ஆகியோருக்குப் பின்பு, நோவா ஜலப்பிரளயத்துக்குப் பிற்பாடு பலிசெலுத்திய நிகழ்ச்சி வரையிலும், ஆராதனையின் இயல்பை வெளிப்படுத்த ஏதொன்றும் உரைக்கப்படவில்லை. சேத்தின் சந்ததியார் "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள" தொடங்கினர் என்பதால் (ஆதியாகமம் 4:26ஆ), அவர்கள் தேவனை ஆராதிக்கத் தொடங்கினர் என்று நாம் யூகிக்க முடிகிறது. ஏனோக்கு நிச்சயமாகவே தேவனை ஆராதித்தார், ஏனெனில் அவர் "தேவனோடே சஞ்சரித்தார்" (ஆதியாகமம் 5:24). தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பூமியின் மக்கள் மிகவும் பொல்லாதவர்கள் ஆயினர், ஆனால் நோவாவுக்குத் தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதியாகமம் 6:5, 8).

நோவா பேழையைக் கட்டியதில் தம்மிடம் தேவன் கூறியிருந்தபடியெல்லாம் செய்ததன்மூலம், தேவன்மீது தாம் கொண்டிருந்த விசுவாசத்தைக் காண்பித்தார் (எபிரெயர் 11:7). நீதியுள்ள இந்த மனிதர் பேழையை விட்டு வெளியேறியவுடன் தமது முதல் செயலாக பலிசெலுத்தினார் என்பதால், ஆராதனை என்பது இவருக்கு முன்னுரிமையான செயலாக இருந்தது என்று நாம் யூகிக்க முடிகிறது (ஆதியாகமம் 8:20). அவரது பலியானது, அவரையும் அவரது குடும்பத்தையும், பெருவெள்ளத்தின் பயங்கரமான அழிவில் இருந்து பாதுகாப்பாக வழிநடத்திக் கொண்டு வந்திருந்த தேவன்மீது நன்றியறிதல் கொண்ட இருதயத்தில் இருந்து அளிக்கப்பட்டது. அவர் செலுத்திய பலிகள், தேவன் விரும்பியவற்றிற்கு விசுவாச நிறைவில் கீழ்ப்படிதலின் அடிப்படையில் அமைந்திருந்தன

என்றும் நாம் யூகிக்க முடிகிறது. தகனபலிகளை "சுகந்த வாசனையாக" தேவன் முகர்ந்தார் (ஆதியாகமம் 8:21), இது நோவாவின் பலியில் தேவன் பிரியமாயிருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பித்தலாக உள்ளது.

ஆபிரகாம் பலிபீடங்களைக் கட்டினார் என்பது வேறெவரைக் காட்டிலும் அதிகமான முறைகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆபிரகாம் தேவனுடன் நெருங்கியிருந்தார் மற்றும் அவர் எல்லா இடங்களிலும் தேவனை ஆராதிக்க நாடினார் என்று சுட்டிக்காண்பிக்கிறது. எழுதப்பட்ட வசனங்கள் எதுவும், அவர் ஒரே ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தும்படி பலிபீடங்களைக் கட்டினார் என்று மறைமுகமாக உணர்த்துவதில்லை. அவற்றை அவர் பெரும்பாலும், திரும்பத் திரும்பப் பயன்படுத்தி இருப்பார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் பலிபீடங் களைக் கட்டியது, அவரைப் பொறுத்தமட்டில் தேவனை ஆராதித்தல் என்பது முன்னுரிமையுள்ள விஷயமாக இருந்ததை மறைமுகமாக உணர்த்துகிறது.

ஈசாக்கும் மற்றும் யாக்கோபும்கூட தங்கள் முற்பிதாவான ஆபிரகாமின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து, பலிபீடங்களைக் கட்டினர். ஆபிரகாம் தமது பிள்ளைகளுக்கு, கர்த்தருடைய வழிகளைப் பின்பற்றும்படி கட்டளையிடுவார் என்று தேவன் உரைத்தார் (ஆதியாகமம் 18:19). தேவன்மீது ஆபிரகாம் கொண்டிருந்த பயபக்தியானது அவரது சந்ததியார்களிடத்தில் செல்வாக்குச் செலுத்திற்று.

நியாயப்பிரமாணம் தரப்படுவதற்கு முன்பு, பலிபீடங்கள் மாத்திரம் ஆராதனையில் உதவிசெய்பவைகளாக இருக்கவில்லை. ஆன்ட்ரூ ஹில் என்பவர் பின்வரும் விஷயங்களைச்சுட்டிக்காண்பித்தார்,

> ... கற்தூண்களை நிறுவுதல் மற்றும் பானபலியை (பலிசெலுத்தப்படும் திரவம் அல்லது பான பலி, 28:18, 22; 35:14) ஊற்றுதல், தெய்வீக வெளிப்பாட்டிற்குப் பதில்செயலாக வாக்குறுதி மேற்கொள்ளுதல் (28:20; 31:13), தேவனைச் சந்திக்கத் தயார்செய்வதில் சடங்காச்சாரத் தூய்மைப்படுத்துதல் (35:2), கீழ்ப்படிதலின் உடன்படிக்கையின் அடையாளமாக விருத்தசேதனத்தின் சடங்கு (17:9-14), மற்றும் துதித்தல், நன்றிசெலுத்துதல் ஆகியவற்றின் ஜெபங்கள் (12:8; 13:4), வேண்டுகோள் (24:12; 25:21), மற்றும் பரிந்துபேசும் ஜெபம் (18:22-33; 20:7) ஆகியவை உட்பட, முற்பிதாக்களின் ஆராதனையினுடைய மற்ற பல வெளிப்பாடுகளை ஆதியாகமம் விவரிக்கிறது.[1]

மெல்கிசேதேக்கு என்ற ஒருவர் மாத்திரமே நியாயப்பிரமாணத்திற்கு முற்பட்ட காலத்தில் தேவனுடைய ஆசாரியராகக் குறிப்பிடப்பட்டுள்ளார் (ஆதியாகமம் 14:18-20; எபிரெயர் 5:6). மற்றபடி, ஆசாரியர்களாயிராத ஆனால் குடும்பத்தின் தலைவர்களாயிருந்த ஆண்கள் பலிகளைச் செலுத்தியவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். யோபு தமது குடும்பத்தின் சார்பாகப் பலிகளைச் செலுத்தினார், மற்றும் அவரது நண்பர்கள் பலிகளைச் செலுத்தினர் (யோபு 1:5; 42:7-9).

# தொகுப்புரை

*மிகவும் முற்காலங்களில் இருந்தே, மனிதகுலம் தங்களுக்குத் தேவன் செய்திருந்தவற்றிற்குப் பாராட்டுதலாக அவருக்குக் கொடைகளை முன்வைப்பதன் அவசியத்தை உணர்ந்து அறிந்திருந்தது. நியாயப்பிரம ா ணத்திற்கு முற்பட்ட காலத்தின்போது தேவனை ஆராதித்தல் என்பது தேவனையும் அவரது பலத்த செயல்களையும் பாராட்டுதலின் அடிப்படையில் இருந்தது. இந்தக் காலகட்டத்தில், பலிபீடங்களின்மீது பலிசெலுத்துதல் என்பது முதன்மையான ஆராதனையாக இருந்தாலும், தேவனே ஆராதனையின் கருப்பொருளாக இருந்தார். அவர் பெரியவராக, நல்லவராக, மற்றும் தேவனாக இருப்பதற்காக மதிக்கப்பட்டு, வழிபடப் பட்டு, நாடப்பட்டு துதிக்கப்பட்டார். ஆராதனை என்பது தேவனை, தேவனுக்காக, தேவனால் கற்பித்தபடியே செய்யப்படுவதாக இருந்தது. ஆராதனையின் வரைபடங்களோ அல்லது உருவங்களோ பயன்படுத்தப் படவில்லை; தேவன் மாத்திரமே ஆராதனையின் மையமாக இருந்தார்.*

---

*குறிப்பு*

[1]Andrew E. Hill, *Enter His Courts with Praise!* (Grand Rapids, Mich.: Baker Book House, 1993), 33. *ஒருவேளை ஹில் என்பவர் விருத்தசேதனத்தைத் தேவனை ஆராதிப்பதில் உள்ளடக்கியிருக்கக்கூடாது. எஜமானருக்கு அடிமையின் கீழ்ப்படிதல் என்பது எஜமானரை அவர் தொழுதுகொள்வதில் இருந்து ஒருவரால் வித்தியாசப்படுத்தப்படுவது போன்றே, கீழ்ப்படிதல் மற்றும் தேவனை ஆராதித்தல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு வித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டும்.*

# நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆராதனை, 1 (சாலொமோன் முதல் மோசே வரை)

*தேவன் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து வழிநடத்தியபோது, அவர்களை அவர் தமது சொந்த ஜனங்கள் என்று அறிவித்து, தாம் அவர்களின் தேவனாக இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் (யாத்திராகமம் 6:7). சீனாய் மலையில் அவர் ஒரு உடன்படிக்கையை அவர்களுடன் ஏற்படுத்தித் தமது நியாயப்பிரமாணத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.*

## ஆராதனைக்கான சட்டங்கள்

மிருகபலி போன்ற நியாயப்பிரமாணத்திற்கு முந்திய சில நடைமுறைகள் நியாயப்பிரமாணத்தில் உள்ளடக்கப்பட்டபோதிலும், நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆராதனை என்பது அதிகம் கண்டிப்புடன் முறைப்படுத்தப்பட்டிருந்தது. செயல்முறைகள் விவரமாக எடுத்துரைக்கப் பட்டன. இஸ்ரவேலின் சபைகூடுகைகளில் பாடுதல் அல்லது ஜெபங்கள் உட்பட்டவை பற்றி எதுவும் கூறப்படவில்லை, ஆனால் ஒவ்வொரு ஏழாம் ஆண்டிலும் கூடாரப்பண்டிகையின்போது நியாயப்பிரமாணம் சபையாருக்கு வாசிக்கப்பட வேண்டியதாக இருந்தது (உபாகமம் 31:10-13). பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவனுடைய வசனங்களைத் தங்கள் இல்லங்களிலும் வழியில் நடக்கையிலும் போதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர் (உபாகமம் 6:6, 7).

மோசேயின் மூலமாகத் தேவன் வெளிப்படுத்திய ஆராதனை பற்றிய விவரங்களுக்குப் பின்வருவது நல்லதொரு தொகுப்புரையாக இருக்கிறது:

> *(1) ஜெபங்கள், காணிக்கைகள், மற்றும் ஆசரிப்புகள் போன்ற ஒவ்வொரு விஷயமும் குறிப்பிடப்பட்டன. (2) மக்களின் உயிருக்கு அடையாளமாக இருந்த இரத்தம் உள்ள ஒரு பலி அமைவைச் சுற்றி ஆராதனை என்பது பெரும்பான்மையும் கட்டியெழுப்பட்டிருந்தது. (3) எபிரெய ஆண்டுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது. (4) இந்த அமைப்பில் ஆசாரியர் முக்கியமான பகுதியை நிகழ்த்தினார், ஏனெனில் அவர் பலிகள் செலுத்தப்படுதலை நாடகத்துவமாக்கினார். (5) ஆராதிக்கும் இடம் தேவனுடைய பிரசன்னத்தை*

அடையாளப்படுத்தியதால் அது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. (6) பண்டிகைகள், அதிலும் குறிப்பாக பஸ்கா, பெந்தெகொஸ்தே, எக்காளங்கள், பாவப்பரிகாரம், மற்றும் ஆசரிப்புக்கூடாரங்கள் என்ற பண்டிகைகளுக்கு மாபெரும் வலியுறுத்தம் இருந்தது.[1]

ஓய்வு நாள் என்பது ஆராதனைக்கு விசேஷித்த நாளாக இருக்கவில்லை, ஆனால் அது ஒரு ஓய்வுநாளாக இருந்தது. ஒவ்வொரு வாரத்தின் ஏழாம் நாளும், இஸ்ரவேல் மக்கள் வேலைசெய்வதை விட்டொழித்து, தங்களைத் தேவன் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து விடுவித்ததை நினைவுகூர வேண்டியிருந்தது (உபாகமம் 5:12-15).

## ஆராதனைக்கான கருப்பொருள்

இஸ்ரவேல் மக்களை வழிநடத்த மோசேயை ஆயத்தப்படுத்தியதில், தேவன் தமது இயல்பின் மகத்துவமான பயங்கரத்தன்மையுடன் மோசேக்கு எதிர்கொண்டு வந்ததினால் தமது மாபெரும்தன்மையை அவரது மனதில் பதியவைத்தார். அவரை அடிமைத்தளையில் இருந்த இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும்படி அனுப்புவதற்கு முன்பு, அவருக்குத் தேவன் எரியும் முட்புதரில் தரிசனமானார். தேவன் தம்மை YEHWEH, அதாவது "இருக்கிறவர்" (யாத்திராகமம் 3:14) என்று வெளிப்படுத்தினார், இதில் இருந்துதான் - நித்தியமான, சுயத்தில் [யாவற்றையும்] கொண்டுள்ள, சகலமும் போதுமான, மற்றும் வேறு எவரையும் சார்ந்திராத ஒருவரா யிருக்கிற என்ற அர்த்தமுடைய - Yahweh என்ற தேவனுடைய பெயர் தரவழைக்கப்பட்டுள்ளது. அவர் தமக்கு அளிப்பதற்கு எவரொருவரும் தேவையற்ற வகையில் உள்ள அளிப்பவராகவும், தமக்கு உதவுவதற்கு எவரொருவரும் தேவையற்ற வகையில் உள்ள உதவுபவராகவும், தம்மை விடுவிப்பதற்கு எவரொருவரும் தேவையற்ற வகையில் உள்ள விடுவிப்பாள ராகவும், தமக்கு அறிவுறுத்துவதற்கு எவரொருவரும் தேவையற்ற வகையில் உள்ள சகலமும்-அறிந்தவராகவும் தம்மை பெலப்படுத்துவதற்கு, அல்லது சக்தியூட்டுவதற்கு எவரொருவரும் தேவையற்ற வகையில் உள்ள சர்வவல்லமை நிறைந்தவராகவும் இருக்கிறார். அவரது பரிசுத்த நாமம் இஸ்ரவேல் மக்களால் மதிக்கப்படவும் கனப்படுத்தப்படவும் வேண்டியதாக இருந்தது.

தேவன் தமது படைப்பைக் கடந்து நிற்பதாலும், அவர் பௌதீகரீதியான இயல்பு கொண்டிருப்பதில்லை என்பதாலும், மக்கள் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்த சொரூபங்களை ஏற்படுத்தவோ, அல்லது அப்படிப்பட்ட சொரூபங்களை ஆராதிக்கவோ கூடாதிருந்தது (யாத்திராகமம் 20:3-5; உபாகமம் 5:7-9). மோசே பின்வருமாறு எடுத்துரைத்தார்,

கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண்

*உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும் [எச்சரிக்கையாயிருங்கள்] (உபாகமம் 4:15-18).*

*ஆராதிப்பவருக்கு மரியாளின் மனிதத்துவத்தை விவரிக்கவும், இயேசு மனித உடலில் இருந்தபோது அவரது வாழ்வின் பல்வேறு அம்சங்களின் சித்தரிப்புகளையும் விவரிக்கப் பயன்படுத்தப்படும் சொரூபங்களும் சிலைகளும், மேற்கூறப்பட்ட போதனையை மீறுகின்றன. அப்படிப்பட்ட சொரூபங்கள் மற்றும் சிலைகளுக்கு முன்னால் பணிந்துகொள்பவர்கள் மனித வடிவங்களை ஆராதிக்கின்றனர். இது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இயேசு தமது ஆவிக்குரிய மகிமையுள்ள இயல்புக்குத் திரும்பியிருக்கிறார் (யோவான் 17:5; பிலிப்பியர் 3:21), எனவே அவர் இனியும் மனித உடல் எதையும் கொண்டிருப்பதில்லை. நாம் இயேசு தமது திருஅவதாரத்தின்போது மேற் கொண்டிருந்த மனித இயல்பையல்ல, ஆனால் அவருடைய தெய்வீக இயல்பையே ஆராதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.*

*நியாயப்பிரமாணத்தின்கீழ், தேவன் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டியவராக இருந்தார் (உபாகமம் 6:14, 15). அவர் தமக்கு இஸ்ரவேல் மக்கள் அளிக்க வேண்டிய ஆராதனையைப் பற்றிய ஒவ்வொரு அம்சத்திற்கும் குறிப்பான அறிவுறுத்தல்களைக் கொடுத்தார், அவர்கள் சொந்த முடிவுக்கென்று அவர் ஏதொன்றையும் விட்டுவைக்கா திருந்தார். அவர்கள் அவரது சித்தத்தின்படியும், அவரால் விரும்பப்பட்ட வகையிலும் இடத்திலும் அவரை ஆராதிக்க வேண்டியிருந்தது.*

*ஆராதனையின் வடிவங்கள் அல்லது ஊடகங்கள் என்பவை, மிருக மற்றும் போஜன பலிகள் மற்றும் காணிக்கைகளின் குறிப்பிட்ட வகைகள் (லேவியராகமம் 1-7ன் தகன, போஜன, சமாதான, பாவ, மற்றும் குற்ற நிவாரண பலிகள்), சடங்காச்சார சுத்திகரிப்பு (உபாகமம் 21:6), ஜெபம் (யாத்திராகமம் 30:7-10), தேவனுடைய வசனங்களில் அறிவுறுத்துதல் மற்றும் அவற்றை வாசித்தல் (லேவியராகமம் 10:11; உபாகமம் 6:4-9), மற்றும் கர்த்தருக்குத் தசமபாகமும் காணிக்கையும் கொடுத்தல் (எண்ணாகமம் 18:21-24) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. தேவனால் ஏற்படுத்தப்பட்ட எபிரெயரின் முறையான ஆராதனை அமைப்புக்கள், ஆசரிப்புக்கூடாரம் அல்லது சபை கூடிவரும் கூடாரம் மற்றும் லேவிய ஆசாரியத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன (யாத்திராகமம் 29:1-9; 35:1-19).*[2]

## ஆராதனைக்கான இடம்

*நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆராதனையானது முதலில் ஆசரிப்புக் கூடாரத்துடனும், பின்பு அதைப்போல் இருமடங்கு அளவில் இருந்த*

தேவாலயத்துடனும் இணைவுகொண்டிருந்தது. அது இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. "பரிசுத்த ஸ்தலம்" என்ற இடத்தில் தேவசமூகத்து அப்பங்களின் மேஜையும்,[3] தூபப்பீடமும், பொன் குத்துவிளக்குகளும் இருந்தன. "மகாப்பரிசுத்த ஸ்தலம்" என்ற இடத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருந்தது, அங்கு தேவன் தமது பிரசன்னம் காணப்படும் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். பத்துகட்டளைகள் என்ற உடன்படிக்கை யானது உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தது (உபாகமம் 10:4, 5; 1 இராஜாக்கள் 8:9, 21).

ஆசரிப்புக்கூடாரம் முதலில் சீனாய் மலையில் அமைக்கப்பட்டது (யாத்திராகமம் 40:2, 17; எண்ணாகமம் 10:11, 12). வனாந்தர யாத்திரையின் போது அந்தக் கூடாரம், இஸ்ரவேல் மக்கள் சென்ற இடங்களுக்கெல் லாம் தூக்கிச் செல்லப்பட்டது. அதை யோசுவா இஸ்ரவேல் மக்கள் முகாமிட்டிருந்த கில்கால் (யோசுவா 4:19) என்ற இடத்திற்கும், பின்பு ஏபேல் மலைக்கு அருகில் இருந்த ஒரு இடத்திற்கும் (யோசுவா 8:30-35) கொண்டுவந்தார் என்று நினைக்கப்படுகிறது. நியாயாபதிபதிகளின் நாட்களில், அது எப்பிராயீமின் சீலோ என்ற இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, சவுலின் ஆட்சிக்காலம் வரையில் அங்கேயே வைக்கப் பட்டிருந்தது. நோப் என்ற இடத்தில் ஆசாரியர்கள் வாழ்ந்திருந்ததால் (1 சாமுவேல் 22:11), அவ்விடத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டு, பின்பு கிபியோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது (1 நாளாகமம் 16:39) என்று சிலர் முடிவு செய்துள்ளனர்.

இஸ்ரவேல் மக்கள் எவ்விடத்தில் ஆராதிக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணம் குறிப்பிடவில்லை, ஆனால் மக்கள் பிற்பாடு தேவன் தேர்ந்துகொள்ளும் இடத்தில் அவரைத் தேடவேண்டும் என்று மாத்திரம் உரைத்திருந்தது. "உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி, உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கேபோய்" (உபாகமம் 12:5). இஸ்ரவேல் மக்கள் விக்கிரகாராதனைக்காரர்களின் இடங்களில் அவர்களுடன் ஆராதியாதிருக்கும்படிக்குத் தேவன் குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்துகொண்டிருந்தார் (உபாகமம் 12:2-4). அவர்களின் ஆராதனை இடம், தாம் தேர்ந்துகொள்ளும் இடமாயிருக்க வேண்டும் என்று அவர் எண்ணற்ற முறைகள் திரும்பத் திரும்பக் கூறியிருந்தார் (உபாகமம் 12:11-26; 14:23-25; 15:20; 16:2-16; 23:16; 26:2).

இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் திரிந்த வேளையிலும், நியாயாதிபதிகளால் நானூறுக்கும் அதிகமான ஆண்டுகள் ஆளப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலும் (நடபடிகள் 13:20), அவர்கள் பல்வேறு இடங்களில் ஆராதித்து வந்தனர். கடைசியில், தாவீதின் ஆளுகையின்போது, எருசலேம் நகரம் உடன்படிக்கைப் பெட்டி இருக்குமிடமும் (2 சாமுவேல் 6:16, 17) இஸ்ரவேல் மக்கள் ஆராதிக்கும் இடமும் ஆயிற்று. சாலொமோன் தேவாலயத்தைக் கட்டிமுடித்தபோது, பெட்டி அதில் வைக்கப்பட்டது. எருசலேம் நகரம் தேவனுடைய நாமம் தரிப்பிக்கப்பட்ட இடம் என்றும் (1 இராஜாக்கள் 8:29, 44, 48) எருசலேமில்

*இருந்த தேவாலயத்தில் இஸ்ரவேல் மக்கள் ஜெபித்து வேண்டுதல் செய்ய வேண்டும் என்றும் (1 இராஜாக்கள் 8:33) சாலொமோன் உரைத்தார். பயணப்பட்டு வரமுடியாத தொலைவில் வாழ்ந்திருந்தவர்கள் ஜெபிப்பதற்குத் தேவாலயத்தை நோக்கி ஜெபிக்க வேண்டியதாக இருந்தது (1 இராஜாக்கள் 8:38, 42, 44, 48).*

*இஸ்ரவேல் மக்கள் ஆராதித்த இடமான தேவாலயம், கி.மு. 586ல் அழிக்கப்பட்ட பின்பு, யூத ஜெபஆலயங்கள் இஸ்ரவேல் மக்களின் ஆராதனைக்கென்று மேம்படுத்தப்பட்டன. வேதவசனங்களை வாசிப்ப தற்கும் பொருள்விளக்கிக் கூறுவதற்கும் மக்கள் கூடிவருவதற்காக ஜெபஆலயங்கள் நிலைநாட்டப்பட்டன. ஜெபஆலயக் கூடுகைகள் வழக்கமாகப் பின்வரும் செயல்களுக்கானவைகளாக இருந்தன:*

> *(1) வேதவசனங்களை வாசித்தல் மற்றும் அவற்றிற்குப் பொருள் விளக்குதல்; (2) ஷேமா என்ற யூத மதச்சட்டங்களை ஒப்புவித்தல் (உபாகமம் 6:4); (3) சங்கீதங்கள், பத்துக்கட்டளைகள், ஆசீர்வாதம், மற்றும் ஆமென் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்; (4) ஜெபங்கள்; மற்றும் (5) யூதத்துவ கேதுஷா* [*Kedushah*], *அல்லது பரிசுத்தமாக்குதலின் ஜெபம், இது கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் trisagion ("பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்") என்பதாயிற்று.*[4]

## தொகுப்புரை

*நியாயப்பிரமாணத்தின்கீழ் தேவன் வெளிப்படுத்திய ஆராதனை முறைமையானது, பெரும்பாலும் ஆரோனின் சந்ததியாரான ஆசாரியர் களால் செலுத்தப்பட வேண்டியதாயிருந்த காணிக்கைகள் மற்றும் பலிகளைக் கொண்டதாக இருந்தது. லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைக் கவனித்துக் கொண்டனர். தேவனை இஸ்ரவேல் மக்கள் ஆராதித்தல் என்பது ஆராதிப்பதற்கான மைய இடம் என்ற வகையில் ஆசரிப்புக்கூடாரத்தையும், பிற்பாடு எருசலேமில் இருந்த தேவாலயத்தையும் சுற்றிக் கட்டியெழுப்பப் பட்டிருந்தது.*

---

*குறிப்புகள்*

[1]Franklin M. Segler, *Understanding, Preparing for, and Practicing Christian Worship*, 2d ed., rev. Randall Bradley (Nashville: Broadman and Holman, 1996), 23. [2]Andrew E. Hill, *Enter His Courts with Praise!* (Grand Rapids, Mich.: Baker Book House, 1993), 37. [3]NASB *வேதாகமத்தில் யாத்திராகமம் 25:30ல்,* "table of showbread" *என்பதற்குப் பதிலாக* "bread of the Presence on the table" *என்றுள்ளது.* [4]W. O. E. Oesterley, "Pre-Christian Elements," *The Jewish Background of the Christian Liturgy* (Oxford: Clarendon Press, 1925), 36-82, cited in Segler, 23.

# 4

# நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆராதனை, 2

## [சாலொமோன் முதல் மல்கியா வரை]

*இஸ்ரவேல் மக்களுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை, அவர்களுக்கு வேறே தேவர்கள் இருக்கக்கூடாது என்பதை எடுத்துரைத்தது; மற்றும் அவர்கள் சொரூபங்களை ஏற்படுத்தவோ அல்லது அவற்றை ஆராதிக்கவோ கூடாது என்றும் உரைத்தது (உபாகமம் 4:15-18; 5:7-9). முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் விக்கிரக ஆராதனைக்காரர்களாகச் சித்தரிக்கப்பட்டு இருப்பதில்லை. அவர்களின் சந்ததியார் எகிப்தில் அடிமைத்தளையில் அகப்பட்டிருக்கையில், விக்கிரக ஆராதனையில் ஈடுபாடு கொண்டிருந்திருக்கலாம். மோசே சீனாய் மலையில் இருக்கையில் அவர்கள் ஆரோனால் செய்யப்பட்ட பொன் கன்றுக்குட்டியைத் தொழுதுகொண்டிருந்தனர் (யாத்திராகமம் 32:4). இதைத் தொடர்ந்து, குறைந்தபட்சம் சில இஸ்ரவேல் மக்களாவது, வனாந்தரத்தில் இருந்த வேளையிலும் (ஆமோஸ் 5:25, 26; 1 சாமுவேல் 8:8), யோசுவா அவர்களின் நடத்துனராக இருந்த வேளையிலும் (யோசுவா 24:20, 23) விக்கிரக ஆராதனையை நடப்பித்து வந்தனர். நியாயாதிபதிகளின் நாட்களில் இஸ்ரவேல் மக்கள் விக்கிரகங்களை அதிகமாக ஆராதிப்பவர்களாயினர் (நியாயாதிபதிகள் 2:11-19; 3:19; 10:6; 17:4, 5). இஸ்ரவேலர்கள் தங்களின் அந்நியத் தெய்வங்களைத் தங்களைவிட்டு அகற்ற வேண்டும் என்று சாமுவேல் கேட்டுக்கொண்டார் (1 சாமுவேல் 7:3). இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்திற்குள் வந்த பின்பு விக்கிரக ஆராதனை அவர்களுக்குள் விரைவாகப் பரவியதாகக் காணப்படுகிறது.*

*சாலொமோனின் ஆட்சியினுடைய முடிவுக்காலத்திற்கு அண்மையில், அவரது மனைவிகள் தேவனுடைய ஆராதனையில் விக்கிரகங்களைச் சேர்த்துக்கொள்ளும்படி அவர்மீது செல்வாக்குச் செலுத்தினர் (1 இராஜாக்கள் 11:3-5). யெரொபெயாம், வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் மக்கள் ஆராதிப்பதற்காக இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை உருவாக்கினர். அவர்கள் எருசலேமுக்குச் சென்றால், தெற்கு ராஜ்யமான யூதாவுடன் இணைந்துவிடுவார்களோ என்ற பயத்தினால் அவர் இதைச் செய்தார் (1 இராஜாக்கள் 12:26-33), அந்த ராஜ்யம் தாவீதின் சந்ததியாரால் ஆளப்பட்டுக்கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்து விக்கிரக ஆராதனை இஸ்ரவேல் நாட்டில் முக்கியத்துவமான இடத்தைப் பிடித்தது*

*மற்றும் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்பு யூதேயாவிலும் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டது. விக்கிரக ஆராதனையைக் கண்டனம் செய்வதற்கும் மக்கள் நியாயப்பிரமாணத்தின்படி தேவனுக்கு உண்மையாக ஆராதனை செலுத்த அழைப்பதற்கும் தேவன் தீர்க்கதரிசிகளை எழுப்பினார்.*

## பெரிய தீர்க்கதரிசிகளும் ஆராதனையும்

*ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், மற்றும் தானியேல் ஆகியோர் என்ற தீர்க்கதரிசிகள் மற்ற சிறிய இலக்கியத் தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் அதிகமானவற்றை எழுதியபடியால் அவர்கள் பெரிய தீர்க்கதரிசிகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் யூதா நாடு பாபிலோனிய முற்றுகையினால் சூழப்பட்டிருந்த வேளையில் அதற்கு [யூதாவுக்கு] தீர்க்கதரிசனம் உரைத்தனர்.*

*ஏசாயா. ஏசாயா மிகவும் முற்காலத்துப் பெரியதீர்க்கதரிசியாக இருந்தார். பாவம் நிறைந்த வாழ்வு என்பது தேவனை ஆராதிக்க அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிராத எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருந்ததாக அவர் போதித்தார். தேவன் தமக்குச் சரியான ஆராதனை ஏறெடுக்கப்பட வேண்டும் என்பதை மாத்திரமல்ல, ஆனால் நீதியுள்ள வாழ்வையும் விரும்பினார் என்று ஏசாயா வெளிப்படுத்தினார். பரிசுத்தமற்ற ஆராதனையில் தேவன் பிரியமற்று இருந்தார் என்பது, ஏசாயா இஸ்ரவேலை தேவன் அழித்திருந்த துன்மார்க்கமான நகரங்களுடன் ஒப்பிடுவதில் பயன்படுத்திய கடுமையான மொழிநடையில் காணப்படுகிறது (ஏசாயா 1:10ஐக் காணவும்). அவர்களின் ஆராதனை முயற்சிகளைப் பற்றி ஏசாயா பின்வருமாறு எழுதினார்,*

> *அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன்.*
> *நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும்,*
> *என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்;*
> *நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்;*
> *உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது*
> *(ஏசாயா 1:14இ, 15).*

*நீதியுள்ளவர்களின் பலிகளில் தேவன் பிரியமாயிருக்கிறார் (ஏசாயா 56:7). அவர் தமது மக்கள் தீமை செய்வதை விட்டொழித்து, நன்மையையும், நீதியையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், தேவையில் உள்ளவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் விரும்பினார் (ஏசாயா 1:16, 17). தேவன் பலியையோ, சபை கூடுதலையோ, அல்லது பரிசுத்த நாட்களை ஆசரிப்பதையோ விரும்பவில்லை என்று கூறவில்லை. ஆராதனையில் மக்கள் பயன்படுத்திய வடிவங்களும் முறைமைகளும் சரியானவைகளாகவே இருந்தன. இருப்பினும், ஆராதித்தவர்களின் பொல்லாத வாழ்வினிமித்தம் அவர்களின் ஆராதனை ஏற்றுக்கொள்ளப்படக் கூடாததாக இருந்தது. சரியாக வாழ்பவர்களிடத்தில் இருந்து சரியான ஆராதனையைத்*

*தேவன் விரும்புகிறார். பாவம் நிறைந்த வாழ்வு என்பது தேவன் நமது ஆராதனையைப் புறக்கணிக்கக் காரணமாய் இருக்கக்கூடும்.*

*தேவனுடைய தரிசனம் ஒன்றுக்கு ஏசாயாவின் பதில்செயலானது, நாம் தேவனுடைய பிரசன்னத்தின் பயங்கரத் தன்மையை உணர்ந்தறிய உதவவும், நாம் அவரை ஆராதிக்கும்போது மிக மேன்மையான மதிப்பை அவருக்குக் காண்பிக்கக் காரணமாக இருக்கவும் கூடும் (ஏசாயா 6:1-7). இந்த எதிர்கொள்ளுதல் ஏசாயாவைத் தேவனுடைய பரிசுத்தத்தையும் மாபெரும் தன்மையையும், உணர்ந்தறியச் செய்ததுடன் கூடுதலாகத் தேவனுடைய பரிசுத்தத்துடன் ஒப்பிடுகையில் அவரது [ஏசாயாவின்] சொந்த பாவம் நிறைந்ததன்மையையும் உணர்ந்தறியச் செய்தது.*

*இஸ்ரவேல் மக்களின் எதிரிகளுக்கு வரவிருந்த அழிவை முன்னதாகக் கண்ணோக்கிய நிலையில், தேவனுக்கு நன்றிசெலுத்துதலை வெளிப் படுத்தினார். மக்கள் அவரது [தேவனுடைய] உதவியைக் கண்டு அவரை மகிமைப்படுத்துவார்கள் (ஏசாயா 25:1-4). தேவனுடைய விடுவித்த லுக்காகக் காத்திருந்தவர்கள் அவரது மீட்பில் களிகூருவார்கள் (ஏசாயா 25:6-9) மற்றும் துதியின் பாடல்கள் அவர்களிடம் இருந்து பொங்கி யெழும்பும் (ஏசாயா 26:1-4). இருப்பினும், அவர்கள் தேவனைத் துதித் திருந்த அழகிய தேவாலயம் அழிந்தமைக்காகப் புலம்புவார்கள் (ஏசாயா 64:10).*

*தேவன் தமக்கு உதடுகளால் தரப்படும் வெறும் துதியை மாத்திரமோ அல்லது மனிதப் பாரம்பரியத்தின்படியான ஆராதனையையோ ஏற்றுக் கொள்ள மாட்டார் என்று ஏசாயா வெளிப்படுத்தினார். அல்லது அவர் தம்மைவிட்டுத் தொலைவில் உள்ள இருதயங்களில் இருந்து வரும் ஆராதனையை மதிக்கவும் மாட்டார் (ஏசாயா 29:13).*

*ஆராதனை என்பது தேவனுடைய பலத்த செயல்களுக்குப் பதில் செயலாகப் பொங்கியெழுவதாக இருக்க வேண்டும் என்று தீர்க்கதரிசி கூறினார் (ஏசாயா 43:19-21; 61:10, 11; 65:18, 19; 66:10-14). கர்த்தர் தமது மக்களுக்குச் செய்யவிருந்த மாபெரும் செயல்களுக்காக இஸ்ரவேல் மக்கள் கர்த்தரைத் துதிக்கவும் (ஏசாயா 52:7-10) அவருக்குப் பாடல்களைப் பாடவும் (ஏசாயா 42:10-13) வேண்டும் என்று அவர் இஸ்ரவேல் மக்களுக்கு அறிவுறுத்தினார். இப்படிப்பட்ட துதியானது கிறிஸ்துவின் வருகையில் மகிழ்ச்சியுடன் தரப்பட வேண்டியதாயிருந்தது (ஏசாயா 61:1-3). லூக்கா 4:18-21ல், இயேசு இந்த வசனப்பகுதியை மேற்கோள் காண்பித்து இதைத் தமக்குரியதாக்கினார். தேவனுக்குக் கனம் கொடுத்தல் என்பது அமாவாசை முதல் மறு அமாவாசை வரைக்கும், ஓய்வுநாள் முதல் மறு ஓய்வுநாள் வரைக்கும் தொடர்ந்து இருக்கும் காலம் ஒன்று வரும் என்று ஏசாயா முன்னுரைத்தார் (ஏசாயா 66:22, 23).*

*ஏரேமியா. ஏரேமியா தேவனை ஆராதித்தல் பற்றி அதிகம் கூறியிராத நிலையில், அவர் விக்கிரக ஆராதனைக்கு எதிராக அதிகம் கூறவேண்டியவ ராயிருந்தார். இஸ்ரவேல் மக்களைப் போலவே யூதா மக்களும் தேவனைக் கைவிட்டுத் தங்கள் விக்கிரகங்களைத் தொழுதுகொண்டதன்மூலம், தேவனுக்கு உக்கிரகோபமூட்டினர் என்று அவர் உரைத்தார் (எரேமியா*

*5:19; 16:11; 18:15; 19:4, 5),* இவை அவர்களின் நகரங்கள் போன்றே எண்ணிறந்தவையாக இருந்தன *(எரேமியா 2:28; 11:10-13).* மிகவும் ஏராளமான தெய்வங்களைக் கொண்டிருந்ததன்மூலம், அவர்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த புறதெய்வ வணக்கம் செய்யும் மக்களினங்களின் விக்கிரக ஆராதனையைப் பார்த்து அப்படியே தாங்களும் செய்தனர். அவர்கள் தேவனுக்கு மனமடிவு உண்டாக்கும்படி *(எரேமியா 7:18)* அந்நிய தெய்வங்களுக்குப் பலிகளைச் செலுத்தி, அந்நிய விக்கிரகங்களைத் தொழுதுகொண்டனர் *(எரேமியா 8:19; 18:15).* இதனால், எரேமியா மதியீனமாய்க் காணப்படக்கூடிய ஒரு கேள்வியைக் கேட்டார்: "எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ; ... ?" *(எரேமியா 2:11அ).* அவர்கள் இதைச் செய்திருந்தனர், மற்றும் அவர்கள் தங்கள் சுய அழிவைத் தாங்களே உண்டாக்கிக் கொள்ளும்படிக்குப் பாகாலின்மீது ஆணையிடக் கற்றுக்கொண்டனர் *(எரேமியா 7:6; 12:16, 17).* தேவன் எல்லாவற்றையும் படைத்துள்ளார் என்பதால், விக்கிரகங்களைச் செய்து அவற்றை ஆராதிக்கும் யாவரும் "அறிவில்லாமல் மிருககுணமுள்ளவர்களானார்கள்" *(எரேமியா 10:11-15).*

தேவனுடனான உண்மையான உறவு என்பது மனித பலம், ஞானம், அல்லது அறிவைச் சார்ந்தது அல்ல, ஆனால் தேவனை அறிந்து புரிந்து கொள்ளுதலைச் சார்ந்துள்ளது *(எரேமியா 9:23, 24).* இது உண்மையான ஆராதனை யாவற்றின் அடிப்படையாக இருக்க வேண்டும். தேவன் தமது மக்களின் நல் வாய்ப்புக்களை மீளக்கட்டுவிக்கும் எதிர்காலத்தை எரேமியா கண்ணோக்கினார். பின்பு தேவனுடைய நற்தன்மையினிமித்தம் அவர்கள் நன்றி செலுத்துவார்கள் என்று அவர் கூறினார் *(எரேமியா 33:11).* தேவனுடைய ஆசீர்வாதங்களையும் தேவன் யார் என்பதையும் உணர்ந்தறிதலானது, நாம் அவரை ஆராதிக்கும்படி நம்மை ஊக்குவிக்க வேண்டும்.

எசேக்கியேல். மோசேயைப்போன்று *(யாத்திராகமம் 3:4-6)* மற்றும் ஏசாயாவைப்போன்று *(ஏசாயா 6:1-5),* எசேக்கியேல் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்ததை உணர்ந்தபோது பயப்படுதலைக் காண்பித்தார் *(எசேக்கியேல் 1:28).* தேவனுடைய பிரசன்னம் பயங்கரத்திற்கும் பயபக்திக்கும் உரியதாக இருக்க வேண்டும்!

மற்ற தீர்க்கதரிசிகளைப்போலவே, எசேக்கியேலும் விக்கிரகங்களைப் பழித்துரைத்தார். மேலும் அவர் அவற்றினிமித்தமே அழிவு நேரும் என்றும் பேசினார் *(எசேக்கியேல் 6:4-7; 7:20-27).* யூதா நாடு தங்கள் விக்கிரகங்களைக் கர்த்தருடைய சந்நிதானம் வரையிலும்கூடக் கொண்டுவந்திருந்தது *(எசேக்கியேல் 5:11; 23:38, 39).* மக்கள் தங்கள் பொய்த்தேவர்களை, யூகம் செய்யக்கூடிய ஒவ்வொரு இடத்திலும் அமைத்து, அவற்றிற்குத் தங்கள் பிள்ளைகளைப் பலிசெலுத்தினர் *(எசேக்கியேல் 16:17-25).* தேவாலயத்தின் நுழைவாயிலில் பெண்கள், தம்மூசு என்ற பெண்தெய்வத்திற்காக அழுவதினால் செய்யும் ஆராதனையில் ஈடுபட்டிருந்தனர் *(எசேக்கியேல் 8:14).* ஆண்கள் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் இருந்து சூரியனை நமஸ்கரித்தார்கள் *(எசேக்கியேல் 8:16).* அவர்களுடைய விக்கிரகங்களை அவர்கள் தங்கள்

இருதயங்களுக்குள் கொண்டு வந்தார்கள் என்று கூறும் அளவுக்கு அவைகள் அவர்களுடைய பாகங்களாய் இருந்தன (எசேக்கியேல் 14:3-7). அவர்களின் விக்கிரக ஆராதனைக்குத் தண்டனையாக, விக்கிரகங்களின் பீடங்களைச் சுற்றிலும் கொலைசெய்யப்பட்ட உடல்கள் கிடப்பதை அவர்கள் காணும்போது, அவர்கள் தேவனை கர்த்தர் என்று ஒப்புக் கொள்வார்கள் என்று எசேக்கியேல் அவர்களை எச்சரித்தார் (எசேக்கியேல் 6:6, 13; 36:38).

அவர்களின் பொல்லாங்கும் விக்கிரகங்களை ஆராதித்தலும், தேவாலயத்தை விட்டுத் தேவனுடைய மகிமை வெளியேறக் காரணமா யிற்று (எசேக்கியேல் 10:18). நமது வாழ்வு இருக்க வேண்டிய பிரகாரம் இராதபோது, தேவனுக்குப் பதிலாக உலகப்பிரகாரமான விக்கிரகங்கள் நமது வாழ்வில் இடம்பெறும்போது, அல்லது தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட இயலாத வழிகளில் நாம் அவரை ஆராதிக்கும்போது, தேவன் நம்மைவிட்டுப் பிரிந்து செல்லலாம். சிம்சோனும் சவுலும் இதற்கு உதாரணங்களாக இருக்கின்றனர்; அவர்கள் தேவனுடைய சித்தத்தை மீறியதால், தேவன் அவர்களைவிட்டுப் பிரிந்து சென்றார் (நியாயாதிபதிகள் 16:20; 1 சாமுவேல் 16:14).

தானியேல். நேபுகாத்நேச்சார் அரசனின் கனவைத் தானியேல் விளக்கியுரைத்தபோது அந்த அரசன் பின்வரும் முடிவை மேற்கொண்டார்: "நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறை பொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்" (தானியேல் 2:47).

தானியேலின் நண்பர்கள் - சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் - மரணத்தை எதிர்கொண்டிருப்பதாகக் காணப்பட்டபோதும், அவர்கள் நேபுகாத்நேச்சார் அரசனால் நிறுவப்பட்டிருந்த பெரிய சிலையை வணங்கவும் ஆராதிக்கவும் மறுத்துவிட்டனர். இதனால், அவர்கள் அக்கினிச் சூளையிலே போடப்பட்டனர். அவர்கள் அக்கினியில் இருந்து காப்பாற்றப்பட்டதைக் கண்டபோது அரசர் தேவனை ஸ்தோத்திரித்தார். அவர், "இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை" (தானியேல் 3:29ஆ) என்று அறிவித்தார்.

இந்த அடையாளங்கள் மற்றும் அற்புதங்களினால், தேவனைப்பற்றி நேபுகாத்நேச்சார் அரசன் பின்வருமாறு தீர்மானித்தான்,

> அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும்,
> அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமையுமாயிருக்கிறது;
> அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்;
> அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்
> (தானியேல் 4:3).

அரசர் மற்ற வேளைகளில் தேவனுடைய வல்லமையைக் கண்டபின்பு இதைப்போன்ற கூற்றுக்களை எடுத்துரைத்தார் (தானியேல் 4:34ஆ, 35; 6:26ஆ-27). அதுபோன்றே நாமும் கடந்தகாலத்தில் தேவன் செய்துள்ள வற்றை, நிகழ்காலத்தில் அவர் செய்கின்றவற்றை மற்றும் எதிர்காலத்தில்

அவர் செய்யவிருப்பவற்றை உணர்ந்தறியும்போது துதியினால் அவருக்குப் பதில்செயல் செய்ய வேண்டும்.

## சிறிய தீர்க்கதரிசிகளும் ஆராதனையும்

சிறிய தீர்க்கதரிசிகளில் பெரும்பான்மையானவர்களின் பாரம் பெரிய தீர்க்கதரிசிகளுடைய பாரம் போன்றதாகவே இருந்தது - அதாவது, மக்கள் தங்கள் பாவங்களிலும் விக்கிரகங்களிலும் இருந்து திரும்பும்படி எச்சரித்தலும், அவர்கள் தேவனை சேவிக்கும்படி வேண்டிக்கொள்ளுதலும் என்பதாக இருந்தது. அவர்கள் இந்தப்பிரச்சனையை உரைக்கையில், தேவனை ஆராதித்தலை உய்த்துணரச் செய்யும் கூற்றுக்களை உரைத்தனர்.

இஸ்ரவேல் மக்களின் விக்கிரக ஆராதனைக்குத் தேவன் முடிவைக் கொண்டு வருவார் என்றும் அவர்கள் பாகாலை ஆராதித்தமைக்காகத் தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்றும் ஓசியா எழுதினார் (ஓசியா 2:9-13; 4:12-14; 13:1-3). அந்தச் செய்தியை செப்பனியா திரும்பவும் உரைத்தார் (செப்பனியா 1:4-18).

பலிகளைச் செலுத்துதலும் தசமபாகம் கொடுத்தலும் மக்களைத் தேவனுக்கு ஏற்புடையவர்களாக்கவில்லை என்று ஆமோஸ் எச்சரித்தார் (ஆமோஸ் 4:4-11). அவர்கள் நியாயத்திலும் நீதியிலும் குறைவுபட்டதால் அவர்களின் ஆராதனை தடைப்பட்டது. ஆமோஸ்மூலமாகத் தேவன் பின்வருமாறு அறிவித்தார்:

> உங்கள் பண்டிகைகளைப்பகைத்து வெறுக்கிறேன்;
> உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப்பிரியமில்லை.
> உங்கள் தகனபலிகளையும் போஜனபலிகளையும்
> எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன்;
> கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும்
> நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்.
> உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று;
> உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்.
> நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும்
> புரண்டு வரக்கடவது (ஆமோஸ் 5:21-24).

இதே சத்தியத்தை மீகாவும் எதிரொலித்தார்:

> என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து,
> உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்?
> தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்
> கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ?
> ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும்,
> எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும்,
> கர்த்தர் பிரியமாயிருப்பாரோ?
> என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும்,

*என் ஆத்துமாவின் பாவத்தைப்போக்க*
*என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமோ?*
*மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு*
*அறிவித்திருக்கிறார்;*
*நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து,*
*உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை*
*அல்லாமல்*
*வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?*
*(மீகா 6:6-8).*

*தேவன் தமது மக்களைச் சுத்திகரிப்பார் என்று மல்கியா முன்னுரைத்தார்; பின்பு அவர்களின் காணிக்கைகள் அவருக்கு ஏற்புடையவையாக இருக்கும் (மல்கியா 3:3). அவர் இஸ்ரவேல் மக்கள் தகுதியற்ற காணிக்கைகளைக் கொண்டுவந்ததின்மூலம் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினபடியால், அவர்களின் ஆராதனை ஏற்றுக்கொள்ளப்பட இயலாததாயிற்று என்று அவர்கள் அறியச் செய்தார் (மல்கியா 1:12). மதிப்பற்ற கொடைகளில் தேவன் பிரியமாயிருப்பதில்லை. அவர் நமது மனவிருப்பமற்ற ஊழியத்தை ஏற்றுக்கொள்வதில்லை. அவர் மகிழ்வுடனும் மனவிருப்பத்துடனும் சேவிக்கப்படுதலையே விரும்புகிறார்.*

## தொகுப்புரை

*ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு ஆகியோரின் சந்ததியாரால் விக்கிரக ஆராதனை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததைத் தீர்க்கதரிசிகள் கண்டனம் செய்தனர். தேவன் தமது மக்களின் பாவம் நிறைந்த தன்மையானது தாம் அவர்களின் ஆராதனையைப் புறக்கணிக்கக் காரணமாயிற்று என்று அவர்கள் [தீர்க்கதரிசிகள்] மூலமாக அறிவித்தார். தேவன் பலிகளையும், காணிக்கைகளையும் மாத்திரம் அல்ல, ஆனால் அவரை மதிக்கும் மற்றும் அவரது கட்டளைகளின்படி வாழ நாடும் இருதயங்களையும் விரும்பினார். அதுவே இன்றைய நாட்களிலும் உண்மையாக உள்ளது.*

*நாம் நமது இலக்கை நீதியுள்ளதாகவும், நமது வாழும் முறைமையை நல்லதாகவும் ஆக்கி, தேவனுடன் நடக்க ஒவ்வொரு முயற்சியும் செய்ய வேண்டியதாக உள்ளது. நாம் தேவனை மதித்து அவருக்குக் கீழ்ப்படிந்தால் மாத்திரமே அவர் நமது ஆராதனையை ஏற்றுக்கொள்கிறார்.*

5

# புறதெய்வ ஆராதனை

*விக்கிரக ஆராதனை பற்றிய ஒரு கலந்துரையாடல் தேவன் எவற்றை விரும்புவதில்லை மற்றும் அவர் ஆராதனையில் மனிதரின் கண்டுபிடிப்பு களை ஏன் ஏற்றுக்கொள்வதில்லை என்பதை நாம் உணர்ந்தறிய உதவுவதன் மூலம், உண்மையான ஆராதனையின் இயல்பு மற்றும் அளவுகோல்கள் ஆகியவற்றிற்குள் ஒரு உட்கண்ணோக்கை நமக்கு அளிக்கலாம். உண்மை யான ஆராதனையில் இருந்து பிரிந்து செல்லுதல்களாக விக்கிரக ஆராதனையில் உள்ளடக்கப்பட்டுள்ளவை எவை?*

> *பழங்காலங்களில் விக்கிரக ஆராதனை என்பது உண்மையான மதத்திலிருந்து பிரிந்து செல்லுதல்களின் இரு வடிவங்களை உள்ளடக்கியிருந்தது: உருவங்கள் அல்லது பிறவடிவில் பொய்த் தேவர்களை ஆராதித்தல்; மற்றும் உருவங்களின் வழியாகக் கர்த்தரை ஆராதித்தல்.*[1]

*விக்கிரகாராதனே ஆராதனையாக உள்ளது. எல்லா ஆராதனைகளுமே தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுமென்றால், விக்கிரகாராதனையில் தவறு எதுவும் இராது. விக்கிரகங்கள் பொய்த்தேவர்களாக இருப்பதால் அவைகள் நிச்சயமாகவே புறக்கணிக்கப்பட வேண்டும்; ஆனால் உண்மை யான தேவனை ஆராதிப்பதில் விக்கிரகாராதனைப் பழக்கங்களைப் பயன்படுத்துதல் அவருக்கு ஏற்புடையதாக இருக்குமா? ஆராதனை என்பதுதான் தேவன் விரும்புகிற யாவுமாக இருக்குமென்றால், தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற ஒரு பௌதீகரீதியான பொருளை ஆராதித்தல் என்பது தவறானதாக இருக்கிறதா? ஆராதனையில் உருவங்களை ஏன் பயன்படுத்தக்கூடாது என்று தேவன் விளக்கப்படுத்தினார்:*

> *கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசினநாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ... யாதொரு உருவுக்கும் ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும் ... (உபாகமம் 4:15-18) என்றார்.*

*தேவன் ஒரு பௌதீக ஜீவியாக இராதபடியால், அவரை ஆராதிப்பதில் பூமிக்குரிய உருவங்களைப் பயன்படுத்தக்கூடாது. ஆராதனையில் தேவன் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு விக்கிரகத்தைப் பயன்படுத்துவதைப் புறக்கணிக்கிறார். அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருக்கிறார் (யோவான் 4:23, 24) மற்றும் அவரை பௌதீக வழக்குகளில்*

சிந்தித்துப்பார்க்க இயலாது.

### ஆபிரகாமும் அவர் காலமும்

யோசுவா விக்கிரக ஆராதனையைப் பற்றிய தொடக்ககால வேதாகம ரீதியான கூற்றை உரத்துக் கூறினார். "... 'பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்' " (யோசுவா 24:2). இந்தத் தெய்வங்களின் இயல்பு வேதாகமத்தில் குறிப்பிடப்படாதிருக்கையில், நாகோரும் ஆபிரகாமும் வாழ்ந்திருந்த இடமான மெசொப்பொத்தாமியாவின் சுமேரிய மக்களைப் பற்றிய பழங்காலத்தியப் பதிவேடுகளில் இருந்து, உட்கண்ணோட்டம் பெற்றுக்கொள்ளப்பட முடியும்.[2]

ஆபிரகாமின் உறவினர்கள்கூட விக்கிரகங்களை ஆராதித்து வந்த இந்த விக்கிரக ஆராதனைப் பின்னணியைவிட்டு அவர் வெளியே வந்தார். அவர் ஊர் என்ற இடத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் அங்கே அந்நிய தேவர்களைத் தொழுதுகொண்டிருக்க மாட்டார்; ஆனால் அவர் அப்படிச் செய்திருந்தாரென்றால், அந்தப் பழக்கத்திற்கு உண்மையான ஒரே தேவனான யாவேயைத் தொழுதுகொள்ளத் தொடங்கு முன்னரே முடிவுகட்டியிருந்திருப்பார்.

### யாக்கோபும் ராகேலும்

ராகேல் தனது தந்தையின் வீட்டு தெய்வங்களை எடுத்துச் சென்றதென்பது (ஆதியாகமம் 31:19, 30-35), அவளும், ஒருவேளை யாக்கோபும்கூட அவற்றை வழிபட்டதைச் சுட்டிக்காண்பித்தது என்று சிலர் யூகிக்கின்றனர். இது உண்மையாக இராதிருக்கலாம்.

> ராகேல் இன்னமும் தனது இளமைப்பருவ மதத்தின்மீது பற்று உடையவளாக இருந்திருக்கலாம் என்றாலும், வீட்டுத் தெய்வங்கள் என்பவை அவளுக்கு வெறும் மதரீதியானவை என்பதற்கு மாறாக, சட்டப்பூர்வமான அல்லது பணரீதியான வகையில் அதிகம் மதிப்புடையவைகளாக இருந்திருக்கவே வாய்ப்பு அதிகம் உள்ளது. வீட்டுத் தெய்வங்களை உரிமையாகக் கொண்டுள்ள ஒருவர் குடும்பத்தின் சொத்துக்களைச் சுதந்தரித்துக் கொள்வார் என்ற நூஸி புத்தகக் குறிப்பு சுட்டிக்காண்பிக்கிறது. ... லாபானுடன் யாக்கோபு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், லாபானுக்குப் பிறந்த மகன்கள் இருந்திருந்தால், தெய்வங்கள் அவர்களுடையதாக இருந்திருக்கும். இந்த சிலாக்கியம் தனது கணவனான யாக்கோபுக்குக் கிடைக்க வேண்டும் என்று ராகேல் விரும்பினாள்.[3]

சொரூபங்களை உரிமைகொண்டிருத்தல் என்பது மதரீதியானது என்பதைச் காட்டிலும் அதிகமாக, சட்டரீதியானது என்றிருக்கக் கூடும். லாபானின் சொரூபங்களை ராகேல் எடுத்துச் சென்றது என்பது அவள் அவற்றை

வழிபட்டாள் என்று நிரூபிப்பது இல்லை.

தூண்களை நிறுத்தும் யாக்கோபின் வழக்கம் (ஆதியாகமம் 28:18, 22; 31:13; 35:14), அவற்றை அவர் வழிபட்டார் என்று நிரூபிப்பதில்லை. இந்தத் தூண்கள் நினைவுச் சின்னங்களாகவோ (ஆதியாகமம் 35:20; 2 சாமுவேல் 18:18) அல்லது குறிப்பிட்ட இடங்களில் நிகழ்ச்சிகள் நடந்ததின் அடையாளங்களாகவோ (ஆதியாகமம் 31:44-52; யாத்திராகமம் 24:4) இருந்தன.

யாக்கோபுடன் இருந்த மக்களில் சிலர் விக்கிரகங்களைக் கொண்டிருந்தனர். அவர்களிடத்தில் அவர் அவற்றைப் புறம்பே போடவோ அல்லது அவற்றை ஒளித்து வைக்கவாவது செய்ய வேண்டும் என்று கூறினார் (ஆதியாகமம் 35:2-4). அவரது செயல்கள், அவர் விக்கிரகங்களை அங்கீகரிக்கவில்லை என்று காண்பிக்கின்றன மற்றும் அவர் அவற்றை ஒருக்காலும் சேவித்ததில்லை என்றும் சுட்டிக்காண்பிக்கலாம்.

**எகிப்தில் இஸ்ரவேல் மக்கள்**

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்த 430 ஆண்டுகளின்போது விக்கிரகங்களை ஆராதித்து இருக்கலாம். இதை யோசுவா 24:14 மற்றும் எசேக்கியேல் 20:5-8 சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது.

எகிப்திய மக்கள் தேசீய, உள்ளூர், மற்றும் சொந்த தெய்வங்களை ஆராதிக்க பலதெய்வ வணக்கம் கொண்டவர்களாக இருந்தனர். பழங்கால சித்திரங்களும், சிலைகளும், விலங்குகள், மனிதர்கள், மற்றும் மனிதத் தலைகளைக் கொண்ட விலங்குகள் என்ற பல்வேறு தெய்வங்களை முன்னிறுத்துகின்றன. சூரியன், சந்திரன், காற்று, மற்றும் நைல் நதி ஆகியவை தெய்வங்களாகக் கருதப்பட்டன. ஏறக்குறைய புறம்பான பெரிய செல்வாக்குகள் ஒவ்வொன்றும் தெய்வம் என்ற வகையில் கண்ணோக்கப் பட்டன: வளம், மழை, காற்று, நெருப்பு, வாதைகள், தேள்களும், பாம்புகளும், முதலைகளும்கூட. தேவன் எகிப்தியர்மீது கொண்டுவந்த வாதைகள், அவர் எகிப்தியத் தேவர்களைக் காட்டிலும் மேலானவராக இருந்தார் என்று காண்பித்தன (யாத்திராகமம் 12:12).

இஸ்ரவேல் மக்கள் ஆராதிப்பதற்காகப் பொன் கன்றுக்குட்டியின் உருவத்தைச் செய்ததில் ஆரோன் எகிப்தியர்களின் வேலைப்பாட்டைப் பிரதியெடுத்துச் செய்தார் என்று சிலர் நினைக்கின்றனர் (யாத்திராகமம் 32:1-5). மேலும், யெரொபெயாம் வடக்கில் இருந்த பத்துக் கோத்திரங்களுக்கு இரு கன்றுக்குட்டிகளின் விக்கிரகங்களைச் செய்வதற்கு (1 இராஜாக்கள் 12:26-33), எகிப்தில் அவர் தங்கியிருந்ததினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருக்கலாம் (1 இராஜாக்கள் 11:40). இந்த யூகங்களை உறுதிப்படுத்த ஆதாரம் எதுவுமில்லை.

## இஸ்ரவேல் மக்களின் அயலார்கள் மத்தியில் (சுற்றுப்புறங்களில்) விக்கிரக ஆராதனை

**கானானியர்கள்**

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு நாற்பது ஆண்டுகளாக

வனாந்தரத்தில் அலைந்து திரிந்த பின்னர், அவர்கள் விக்கிரகங்களினால் நிறைந்திருந்த கானான் நாட்டிற்குள் பிரவேசித்தனர். தேவன் தமது மக்கள் விக்கிரகங்களை ஆராதிக்கும் செயலினால் செய்வாக்குச் செலுத்தப்படுவார்கள் என்று அறிந்தவராகப், பின்வரும் எச்சரிக்கையைக் கொடுத்தார்:

> நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக. உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள் (யாத்திராகமம் 23:24, 25அ).

> நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது உனக்குக் கண்ணியாயிருக்கும் (யாத்திராகமம் 23:33ஆ).

உடன்படிக்கையான, பத்துக் கட்டளைகள் (உபாகமம் 4:13), இஸ்ரவேல் மக்களை வேறே தேவர்களைக் கொண்டிருத்தலில் இருந்து தடைசெய்தது (யாத்திராகமம் 20:3; உபாகமம் 5:7). தேவனை அவர்கள் ஆராதித்தல் என்பது அவர்களைச் சுற்றிலும் இருந்த விக்கிரக ஆராதனை செய்யும் மக்களினங்களின் நடைமுறைகளைப் பிரதியெடுத்துச் செய்யக்கூடாததாக இருந்தது (உபாகமம் 20:17, 18).

இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசித்த பின்பு, அவர்கள் யோசுவா மற்றும் யோசுவாவுக்கு ஊழியம் செய்த மூப்பர்கள் ஆகியோரின் நடத்துவத்தின்கீழ் தேவனை நியாயமாக நன்கு சேவித்தனர் (நியாயாதிபதிகள் 2:7). அப்போது மக்கள் விக்கிரகங்களை வழிபட்டிருக்கலாம் (யோசுவா 24:20, 23), ஆனால் யோசுவாவைப் பின்தொடர்ந்த சந்ததியார்கள் வேறே தேவர்களை விரிவாகச் சேவிப்பதைத் தொடங்கினர் (நியாயாதிபதிகள் 2:10-13). இது நீதியுள்ள நியாயாதிபதி ஒருவரால் இஸ்ரவேல் மக்கள் வழிநடத்தப்படாதபோது, விசேஷித்தவகையில் உண்மையாக இருந்தது (நியாயாதிபதிகள் 2:16-19; 10:5, 6).

பலதெய்வ வணக்கத்தாராக இருந்த கானானியர்கள் தங்கள் நாட்டு தேவர்களையும், குறைவாக அறியப்பட்டிருந்த மற்ற பல தேவர்களையும் ஆராதித்தனர். இந்த மக்களினங்கள் தங்களை தோல்வியடையச் செய்த மற்ற மக்களினங்களின் தேவர்களையும், தங்கள் தேவர்களுடன் சேர்த்துக்கொள்ளுதல் என்பது இவர்களின் மத்தியில் பொதுவான நடைமுறையாக இருந்தது. அவர்கள் தங்கள் சொந்த தேவர்களை விட்டுக்கொடுத்துவிடாமல், தங்களை வெற்றிகொண்டவர்களின் தேவர்களையும் சேர்த்துக்கொண்டனர். வெற்றிகொண்ட மக்களினங்களின் தேவர்கள் தங்கள் தேவர்களைக் காட்டிலும் மேலானவர்களாக இருக்க வேண்டும், அவ்வாறு இல்லையென்றால் தாங்கள் தோல்வியடைந்திருக்க மாட்டார்கள் என்று இவர்கள் நியாயம் பேசினர்.

இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசித்த உடனேயே, கானானியரின் தேவர்கள் இஸ்ரவேல் மக்களுக்குக் கண்ணியாயின[ர்].

தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு கானான் நாட்டில் இருந்த எல்லா மக்களையும் மரணத்துக்கு உள்ளாக்கி, அவர்களின் விக்கிரகங்களை அழித்துப்போட்டு, அவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்வதில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார் (உபாகமம் 7:1-5). இதற்கான காரணம் இருமடங்காக இருந்திருக்கலாம்: (1) அவர்களுடன் இணைவுகொள்ளுதல் என்பது இஸ்ரவேல் மக்களை விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்தக் கூடும் (உபாகமம் 7:3, 4), மற்றும் (2) இஸ்ரவேல் மக்கள் கானானியரின் சிற்றின்ப நடைமுறைகளினிமித்தம் பெற்றுக்கொண்டவைகளான, எகிப்தியரின் மத்தியில் ஏற்பட்ட வாதைகளினால் (உபாகமம் 7:15) பாதிக்கப்படக் கூடும்.

**அசீரியர்கள்**

அசீரியர்கள் இஸ்ரவேல் மக்களுக்கு, அதிலும் விசேஷமாக வடக்குக் கோத்திரங்களுக்கு அச்சுறுத்தல் ஆயினர். கடைசியில் இந்தக் கோத்திரங்கள் அசீரியர்களால் வெற்றிகொள்ளப்பட்டு, அசீரியா முழுவதிலும் சிதறிப்போயினர். கி.மு. 730ம் ஆண்டுவாக்கில் கலிலேயாவைக் கைப் பற்றிய மூன்றாம் திக்கிலேத்பிலேசர் என்ற அரசன், வடக்கு ராஜ்யமான இஸ்ரவேலையும், மற்றும் தெற்கு ராஜ்யமான யூதாவையும், தனக்குத் கப்பம்செலுத்தும்படி வற்புறுத்தினான். ஒரு பத்தாண்டுகளுக்குப் பின்பு, மூன்றாம் சார்கோன் என்ற அரசன், இஸ்ரவேலின் தலைநகரான சமாரி யாவைக் கைப்பற்றி, அதிகம் வளமும் திறமையும் கொண்ட மக்களைத் தனது நாட்டிற்கு ஓட்டிச்சென்று, அவர்களுக்குப் பதிலாக இஸ்ரவேல் நாட்டில், அயல்நாட்டில் இருந்து வந்த குடியிருப்பவர்களை இட்டு நிரப்பினான்.

அசீரியர்களின் மதமானது இயல்பில் இயற்கையை வழிபடும் முறைமையாகவும், மிகவும் அதிகமாக பாபிலோனியர்களின் மதத்தைப் போன்றதாகவும் இருந்தது. அவர்களின் பிரதான மற்றும் தேசீய தெய்வ மான அசூருடன்கூட, அவர்கள் இயற்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்தியதாக நினைத்து பல தேவர்களையும் கொண்டிருந்தனர். அவர்களின் தேவர்கள் மீன்பிடிப்பவர்கள், கனிகளை விளைவிப்பவர்கள், மேய்ப்பர்கள், மற்றும் பிற விவசாயிகள் ஆகியோருக்கு உதவுவதில் முக்கியமானவர்கள் என்று கருதப்பட்டனர். ஆசாரியர்கள் பலிகளையும், கீதங்களையும், ஜெபங்களையும், மற்றும் புலம்பல்களையும் உள்ளடக்கிய கோவில் சடங்குகளில், மந்திரவாதிகளாகவும், தீர்க்கதரிசிகளாகவும், மற்றும் ஊழியர்களாகவும் பணியாற்றினர். பல பெண்கள் வளமை யின் சடங்குகளில் பங்கேற்று புலம்புபவர்களாகவும், கனவுகளை விளக்கப்படுத்திக் கூறுபவர்களாகவும் ஊழியம் செய்தனர்.

**பாபிலோனியர்கள்**

கி.மு. 597ல் இஸ்ரவேல் நாடு, பாபிலோனின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. பாபிலோனியர்கள் பல யூதர்களை, பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர், அங்கே யூதர்கள் அடிமைத்தளையில் இருந்தனர், அப்போது

அவர்கள் விக்கிரக ஆராதனையில் இருந்து விலகினர்.

பாபிலோனியர் மற்றும் அசீரியர்களின் இயற்கையே தெய்வம் என்ற மத மானது சுமேரியர்களிடம் இருந்து கடனுகைப் பெறப்பட்டிருந்தது. மெரொதாக் என்ற பாபிலோனியர்களின் தேசிய தெய்வம் (எரேமியா 50:2), அசூர் என்ற அசீரியர்களின் தெய்வத்திற்குச் சமமானதாக இருந்தது. இந்த நாடுகள் தங்களின் வாழ்வைக் கட்டுப்படுத்தியதாக நினைத்திருந்த, பல தேவர்களைக் கொண்டிருந்தன. அவர்கள் தங்கள் ஆசாரியர்கள் மந்திரவாதம் செய்ய வல்லமை கொண்டிருந்ததாக நினைத்த பல அசுத்த ஆவிகளையும் நம்பினர். சில ஆசாரியர்கள் இசை மற்றும் புலம்பல் ஆகியவற்றைக் கொண்டு, தங்கள் தேவர்களின் கோபத்தைத் தணிக்கும் விசேஷித்த பணிகளையும் கொண்டிருந்தனர். மிருகங்கள் பலியிடப்பட்டு, அவற்றின் இரத்தம் ஊற்றப்பட்டது; இருப்பினும், அந்த பலிகள் தகனிக்கப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை. புதிய ஆண்டுக் கொண்டாட்டம் என்பது அவர்களின் பிரதான பண்டிகைகளில் ஒன்றாக இருந்தது. பெண் ஆசாரியர்கள் பல்வேறு பதவிகளில் ஊழியம் செய்தனர். சிலர் பரிசுத்த மான வாழ்க்கை வாழும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கையில், மற்ற வர்கள் கோவில் விபசாரிகளாகப் பணிசெய்தனர். ஆராதனைக்குப் பல்வேறு இடங்கள் பயன்படுத்தப்பட முடிந்திருந்தது, ஆனால் கோவில்களே அதற்கு முக்கியமான இடங்களாக இருந்தன.

## தொகுப்புரை

ஆபிரகாமும் அவரது சந்ததியார்களும் எங்கு வாழ்ந்திருந்தாலும், அவர்கள் விக்கிரக ஆராதனையினால் சூழப்பட்டிருந்தனர். கானான் நாடு விக்கிரக ஆராதனை என்ற நோய் தொற்றியதாக இருந்தது. உண்மையான ஒரே தேவன்மீது விசுவாசத்துடன் நிலைத்திருத்தல் என்பது இஸ்ரவேல் மக்களின் மாபெரும் அறைகூவல்களில் ஒன்றாயிற்று. இஸ்ரவேல் மக்களைச் சுற்றிலும் இருந்த பல நாட்டவர்கள்போல, அவர்கள் சிலவேளைகளில் தங்கள் தேசிய தெய்வத்துடன் - இது இஸ்ரவேல் விஷயத்தில், யாவே என்ற ஒரே தேவனாவார் - பல பிற தேவர்களையும் தங்கள் ஆராதனையில் உள்ளடக்கினர். ஒரு மனிதன் குளிர்கால இரவில் தன்னைக் கதகதப் பாக்கிக்கொள்ளக் கம்பளிகளைக் கூட்டிக்கொள்வது போல, இஸ்ரவேல் மக்கள் தேவர்களைச் சேர்த்துக்கொண்டனர். அவர்கள் எவ்வளவு அதிகமான தேவர்களை ஒருவர் ஆராதித்தாரோ, அவ்வளவு அதிகமாக அவர் உதவிகளைப் பெறமுடியும் என்ற புறதெய்வச் சிந்தனையைத் தழுவிக் கொண்டனர்.

யூதர்கள் தங்கள் சிறையிருப்பிற்கு முன்னர், தங்களைச் சுற்றிலும் இருந்த மக்களினங்களின் தேவர்களை அடிக்கடி ஆராதித்தனர். பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பின்பு, தாய்நாட்டிற்குத் திரும்பித் சென்ற எஞ்சியிருந்தவர்களும் கிறிஸ்துவின் நாட்கள் வரையிலும் யூதாவில் வாழ்ந்திருந்தவர்களும் விக்கிரக ஆராதனையில் இருந்து விலகியிருந்தனர்.

*குறிப்புகள்*

[1]Steven Barabas, "Idolatry," in *The New International Dictionary of the Bible*, ed. J. D. Douglas and Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 3:459. [2]*அடிப்படையில், இயற்கையே தெய்வம் என்ற கருத்துடைய சுமேரியர்களின் மதமானது, பல்வேறு பிற தேவர்களால் உதவிவேலை செய்யப்பட்ட நகர-தெய்வம் ஒன்றை ஒவ்வொரு நகரும் கொண்டிருந்தது என்ற கருத்தைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. குடிமக்கள் தங்கள் சொந்த தேவர்களைக் கொண்டிருந்தனர். அவர்களின் தேவர்கள் கோவில் களில் வைக்கப்பட்டு, விலையுயர்ந்த உடைகள் அணிவிக்கப்பட்டு, அன்றாடம் போஜன பலிகள் தரப்பட்டு, பலிகள் செலுத்தி சேவிக்கப்பட்டு, இனப்பெருக்க சடங்குகளை நிகழ்த்தும் கோவிலைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் விபசாரிகளால் பாடல்கள் பாடப்பட்டு, ஆராதிக்கப்பட்டனர். விளைச்சலின் தெய்வமான தம்மூஸ் என்பவனைப் பற்றி, எசேக்கியேல் 8:14ல், குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் கோடைகாலத்தில் மரித்து அல்லது கடத்திச் செல்லப்பட்டு பின்பு பனிக்காலத்தில் திரும்பி வந்தான் என்று மக்கள் நம்பினர், ஏனென்றால் கோடைக்காலத்தில் விளைச்சல் அற்றுப்போய் பின்பு பனிக்காலத்தில் மீண்டும் உயிர்பெற்றது. கோடையின் கடும் வெப்பம் விளைச்சலை அற்றுப்போகச் செய்யும்போது, ஒவ்வொரு ஆண்டும் பெண்கள், கீழ் உலகத்திற்கு அவன் சென்றான் என்று அழுதனர். அவன் ஒருக்காலும் திரும்பி வரவில்லை என்று சிலர் நினைத்தனர், அதேவேளையில் விளைச்சல் மறுபடியும் ஏற்படும் பனிக்காலத்தில் அவன் திரும்பி வந்தான் என்று மற்றவர்கள் நம்பினர்* (Francis R. Steele, "Sumer," and P. W. Gaebelein, Jr., "Tammuz," in *The International Standard Bible Encyclopedia*, rev., ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 4:660, 726). [3]Paul Leslie Garber, "Idolatry," in *The International Standard Bible Encyclopedia*, rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:797.

# 6

# புதிய உடன்படிக்கையின்கீழ் உண்மையான ஆராதனை

*யூதர்களின் விக்கிரக ஆராதனையும் ஆராதனையில் புறதெய்வ நடைமுறைகளைப் பயன்படுத்துதலும் தேவனுக்கு ஏற்பில்லாதவைகளாக இருந்தன என்று நாம் கற்றிருக்கிறோம். வேதாகமத்தின் தேவன் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் (யாத்திராகமம் 20:3-5) மற்றும் அவர் உண்மையுள்ள ஒரே தேவனாக இருக்கிறார். அவர் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டும், மற்றும் அவர் குறிப்பிட்ட வழியில் மாத்திரமே அவர் ஆராதிக்கப்பட வேண்டும்.*

*இயேசு, உபாகமம் 6:13 மற்றும் 10:20 வசனங்களைப் பொழிப்புரை செய்து, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று உரைத்தார் (மத்தேயு 4:10). மற்ற எல்லாத் தேவர்களும் விலக்கப்பட்டுள்ளனர். ஆராதிப்பவர்கள் தேவன் ஒருவரை மாத்திரமே ஆராதிக்க வேண்டியவர்களாகவும் அவரால் கட்டளையிடப்பட்டுள்ளதை மாத்திரம் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். மோசே பின்வருமாறு எச்சரித்தார்,*

> *உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக. உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே (உபாகமம் 6:14, 15).*

## ஆராதனையின் எல்லைகள்

*இஸ்ரவேல் மக்கள் "தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ள வேண்டும்'' என்று மோசேயின் மூலமாகத் தேவன் வெளிப்படுத்தினார் (உபாகமம் 6:2). இந்தக் கூற்று, அவர்கள் - தேவன் கட்டளையிட்டுள்ளவற்றிற்குக் குறைவாக அல்ல ஆனால் - எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் தேர்ந்துகொள்ளவோ அல்லது குறிப்பாகச் சிலவற்றை எடுத்துக்கொள்ளவோ கூடாதிருந்தது, ஆனால் அவர்கள் தேவனுடைய பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கட்டளையையும் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது.*

மேலும், இஸ்ரவேல் மக்கள் தேவன் கட்டளையிட்டவற்றை மாத்திரம் பின்பற்ற வேண்டியிருந்தது. "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக" (உபாகமம் 5:32). இங்கு "படியே" என்ற வார்த்தை "மட்டும்" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள், தேவன் கட்டளையிட்டவற்றை மாத்திரம் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இந்தச் செய்தி எண்ணற்ற முறைகள் இஸ்ரவேல் மக்களுக்குத் திரும்பக் கூறப்பட்டது மற்றும் இஸ்ரவேல் அரசர்களுக்கும் கட்டளையிடப்பட்டது (உபாகமம் 17:20; 28:14; யோசுவா 1:7; 23:6; நீதிமொழிகள் 4:27).

அவர்கள் தேவனுடைய கட்டளைகளுடன் ஒன்றையும் சேர்க்கவோ அல்லது அவற்றில் இருந்து ஒன்றையும் குறைக்கவோ கூடாதிருந்தது. "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" (உபாகமம் 4:2; 12:32; நீதிமொழிகள் 30:6ஐயும் காணவும்).

தேவனுடைய கட்டளைகளில் இருந்து மக்கள் ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று அவர் குறிப்பிட்டார். இதற்கு அவரது கட்டளைகள் காக்கப்பட வேண்டும் என்பதே காரணமாக இருந்தது (உபாகமம் 4:2). தேவனுடைய கட்டளைகளுடன் கூட்டப்படுபவை எவையும் தேவனுடைய கட்டளைகளாயிராமல் மனுதருடைய முன்னுரிமைகளாக இருந்தன. இவ்வாறு கூட்டப்படுபவற்றை எவரேனு ம் கடைப்பிடித்தால், அவர் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. தேவனுடைய கட்டளைகளில் இருந்து எவற்றையேனும் குறைக்கிற எவரொருவரும் தேவன் கேட்டுக்கொண்டுள்ள எல்லாவற்றையும் செய்யத் தவறியபடியால், அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாதவராக இருந்தார்.

புதிய ஏற்பாட்டின்கீழ் இருப்பவர்களுக்கும் இயேசு இதே கொள்கையைப் போதித்தார். அவரைப் பின்பற்றுபவர்கள், அவரது சீஷர்களாகிறவர்களுக்கு "நான் [இயேசு] கட்டளையிட்ட யாவற்றையும் கடைப்பிடிக்கும்படி" போதிக்க வேண்டும் என்று அவர் கூறினார் (மத்தேயு 28:20). அவர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இருந்து எவரொருவரும் ஒன்றையும் கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது என்று கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19). இது வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு மாத்திரமே நடைமுறைப்படுகிறது என்று சிலர் உரைத்துள்ளனர். சந்தர்ப்பப்பொருளில், அது உண்மை யாகவே உள்ளது, ஆனால் தேவன் வேதாகமத்தின் மற்ற புத்தகங்களைக் காட்டிலும் அந்தப்புத்தகத்தைப் பற்றி அதிகமாக நினைக்கிறாரா? வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்துடன் ஒன்றைக் கூட்டுதல் அல்லது அதில் இருந்து ஒன்றை எடுத்துப்போடுதல் என்பது தவறானதாகவும், மற்ற வேதவசனங்களுக்கு அவ்வாறு செய்தல் சரியானதாகவும் இருக்கிறதா?

பவுல் கிறிஸ்தவக் கொள்கைகளை உள்ளடக்க வேண்டியதாக இருக்கும் "சுவிசேஷம்," என்பது பற்றி எழுதினார் (1 தீமோத்தேயு 1:9-11), அதாவது வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பவர்கள் சபிக்கப்பட்டவர்

களாக இருக்கின்றனர் என்று அவர் எழுதினார் (கலாத்தியர் 1:8, 9). இந்த விஷயத்தைப் பற்றி யோவான், "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" என்று எழுதியதன்மூலம் குறிப்பிட்டார் (2 யோவான் 9). தேவனைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை "ஆவியிலும் உண்மையிலும்" தொழுதுகொள்ள வேண்டும் என்று இயேசு கூறினார் (யோவான் 4:24). தேவன் வரையறைகளை அமைத்துள்ளார், இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நாடுபவர்கள் இந்த வரையறைகளுக்குள் நிலைத்திருக்க வேண்டும் (எபிரெயர் 5:9). இதே விஷயம் அவரை ஏற்ற வகையில் ஆராதிக்க விரும்புபவர்களுக்கும் உண்மையாக உள்ளது.

தேவன் குறிப்பிடாதவற்றை ஆராதனை நடைமுறைகளில் அறிமுகப்படுத்துபவர்கள், நாம் ஆராதனையில் பயன்படுத்த வேண்டிய ஒவ்வொன்றையும் தேவன் குறிப்பிட்டிருக்கவில்லை என்று மறைமுகமாகக் குறிப்பிடுகின்றனர். இப்படிப்பட்ட எண்ணப்போக்கு தேவனுடைய வெளிப்படுத்துதலின் முழுமைத்தன்மையை மறுக்கிறது.

## உண்மையோடு தொழுதுகொள்ளுதல்

புதிய உடன்படிக்கையின்கீழ் ஆராதனை என்பது இயேசு வெளிப்படுத்திய சத்தியத்தின்படியானதாக இருக்க வேண்டும். யாக்கோபின் கிணற்றருகில் இயேசுவைச் சந்தித்த சமாரியப் பெண், ஆராதிக்கும் இடம் பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டாள். சமாரியர்கள் கெரீசீம் மலையில் ஆராதித்தனர், ஆனால் யூதர்கள் எருசலேமில் ஆராதித்தனர்.

எருசலேமில் ஆராதனை என்பது சரியானதாக இருந்தது என்று இயேசு சுட்டிக்காண்பித்தார். அவர் சமாரியர்களின் ஆராதனையை யூதர்களின் ஆராதனையுடன் தொடர்புபடுத்தி அதைப்பற்றி, "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்று கூறினார் (யோவான் 4:22). மாற்றம் ஒன்று விரைவில் வரும், அப்போது உண்மையில் ஆராதிப்பவர்கள் "ஆவியோடும் உண்மையோடும்" ஆராதிப்பார்கள் (யோவான் 4:23, 24). ஆராதனை என்பது ஆவியோடும் உண்மையோடும் "இருக்க வேண்டும்." வேறு எந்த விருப்பத் தேர்வும் அனுமதிக்கப்படுவதில்லை. மறைவான குறிப்பு தெளிவாக உள்ளது: சமாரியர்கள் உண்மையோடு தொழுதுகொள்பவர்களாக இருக்கவில்லை. அவர்கள் யூதர்கள் செய்ததுபோன்று அதே தேவனையே விசுவாசித்தனர், ஆனால் அவர்கள் தவறான இடத்தில் ஆராதித்துக் கொண்டிருந்தனர். யோவான் 4:21-24 பின்வருபவற்றைப் போதிக்கிறது ...

- தேவனை ஆராதிக்கும் எல்லா ஆராதனையும் தேவனுக்கு ஏற்புடையதாக இருப்பதில்லை. பெண்ணிடத்தில் இயேசுவின் கூற்றானது, சமாரியர்கள் ஆராதித்தாலும், அவர்கள் தங்கள் ஆராதனையில் சரியானவர்களாக இருக்கவில்லை என்பதைக்

காண்பித்தது.

- வெறும் ஆராதனையைக் காட்டிலும் அதிகமானவற்றைத் தேவன் விரும்புகிறார். சமாரியர்கள் தேவனை ஆராதித்தனர், ஆனால் அவர்கள் "அறியாததை ஆராதிக்கும்" அளவுக்கு அதை அவ்வளவு அறியாமையுடன் செய்தனர். அவர்களின் ஆராதனை தவறானதாக இருந்தது.
- யூதத்துவ ஆராதனை இனியும் ஆராதனைக்கான வழியாக இருப்பதில்லை. நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆராதனைக்குரிய இடமாகத், தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருந்த இடமான எருசலேம், இனியும் ஆராதனைக்குரிய இடமாக இருப்பதில்லை.
- வரும் என்று இயேசு கூறிய காலமான கிறிஸ்தவ யுகத்தில், தேவன் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதை மாத்திரமே ஏற்றுக்கொள்வார்.

உண்மை [சத்தியம்] என்பது எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? சத்தியம் என்பது இயேசுவின்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவான் 1:14, 17). இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருப்பதன்மூலம் நாம், "சத்தியத்தை அறிய" முடியும் (யோவான் 8:32). இயேசுவின் வார்த்தைகள், தேவனிடத்தில் இருந்து வருவதால் (யோவான் 7:16; 12:49, 50; 14:24ஆ; 17:8), சத்தியமாக இருக்கின்றன (யோவான் 17:17). சத்தியத்தின்படி இருக்கிறவர்கள் இயேசுவின் குரலைக்கேட்கின்றனர் (யோவான் 18:37), ஏனென்றால் "இயேசுவுக்குள்" சத்தியம் இருக்கிறது (எபேசியர் 4:21).

எனவே, நாம், இயேசு சத்தியத்தைக் கொண்டுவந்துள்ளார் என்பதையும் சத்தியம் அவருக்குள் இருக்கிறது என்பதையும் காணுகிறோம்; இந்த சத்தியம் தேவனுடைய வசனத்தில் உள்ளது. மற்றும் ஆவியானவர் மூலமாக சகல சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், ஆராதனையில் நாம் செய்கிற ஒவ்வொன்றும் இயேசுவினால் போதிக்கப் பட்டுள்ள சத்தியத்தால் வரையறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆராதனை என்பது இனியும் நியாயப்பிரமாணத்தின் போதனையின்படியானதாக இருப்பதில்லை. நாம் இயேசுவின் வார்த்தைகளில் தொடர்ந்து நிலைத் திருந்தால் சத்தியத்தை அறிய முடியும்.

### நியாயப்பிரமாணத்தின்படி அல்ல

புதிய ஏற்பாட்டு ஆராதனை நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இருப்பதில்லை. மோசே நியாயப்பிரமாணத்தைக் கொண்டுவந்தார்; இயேசு கிருபையையும் சத்தியத்தையும் கொண்டு வந்தார் (யோவான் 1:17). அந்த சத்தியம் கிறிஸ்தவ ஆராதனைக்கு நடைமுறைப்படுகிறது. சத்தியம் மோசேயின் மூலமாக வந்திருக்கவில்லை என்றாலும், அவரது போதனை தவறானதல்ல. மோசே, இயேசு கொண்டு வந்த சத்தியத்தின் நிழலை, மிகச்சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்தினார். "இப்படியிருக்க, நியாயப் பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் ...

நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்" (எபிரெயர் 10:1அ). நியாயப்பிரமாணத்தின் நடைமுறைகள் "பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது" (எபிரெயர் 8:5). இந்தக் காரணத்தினால், கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையைப் பழைய ஏற்பாட்டில் போதித்து நடைமுறைப்படுத்தப்பட்டவற்றின் அடிப்படையில் அமைப்பதில்லை. கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் ஆராதிப்பார்கள் என்றால், இன்றைய நாட்களில் ஆராதனையில் மிருகபலிகளைச் செலுத்த வேண்டியிருக்கும்.

இயேசுவின் பலியானது பாவ மன்னிப்புக்காகச் செலுத்தப்பட்ட மிருகபலி என்ற நிழலை நிறைவு செய்தது. நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டது அல்லது நீக்கப்பட்டது என்று வேதாகமம் கூறுகிறது (எபேசியர் 2:14, 15). ஆகையால் - பலிகள் உட்பட - நியாயப்பிரமாணத்தின் கீழான ஆராதனையின் வடிவங்கள் நீக்கிப்போடப்பட்டுள்ளன.

புதிய உடன்படிக்கையின்கீழ் உள்ளவர்கள் இயேசுவின் போதனையைக் கொண்டே நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48). நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தவர்களை இயேசுவின் போதனை நியாயந்தீர்க்காது. நியாயப்பிரமாணமே அவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் அடிப்படையாக இருக்கும்: "எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள்" (ரோமர் 2:12ஆ).

நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் தர அளவையானது, நியாயப்பிரமாணத்தின்கீழ் இராதவர்களுக்கான நியாயத்தீர்ப்பில் இருந்து வேறுபடுகிறது. நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தவர்களை நியாயந்தீர்க்க மாத்திரமே நியாயப்பிரமாணம் பயன்படுத்தப்படும். அது நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்தவர்களையோ, நியாயப்பிரமாணத்தின் காலத்தின்போது வாழ்ந்த புறஜாதியாரையோ (ரோமர் 2:14), அல்லது நியாயப்பிரமாணம் நீக்கிப்போடப்பட்டபின்பு வாழ்ந்துள்ள எவரையுமோ (எபிரெயர் 10:9) நியாயந்தீர்க்காது.

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஆராதனையில் அறிவுறுத்துதல்களுக்கு அவரையே நோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. நியாயப்பிரமாணத்தின் கீழான ஆராதனை நடைமுறைகள் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுவதில்லை. நியாயப்பிரமாணமல்ல, இயேசுவின் வார்த்தைகளே (யோவான் 12:48), அவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் அடிப்படையாக இருக்கும்.

நியாயப்பிரமாணமானது புதிய ஏற்பாட்டு ஆராதனையின் ஆவிக்குரிய உண்மை நிலைகளுடைய பௌதீக நிழல்களை உள்ளடக்கியது. புதிய உடன்படிக்கையின்கீழ், ஆராதனை என்பது ஆவியோடும் உண்மையோடும் ஏறெடுக்கப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் மிருக பலிகளுக்குப் பதிலாக, "இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை" செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர் (1 பேதுரு 2:5ஆ).

நாம் "பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி" ஊழியம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம் (ரோமர் 7:6; 2:29; 2 கொரிந்தியர் 3:6; பிலிப்பியர் 3:3ஐக் காணவும்). "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபிரெயர் 13:15).

**மனச்சாட்சியின்படி அல்ல**

இயேசுவினால் கட்டளையிடப்பட்டிராத நடைமுறைகள் பல ஆண்டுகளாக ஆராதனையில் பயன்படுத்தப்பட்டுள்ளதால், மக்களில் பலர் அவற்றைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்தப்பட்டிருப்பதாக உணரு கின்றனர். அவர்களின் மனச்சாட்சிகள் அவர்களைத் தொந்தரவு செய்யா திருந்தால், அவர்களின் ஆராதனையில் தவறு எதுவும் இல்லை என்று அவர்கள் முடிவு செய்கின்றனர்.

"மனச்சாட்சி" என்ற வார்த்தை, லத்தீன் மொழியில் "உடன்" என்று அர்த்தப்படுகிற *con* மற்றும் "அறிவு" என்று அர்த்தப்படுகிற *science* என்ற வார்த்தைகளில் இருந்து வருகிறது. இதில் பிந்திய வார்த்தையானது கிரேக்க மொழியில் "அறிவுடன்" என்று அர்த்தப்படுகிற *suneidesis* என்ற வார்த்தைகளுக்குச் சமமானதாக உள்ளது. நமது தனிப்பட்ட நீதிவழங்கும் முறைமையாக உள்ள மனச்சாட்சி என்பது, நாம் கொண்டுள்ள அறிவைச் சார்ந்துள்ளது. ஒருவர் நல்மனச்சாட்சியைக் கொண்டிருந்தால், அது அவர் சரியானதை நினைக்கின்றபோது அதை அங்கீகரித்து, சரியான தகவல் களாகக் காணப்படுபவற்றின் அடிப்படையில் முடிவுகளைத் தரவழைக்க அவரை ஊக்குவிக்கும். ஒருவரின் மனச்சாட்சி நல்லதாக இராதிருந்தால், அவர் தாம் தவறானதென்று நினைக்கின்றவற்றைச் செய்தாலும் அல்லது தமது முன் அனுமானங்களைச் சந்திக்க உண்மைகளைப் புரட்டினாலும் கவலைப்படமாட்டார்.

பவுல் கிறிஸ்தவர்களைக் கொலைசெய்ய வேண்டும் என்று நினைத்தார். தேவனைத் தவிர மற்ற தேவர்களை ஆராதித்த இஸ்ரவேல் மக்கள் கொலைசெய்யப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் போதித்தது (யாத்திராகமம் 22:20; உபாகமம் 17:2-5). இயேசுவை ஆராதித்தவர்களைப் பவுல் நல்மனச்சாட்சியுடனேதான் கொலை செய்தார் (நடபடிகள் 23:1; 24:16), ஏனென்றால் அவர்கள் வேறே தேவனை ஆராதித்தனர் என்று அவர் நினைத்தார் (நடபடிகள் 26:9).

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபோதும், அவ்வாறு செய்வது சரியானது என்று நாம் நினைத்தால், நமது மனச்சாட்சி நம்மை தொந்தரவு செய்யாது. நமது சிந்தனை, தேவனுடைய வசனத்தினால் வழிநடத்தப்பட்டு, வசனத்தில் கூறப்படுபவற்றிற்கு நாம் கீழ்ப்படிந்தால், இடர்ப்பாடற்ற மனச்சாட்சி விளையும். நாம் சரியானவற்றைச் செய்கின்றோம் என்று நினைத்துக்கொண்டு தவறான சிலவற்றைச் செய்தோம் என்றால் நமது மனச்சாட்சி நம்மைக் கவலைப்படுத்தக்கூடும். துர்மனச்சாட்சியானது, ஒருவர் தாம் உண்மையென்று அறிந்துள்ளவற்றிற்கு

நேர்மாறாக வாழ்வதைப் பற்றி அவரைக் கவலைப்படுத்தாது. நடைமுறை வழக்கம் ஒன்றின் சரியான தன்மையை நமது மனச்சாட்சியினால் முடிவு செய்வதற்குப் பதிலாக, நாம் தேவனுடைய வசனத்தை நமது தர அளவையாகப் பயன்படுத்த வேண்டும் (1 யோவான் 4:1, 6ஐக் காணவும்).

**மனிதர்களுடைய பாரம்பரியங்களின்படி அல்ல**

பாரம்பரியம் (Gk.: *paradosis*) என்பது [முன்னோர்களிடத்தில்] இருந்து நமக்கு கையளிக்கப்பட்ட போதனை அல்லது நடைமுறையாக உள்ளது. ஒரு பாரம்பரியம் நல்லதா அல்லது மோசமானதா என்று தீர்மானிக்க மூன்று சோதனைகள் உதவுகின்றன: (1) அதன் ஆதாரமூலம் என்ன? (2) அது தேவனுடைய போதனையுடன் ஏதேனும் ஒன்றைக் கூட்டுகிறதா அல்லது குறைக்கிறதா? (3) அது தேவன் தெரிந்து கொள்ளுதலை ஏற்படுத்தியுள்ள வட்டாரத்திற்குள்ளான நடைமுறையாக உள்ளதா?

பாரம்பரியத்தின் ஆதாரமூலம் முக்கியமானதாக உள்ளது. பாரம் பரியம் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளதென்றால், அதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். பாரம்பரியம் மனிதரிடத்தில் இருந்து வந்துள்ளதென்றால், அது தேவன் தெரிந்துகொள்ளுதலை ஏற்படுத்தியுள்ள வட்டாரத்திற்குள் ஒரு நடைமுறையைக்கூட்டாது இருக்கும்போது மாத் திரமே நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியும்.

மனிதருடைய கட்டளைகள் மற்றும் பாரம்பரியங்களைப் பற்றி வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரிடத்தில் இயேசு பின்வருமாறு உரைத்தார்:

> "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?" (மத்தேயு 15:3).
>
> " 'மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்' ... நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய், ..."
>
> ... "நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங் களையும் செய்கிறீர்கள்" (மாற்கு 7:7-13).

பவுல், "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" என்று எழுதினார் (கொலோசெயர் 2:8). தீத்துவுக்கு அவர் மூப்பர்கள் "யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தைவிட்டு விலகுகிற மனு ஷருடைய கற்பனைகளுக்கும்" செவிகொடாதிருக்க அறிவுறுத்தும்படி எழுதினார் (தீத்து 1:14).

இயேசுவைப் பின்பற்றுதல் என்பதே கிறிஸ்தவர்களின் இலக்காக

உள்ளது. நாம் தேவனுடைய போதனையில் உள்ளடக்கப்பட்டிராதவை களான, மனுஷரிடத்தில் இருந்து வரும் நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும்.

நல்ல பாரம்பரியங்களும் நடைமுறைகளும் அப்போஸ்தலர்கள் மற்றும் புதிய உடன்படிக்கையின் தீர்க்கதரிசிகள் ஆகியோர் மூலமாக இயேசுவினிடத்தில் இருந்து வந்துள்ளன (எபேசியர் 2:20; 3:5). இவைகள் நாம் பின்பற்ற வேண்டிய பாரம்பரியங்களாக உள்ளன (1 கொரிந்தியர் 11:1; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:6).

மனித பாரம்பரியங்கள் தேவன் ஏற்படுத்தியுள்ள தெரிவு ஒன்றுடன் முரண்படுமென்றால், அவை தவறானவைகளாக உள்ளன. தேவன் தெரிவு எதையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்றால், அவைகள் சரியானவை களாகவோ அல்லது தவறானவைகளாகவோ இருப்பதில்லை. நாம் இவற்றை நமது சொந்த மெய்யறிவின்படி நடைமுறைப்படுத்தலாம். ஞானஸ்நானம் என்பது ஒரு நல்ல உதாரணமாக உள்ளது. ஞானஸ் நானத்தில் நாம் கிறிஸ்துவுடனே “அடக்கம்” பண்ணப்படுகிறோம் (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). நாம் “முழுக்காட்டப்”பட்டால், தேவன் தெரிவுசெய்துள்ளதையே நாம் செய்கிறோம். தெளித்தல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட இயலாததாக உள்ள ஒரு மனிதப் பாரம்பரியத்தைக் கூட்டுவதாக உள்ளது, ஏனென்றால் தேவன் ஒரு மாறுபட்ட தெரிவை ஏற்படுத்தியிருக்கிறார். தண்ணீருக்குள் ஒருவரைப் பின்புறமாகச் சாய்த்தல் என்பது அவரைப் புதைப்பதற்கான பாரம்பரியமான வழிமுறையாக உள்ளது. பாரம்பரியம் என்ற வகையில், இது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக உள்ளது, ஆனால் அந்த நபர் முன்புறமாகவோ, பக்கவாட்டிலோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ முழுக்காட்டப்பட்டால் அதுவும் ஞானஸ்நானம் என்ற வகையில் சரியானதாகவே உள்ளது.

பாரம்பரியத்தின் ஆதாரமூலம் முக்கியமானதாக உள்ளது. ஒரு பாரம்பரியம் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளதென்றால், அதை நடைமுறைப்படுத்துதல் சரியானதாக உள்ளது. மனிதரிடத்தில் இருந்து வந்துள்ள ஒரு பாரம்பரியம், தேவன் தெரிவை ஏற்படுத்தியுள்ள வட்டாரத்திற்குள் இருப்பவற்றில் எதையும் மீறும் என்றால் அதை நடைமுறைப்படுத்துதல் தவறானதாக உள்ளது.

## ஆவியோடு ஆராதித்தல்

ஆராதித்தல் என்பது வடிவத்தில் மட்டுமல்ல, ஆனால் ஆவியோடும் சரியானதாக இருக்க வேண்டும். தேவன் உதடுகளின் அசைவைக் கண்டு அதன் இசையமைப்பைக் கேட்பது மாத்திரமின்றி, அவர் இருதயத்தின் இசையையும் கவனிக்கிறார். புறம்பான அசைவு மற்றும் இயக்கம் என்பவை மனிதனின் ஆத்துமாவில் இருந்து வராதவரையில் அவைகள் ஆராதனையின் கணம் ஒன்றை உண்டாக்க முடியாது. ஆராதனை என்பது உண்மையோடு “இருக்க வேண்டும்” அதுவுமல்லாமல் ஆவியோடும் “இருக்க வேண்டும்” (யோவான் 4:23, 24). தேவன் கட்டளையிட்டவற்றை மாத்திரம் உள்ளடக்கியிருக்கும் ஆராதனை வடிவங்கள்கூட ஆவியின் ஈடுபாடு இல்லாதபோது மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை.

தேவன் நேர்த்தியான ஒலிகளை மாத்திரமே விரும்பியிருந்தார் என்றால், சபை கூடும் இடம் ஒன்றில் தொழில்முறையிலான இசை, ஜெபங்கள், மற்றும் பிரசங்கங்கள் ஏற்படுத்தப்படலாம். தேவன் ஆவியோடு ஆராதித்தல் என்ற கருத்தின்மீது ஆர்வமற்றவராக இருப்பார் என்றால், மற்றவர்கள் இதை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் அல்லது ஒலிப்பதிவு செய்த நிகழ்ச்சியை ஒலிபரப்பிக்கொண்டிருக்கையில் சபையார் தங்கள் வீடுகளிலேயே இருக்கலாம்.

தேவன் நமது புறம்பான வெளிப்பாடுகளை விரும்புகிறார்; ஆனால் அதைக்காட்டிலும் அதிகமாக, அவர் இருதயத்தின் கூட்டிணைவை விரும்புகிறார். கிறிஸ்தவர்கள் "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உ[த]ங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ண" வேண்டும் என்ற செயல் ஆராதனையில் உள்ளடக்கப்பட்டாக வேண்டும் என்று பவுல் எழுதினார் (எபேசியர் 5:19). நாம் நமது இருதயங்களின் ஆழத்தில் இருந்து தேவனைச் சென்றடைந்தால் மாத்திரமே நமது செயல்பாடுகள் ஏற்புடையவைகளாக இருக்கும்; இல்லையென்றால், நமது முயற்சிகள் யாவும் வெறுமையும் மதிப்பற்றவைகளுமாக இருக்கும்.

இயேசுவுக்குக் கீழ்ப்படிதல்மூலம் நாம் அவர்மீது கொண்டுள்ள நமது அன்பைக் காண்பிக்க முடியும் (யோவான் 14:15, 21-23). சீஷர்களானவர்களுக்கு, தாம் கட்டளையிட்ட யாவற்றையும் போதிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்களுக்கு அவர் கூறினார் (மத்தேயு 28:20).

அவர் கட்டளையிட்ட யாவற்றையும் நாம் செய்தல் என்பதில் உள்ள மறைவான கருத்துக்கள் யாவை? (1) நாம் அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் செய்வோம், எந்தக்கட்டளையையும் செய்யப்படாது விடாமல் இது நடைபெறும். (2) நாம் அவர் கட்டளையிட்டவற்றிற்கும் அதிகமாக எதையும் செய்யமாட்டோம். அவர் கட்டளையிட்டவற்றைக் காட்டிலும் கூடுதலாக எதையேனும் செய்தல் என்பது அவர் கட்டளை யிட்டவற்றைச் செய்தோம் என்பதாக இருக்காது. (3) நாம் அவர் கட்டளையிட்டவற்றிற்கும் குறைவாக எதையும் செய்யமாட்டோம். நாம் அவ்வாறு குறைவாகச் செய்தால், அவர் கட்டளையிட்ட யாவற்றையும் கைக்கொள்வதில்லை என்றாகும். (4) நாம் அவர் கட்டளையிட்டவற்றில் எதையும் மாற்றாமல் இருப்போம். நாம் அவ்வாறு மாற்றினால், அவர் கட்டளையிட்டவை எவையோ, அவைகளைச் செய்பவர்களாக இருக்க மாட்டோம்.

அப்போஸ்தலர்கள் இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் கடைப் பிடிக்கும்படி அவரது பின்பற்றாளர்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர். முதல் கிறிஸ்தவர்களைப் பற்றி லூக்கா, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தி[ல்] ... உறுதியாய்த் தரித்திருந்தனர்" என்று எழுதினார் (நடபடிகள் 2:42). சபையின் ஆராதனைக்கான வழிகாட்டும் குறிப்புகள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் "எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்" என்று பவுல் போதித்தார் (1 கொரிந்தியர் 4:6).

# தொகுப்புரை

உண்மையான ஆராதனை என்பது தேவனால் அமைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குள்ளானதாக இருக்க வேண்டும். அவர் தம்மை ஆவியோடும் உண்மையோடும் நாம் ஆராதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர் கட்டளையிட்டவற்றில் இருந்து நாம் எதையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது, ஆனால் அவர் கேட்டுக்கொண்டுள்ள ஆராதனையின் எளிய வனப்பிற்கு நம்மையே நாம் வரையறைப்படுத்திக் கொண்டாக வேண்டும். நாம் மனிதர்களைப் பிரியப்படுத்துவதற்கல்ல, ஆனால் தேவனைத் துதிப்பதற்காகவே ஆராதிக்க வேண்டும்.

# புதிய உடன்படிக்கையின்கீழ் உண்மையான ஆராதனை

*யூதர்களின் விக்கிரக ஆராதனையும் ஆராதனையில் புறதெய்வ நடைமுறைகளைப் பயன்படுத்துதலும் தேவனுக்கு ஏற்பில்லாதவைகளாக இருந்தன என்று நாம் கற்றிருக்கிறோம். வேதாகமத்தின் தேவன் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் (யாத்திராகமம் 20:3-5) மற்றும் அவர் உண்மையுள்ள ஒரே தேவனாக இருக்கிறார். அவர் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டும், மற்றும் அவர் குறிப்பிட்ட வழியில் மாத்திரமே அவர் ஆராதிக்கப்பட வேண்டும்.*

*இயேசு, உபாகமம் 6:13 மற்றும் 10:20 வசனங்களைப் பொழிப்புரை செய்து, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று உரைத்தார் (மத்தேயு 4:10). மற்ற எல்லாத் தேவர்களும் விலக்கப்பட்டுள்ளனர். ஆராதிப்பவர்கள் தேவன் ஒருவரை மாத்திரமே ஆராதிக்க வேண்டியவர்களாகவும் அவரால் கட்டளையிடப்பட்டுள்ளதை மாத்திரம் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். மோசே பின்வருமாறு எச்சரித்தார்,*

> *உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக. உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே (உபாகமம் 6:14, 15).*

## ஆராதனையின் எல்லைகள்

*இஸ்ரவேல் மக்கள் "தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ள வேண்டும்" என்று மோசேயின் மூலமாகத் தேவன் வெளிப்படுத்தினார் (உபாகமம் 6:2). இந்தக் கூற்று, அவர்கள் - தேவன் கட்டளையிட்டுள்ளவற்றிற்குக் குறைவாக அல்ல ஆனால் - எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் தேர்ந்துகொள்ளவோ அல்லது குறிப்பாகச் சிலவற்றை எடுத்துக்கொள்ளவோ கூடாதிருந்தது, ஆனால் அவர்கள் தேவனுடைய பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கட்டளையையும் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது.*

மேலும், இஸ்ரவேல் மக்கள் தேவன் கட்டளையிட்டவற்றை மாத்திரம் பின்பற்ற வேண்டியிருந்தது. "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக" (உபாகமம் 5:32). இங்கு "படியே" என்ற வார்த்தை "மட்டும்" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள், தேவன் கட்டளையிட்டவற்றை மாத்திரம் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இந்தச் செய்தி எண்ணற்ற முறைகள் இஸ்ரவேல் மக்களுக்குத் திரும்பக் கூறப்பட்டது மற்றும் இஸ்ரவேல் அரசர்களுக்கும் கட்டளையிடப்பட்டது (உபாகமம் 17:20; 28:14; யோசுவா 1:7; 23:6; நீதிமொழிகள் 4:27).

அவர்கள் தேவனுடைய கட்டளைகளுடன் ஒன்றையும் சேர்க்கவோ அல்லது அவற்றில் இருந்து ஒன்றையும் குறைக்கவோ கூடாதிருந்தது. "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" (உபாகமம் 4:2; 12:32; நீதிமொழிகள் 30:6ஐயும் காணவும்).

தேவனுடைய கட்டளைகளில் இருந்து மக்கள் ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று அவர் குறிப்பிட்டார். இதற்கு அவரது கட்டளைகள் காக்கப்பட வேண்டும் என்பதே காரணமாக இருந்தது (உபாகமம் 4:2). தேவனுடைய கட்டளைகளுடன் கூட்டப்படுபவை எவையும் தேவனுடைய கட்டளைகளாயிராமல் மனுதருடைய முன்னுரிமைகளாக இருந்தன. இவ்வாறு கூட்டப்படுபவற்றை எவரேனும் கடைப்பிடித்தால், அவர் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. தேவனுடைய கட்டளைகளில் இருந்து எவற்றையேனும் குறைக்கிற எவரொருவரும் தேவன் கேட்டுக்கொண்டுள்ள எல்லாவற்றையும் செய்யத் தவறியபடியால், அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாதவராக இருந்தார்.

புதிய ஏற்பாட்டின்கீழ் இருப்பவர்களுக்கும் இயேசு இதே கொள்கையைப் போதித்தார். அவரைப் பின்பற்றுபவர்கள், அவரது சீஷர்களாகிறவர்களுக்கு "நான் [இயேசு] கட்டளையிட்ட யாவற்றையும் கடைப்பிடிக்கும்படி" போதிக்க வேண்டும் என்று அவர் கூறினார் (மத்தேயு 28:20). அவர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இருந்து எவரொருவரும் ஒன்றையும் கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது என்று கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19). இது வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு மாத்திரமே நடைமுறைப்படுகிறது என்று சிலர் உரைத்துள்ளனர். சந்தர்ப்பப்பொருளில், அது உண்மை யாகவே உள்ளது, ஆனால் தேவன் வேதாகமத்தின் மற்ற புத்தகங்களைக் காட்டிலும் அந்தப்புத்தகத்தைப் பற்றி அதிகமாக நினைக்கிறாரா? வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்துடன் ஒன்றைக் கூட்டுதல் அல்லது அதில் இருந்து ஒன்றை எடுத்துப்போடுதல் என்பது தவறானதாகவும், மற்ற வேதவசனங்களுக்கு அவ்வாறு செய்தல் சரியானதாகவும் இருக்கிறதா?

பவுல் கிறிஸ்தவக் கொள்கைகளை உள்ளடக்க வேண்டியதாக இருக்கும் "சுவிசேஷம்," என்பது பற்றி எழுதினார் (1 தீமோத்தேயு 1:9-11), அதாவது வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பவர்கள் சபிக்கப்பட்டவர்

களாக இருக்கின்றனர் என்று அவர் எழுதினார் (கலாத்தியர் 1:8, 9). இந்த விஷயத்தைப் பற்றி யோவான், “கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத் திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்” என்று எழுதியதன்மூலம் குறிப்பிட்டார் (2 யோவான் 9). தேவனைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை “ஆவியிலும் உண்மையிலும்” தொழுதுகொள்ள வேண்டும் என்று இயேசு கூறினார் (யோவான் 4:24). தேவன் வரையறைகளை அமைத்துள்ளார், இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நாடுபவர்கள் இந்த வரையறைகளுக்குள் நிலைத்திருக்க வேண்டும் (எபிரெயர் 5:9). இதே விஷயம் அவரை ஏற்ற வகையில் ஆராதிக்க விரும்புபவர்களுக்கும் உண்மையாக உள்ளது.

தேவன் குறிப்பிடாதவற்றை ஆராதனை நடைமுறைகளில் அறிமுகப்படுத்துபவர்கள், நாம் ஆராதனையில் பயன்படுத்த வேண்டிய ஒவ்வொன்றையும் தேவன் குறிப்பிட்டிருக்கவில்லை என்று மறைமுகமாகக் குறிப்பிடுகின்றனர். இப்படிப்பட்ட எண்ணப்போக்கு தேவனுடைய வெளிப்படுத்துதலின் முழுமைத்தன்மையை மறுக்கிறது.

## உண்மையோடு தொழுதுகொள்ளுதல்

புதிய உடன்படிக்கையின்கீழ் ஆராதனை என்பது இயேசு வெளிப் படுத்திய சத்தியத்தின்படியானதாக இருக்க வேண்டும். யாக்கோபின் கிணற்றருகில் இயேசுவைச் சந்தித்த சமாரியப் பெண், ஆராதிக்கும் இடம் பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டாள். சமாரியர்கள் கெரீசீம் மலையில் ஆராதித்தனர், ஆனால் யூதர்கள் எருசலேமில் ஆராதித்தனர்.

எருசலேமில் ஆராதனை என்பது சரியானதாக இருந்தது என்று இயேசு சுட்டிக்காண்பித்தார். அவர் சமாரியர்களின் ஆராதனையை யூதர்களின் ஆராதனையுடன் தொடர்புபடுத்தி அதைப்பற்றி, “நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது” என்று கூறினார் (யோவான் 4:22). மாற்றம் ஒன்று விரைவில் வரும், அப்போது உண்மையில் ஆராதிப்பவர்கள் “ஆவியோடும் உண்மை யோடும்” ஆராதிப்பார்கள் (யோவான் 4:23, 24). ஆராதனை என்பது ஆவியோடும் உண்மையோடும் “இருக்க வேண்டும்.” வேறு எந்த விருப்பத் தேர்வும் அனுமதிக்கப்படுவதில்லை. மறைவான குறிப்பு தெளிவாக உள்ளது: சமாரியர்கள் உண்மையோடு தொழுதுகொள்பவர்களாக இருக்கவில்லை. அவர்கள் யூதர்கள் செய்ததுபோன்று அதே தேவனையே விசுவாசித்தனர், ஆனால் அவர்கள் தவறான இடத்தில் ஆராதித்துக் கொண்டிருந்தனர். யோவான் 4:21-24 பின்வருபவற்றைப் போதிக்கிறது ...

- தேவனை ஆராதிக்கும் எல்லா ஆராதனையும் தேவனுக்கு ஏற்புடையதாக இருப்பதில்லை. பெண்ணிடத்தில் இயேசுவின் கூற்றானது, சமாரியர்கள் ஆராதித்தாலும், அவர்கள் தங்கள் ஆராதனையில் சரியானவர்களாக இருக்கவில்லை என்பதைக்

காண்பித்தது.

- வெறும் ஆராதனையைக் காட்டிலும் அதிகமானவற்றைத் தேவன் விரும்புகிறார். சமாரியர்கள் தேவனை ஆராதித்தனர், ஆனால் அவர்கள் "அறியாததை ஆராதிக்கும்" அளவுக்கு அதை அவ்வளவு அறியாமையுடன் செய்தனர். அவர்களின் ஆராதனை தவறானதாக இருந்தது.
- யூதத்துவ ஆராதனை இனியும் ஆராதனைக்கான வழியாக இருப்பதில்லை. நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆராதனைக்குரிய இடமாகத், தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருந்த இடமான எருசலேம், இனியும் ஆராதனைக்குரிய இடமாக இருப்பதில்லை.
- வரும் என்று இயேசு கூறிய காலமான கிறிஸ்தவ யுகத்தில், தேவன் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதை மாத்திரமே ஏற்றுக்கொள்வார்.

உண்மை [சத்தியம்] என்பது எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? சத்தியம் என்பது இயேசுவின்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவான் 1:14, 17). இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருப்பதன்மூலம் நாம், "சத்தியத்தை அறிய" முடியும் (யோவான் 8:32). இயேசுவின் வார்த்தைகள், தேவனிடத்தில் இருந்து வருவதால் (யோவான் 7:16; 12:49, 50; 14:24ஆ; 17:8), சத்தியமாக இருக்கின்றன (யோவான் 17:17). சத்தியத்தின்படி இருக்கிறவர்கள் இயேசுவின் குரலைக்கேட்கின்றனர் (யோவான் 18:37), ஏனென்றால் "இயேசுவுக்குள்" சத்தியம் இருக்கிறது (எபேசியர் 4:21).

எனவே, நாம், இயேசு சத்தியத்தைக் கொண்டுவந்துள்ளார் என்பதையும் சத்தியம் அவருக்குள் இருக்கிறது என்பதையும் காணுகிறோம்; இந்த சத்தியம் தேவனுடைய வசனத்தில் உள்ளது. மற்றும் ஆவியானவர் மூலமாக சகல சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், ஆராதனையில் நாம் செய்கிற ஒவ்வொன்றும் இயேசுவினால் போதிக்கப் பட்டுள்ள சத்தியத்தால் வரையறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆராதனை என்பது இனியும் நியாயப்பிரமாணத்தின் போதனையின்படியானதாக இருப்பதில்லை. நாம் இயேசுவின் வார்த்தைகளில் தொடர்ந்து நிலைத் திருந்தால் சத்தியத்தை அறிய முடியும்.

### நியாயப்பிரமாணத்தின்படி அல்ல

புதிய ஏற்பாட்டு ஆராதனை நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இருப்பதில்லை. மோசே நியாயப்பிரமாணத்தைக் கொண்டுவந்தார்; இயேசு கிருபையையும் சத்தியத்தையும் கொண்டு வந்தார் (யோவான் 1:17). அந்த சத்தியம் கிறிஸ்தவ ஆராதனைக்கு நடைமுறைப்படுகிறது. சத்தியம் மோசேயின் மூலமாக வந்திருக்கவில்லை என்றாலும், அவரது போதனை தவறானதல்ல. மோசே, இயேசு கொண்டு வந்த சத்தியத்தின் நிழலை, மிகச்சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்தினார். "இப்படியிருக்க, நியாயப் பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் ...

நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்" (எபிரெயர் 10:1அ). நியாயப்பிர மாணத்தின் நடைமுறைகள் "பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது" (எபிரெயர் 8:5). இந்தக் காரணத்தினால், கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையைப் பழைய ஏற்பாட்டில் போதித்து நடைமுறைப்படுத்தப்பட்டவற்றின் அடிப்படையில் அமைப்பதில்லை. கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் ஆராதிப்பார்கள் என்றால், இன்றைய நாட்களில் ஆராதனையில் மிருகபலிகளைச் செலுத்த வேண்டியிருக்கும்.

இயேசுவின் பலியானது பாவ மன்னிப்புக்காகச் செலுத்தப்பட்ட மிருகபலி என்ற நிழலை நிறைவு செய்தது. நியாயப்பிரமாணம் நிறை வேற்றப்பட்டது அல்லது நீக்கப்பட்டது என்று வேதாகமம் கூறுகிறது (எபேசியர் 2:14, 15). ஆகையால் - பலிகள் உட்பட - நியாயப்பிரமாணத்தின் கீழான ஆராதனையின் வடிவங்கள் நீக்கிப்போடப்பட்டுள்ளன.

புதிய உடன்படிக்கையின்கீழ் உள்ளவர்கள் இயேசுவின் போதனையைக் கொண்டே நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48). நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தவர்களை இயேசுவின் போதனை நியாயந்தீர்க்காது. நியாயப்பிரமாணமே அவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் அடிப்படையாக இருக்கும்: "எவர்கள் நியாயப்பிர மாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள்" (ரோமர் 2:12ஆ).

நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் தர அளவையானது, நியாயப்பிரமாணத்தின்கீழ் இராதவர்களுக்கான நியாயத்தீர்ப்பில் இருந்து வேறுபடுகிறது. நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தவர்களை நியாயந்தீர்க்க மாத்திரமே நியாயப்பிரமாணம் பயன்படுத்தப்படும். அது நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்தவர்களையோ, நியாயப்பிரமாணத்தின் காலத்தின்போது வாழ்ந்த புறஜாதியாரையோ (ரோமர் 2:14), அல்லது நியாயப்பிரமாணம் நீக்கிப்போடப்பட்டபின்பு வாழ்ந்துள்ள எவரையுமோ (எபிரெயர் 10:9) நியாயந்தீர்க்காது.

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஆராதனையில் அறிவுறுத்துதல் களுக்கு அவரையே நோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. நியாயப்பிர மாணத்தின் கீழான ஆராதனை நடைமுறைகள் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுவதில்லை. நியாயப்பிரமாணமல்ல, இயேசுவின் வார்த்தைகளே (யோவான் 12:48), அவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் அடிப்படையாக இருக்கும்.

நியாயப்பிரமாணமானது புதிய ஏற்பாட்டு ஆராதனையின் ஆவிக்குரிய உண்மை நிலைகளுடைய பௌதீக நிழல்களை உள்ளடக்கியது. புதிய உடன்படிக்கையின்கீழ், ஆராதனை என்பது ஆவியோடும் உண்மையோடும் ஏறெடுக்கப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் மிருக பலிகளுக்குப் பதிலாக, "இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை" செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர் (1 பேதுரு 2:5ஆ).

நாம் "பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி" ஊழியம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம் (ரோமர் 7:6; 2:29; 2 கொரிந்தியர் 3:6; பிலிப்பியர் 3:3ஐக் காணவும்). "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபிரெயர் 13:15).

**மனச்சாட்சியின்படி அல்ல**

இயேசுவினால் கட்டளையிடப்பட்டிராத நடைமுறைகள் பல ஆண்டுகளாக ஆராதனையில் பயன்படுத்தப்பட்டுள்ளதால், மக்களில் பலர் அவற்றைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்தப்பட்டிருப்பதாக உணருகின்றனர். அவர்களின் மனச்சாட்சிகள் அவர்களைத் தொந்தரவு செய்யாதிருந்தால், அவர்களின் ஆராதனையில் தவறு எதுவும் இல்லை என்று அவர்கள் முடிவு செய்கின்றனர்.

"மனச்சாட்சி" என்ற வார்த்தை, லத்தீன் மொழியில் "உடன்" என்று அர்த்தப்படுகிற *con* மற்றும் "அறிவு" என்று அர்த்தப்படுகிற *science* என்ற வார்த்தைகளில் இருந்து வருகிறது. இதில் பிந்திய வார்த்தையானது கிரேக்க மொழியில் "அறிவுடன்" என்று அர்த்தப்படுகிற *suneidesis* என்ற வார்த்தைகளுக்குச் சமமானதாக உள்ளது. நமது தனிப்பட்ட நீதிவழங்கும் முறைமையாக உள்ள மனச்சாட்சி என்பது, நாம் கொண்டுள்ள அறிவைச் சார்ந்துள்ளது. ஒருவர் நல்மனச்சாட்சியைக் கொண்டிருந்தால், அது அவர் சரியானதை நினைக்கின்றபோது அதை அங்கீகரித்து, சரியான தகவல்களாகக் காணப்படுபவற்றின் அடிப்படையில் முடிவுகளைத் தரவழைக்க அவரை ஊக்குவிக்கும். ஒருவரின் மனச்சாட்சி நல்லதாக இராதிருந்தால், அவர் தாம் தவறானதென்று நினைக்கின்றவற்றைச் செய்தாலும் அல்லது தமது முன் அனுமானங்களைச் சந்திக்க உண்மைகளைப் புரட்டினாலும் கவலைப்படமாட்டார்.

பவுல் கிறிஸ்தவர்களைக் கொலைசெய்ய வேண்டும் என்று நினைத்தார். தேவனைத் தவிர மற்ற தேவர்களை ஆராதித்த இஸ்ரவேல் மக்கள் கொலைசெய்யப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் போதித்தது (யாத்திராகமம் 22:20; உபாகமம் 17:2-5). இயேசுவை ஆராதித்தவர்களைப் பவுல் நல்மனச்சாட்சியுடனேதான் கொலை செய்தார் (நடபடிகள் 23:1; 24:16), ஏனென்றால் அவர்கள் வேறே தேவனை ஆராதித்தனர் என்று அவர் நினைத்தார் (நடபடிகள் 26:9).

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபோதும், அவ்வாறு செய்வது சரியானது என்று நாம் நினைத்தால், நமது மனச்சாட்சி நம்மை தொந்தரவு செய்யாது. நமது சிந்தனை, தேவனுடைய வசனத்தினால் வழிநடத்தப்பட்டு, வசனத்தில் கூறப்படுபவற்றிற்கு நாம் கீழ்ப்படிந்தால், இடர்ப்பாடற்ற மனச்சாட்சி விளையும். நாம் சரியானவற்றைச் செய்கின்றோம் என்று நினைத்துக்கொண்டு தவறான சிலவற்றைச் செய்தோம் என்றால் நமது மனச்சாட்சி நம்மைக் கவலைப்படுத்தக்கூடும். துர்மனச்சாட்சியானது, ஒருவர் தாம் உண்மையென்று அறிந்துள்ளவற்றிற்கு

*நேர்மாறாக வாழ்வதைப் பற்றி அவரைக் கவலைப்படுத்தாது. நடைமுறை வழக்கம் ஒன்றின் சரியான தன்மையை நமது மனச்சாட்சியினால் முடிவு செய்வதற்குப் பதிலாக, நாம் தேவனுடைய வசனத்தை நமது தர அளவையாகப் பயன்படுத்த வேண்டும் (1 யோவான் 4:1, 6ஐக் காணவும்).*

**மனிதர்களுடைய பாரம்பரியங்களின்படி அல்ல**

*பாரம்பரியம்* (Gk.: *paradosis*) *என்பது [முன்னோர்களிடத்தில்] இருந்து நமக்கு கையளிக்கப்பட்ட போதனை அல்லது நடைமுறையாக உள்ளது. ஒரு பாரம்பரியம் நல்லதா அல்லது மோசமானதா என்று தீர்மானிக்க மூன்று சோதனைகள் உதவுகின்றன: (1) அதன் ஆதாரமூலம் என்ன? (2) அது தேவனுடைய போதனையுடன் ஏதேனும் ஒன்றைக் கூட்டுகிறதா அல்லது குறைக்கிறதா? (3) அது தேவன் தெரிந்து கொள்ளுதலை ஏற்படுத்தியுள்ள வட்டாரத்திற்குள்ளான நடைமுறையாக உள்ளதா?*

*பாரம்பரியத்தின் ஆதாரமூலம் முக்கியமானதாக உள்ளது. பாரம் பரியம் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளதென்றால், அதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். பாரம்பரியம் மனிதரிடத்தில் இருந்து வந்துள்ளதென்றால், அது தேவன் தெரிந்துகொள்ளுதலை ஏற்படுத்தியுள்ள வட்டாரத்திற்குள் ஒரு நடைமுறையைக்கூட்டாது இருக்கும்போது மாத் திரமே நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியும்.*

*மனிதருடைய கட்டளைகள் மற்றும் பாரம்பரியங்களைப் பற்றி வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரிடத்தில் இயேசு பின்வருமாறு உரைத்தார்:*

> *"நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?" (மத்தேயு 15:3).*
>
> *" 'மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்' ... நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய், ..."*
>
> *... "நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங் களையும் செய்கிறீர்கள்" (மாற்கு 7:7-13).*

*பவுல், "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" என்று எழுதினார் (கொலோசெயர் 2:8). தீத்துவுக்கு அவர் மூப்பர்கள் "யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தைவிட்டு விலகுகிற மனு ஷருடைய கற்பனைகளுக்கும்" செவிகொடாதிருக்க அறிவுறுத்தும்படி எழுதினார் (தீத்து 1:14).*

*இயேசுவைப் பின்பற்றுதல் என்பதே கிறிஸ்தவர்களின் இலக்காக*

உள்ளது. நாம் தேவனுடைய போதனையில் உள்ளடக்கப்பட்டிராதவை களான, மனுஷரிடத்தில் இருந்து வரும் நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும்.

நல்ல பாரம்பரியங்களும் நடைமுறைகளும் அப்போஸ்தலர்கள் மற்றும் புதிய உடன்படிக்கையின் தீர்க்கதரிசிகள் ஆகியோர் மூலமாக இயேசுவினிடத்தில் இருந்து வந்துள்ளன (எபேசியர் 2:20; 3:5). இவைகள் நாம் பின்பற்ற வேண்டிய பாரம்பரியங்களாக உள்ளன (1 கொரிந்தியர் 11:1; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:6).

மனித பாரம்பரியங்கள் தேவன் ஏற்படுத்தியுள்ள தெரிவு ஒன்றுடன் முரண்படுமென்றால், அவை தவறானவைகளாக உள்ளன. தேவன் தெரிவு எதையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்றால், அவைகள் சரியானவை களாகவோ அல்லது தவறானவைகளாகவோ இருப்பதில்லை. நாம் இவற்றை நமது சொந்த மெய்யறிவின்படி நடைமுறைப்படுத்தலாம். ஞானஸ்நானம் என்பது ஒரு நல்ல உதாரணமாக உள்ளது. ஞானஸ் நானத்தில் நாம் கிறிஸ்துவுடனே "அடக்கம்" பண்ணப்படுகிறோம் (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). நாம் "முழுக்காட்டப்"பட்டால், தேவன் தெரிவுசெய்துள்ளதையே நாம் செய்கிறோம். தெளித்தல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட இயலாததாக உள்ள ஒரு மனிதப் பாரம்பரியத்தைக் கூட்டுவதாக உள்ளது, ஏனென்றால் தேவன் ஒரு மாறுபட்ட தெரிவை ஏற்படுத்தியிருக்கிறார். தண்ணீருக்குள் ஒருவரைப் பின்புறமாகச் சாய்த்தல் என்பது அவரைப் புதைப்பதற்கான பாரம்பரியமான வழிமுறையாக உள்ளது. பாரம்பரியம் என்ற வகையில், இது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக உள்ளது, ஆனால் அந்த நபர் முன்புறமாகவோ, பக்கவாட்டிலோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ முழுக்காட்டப்பட்டால் அதுவும் ஞானஸ்நானம் என்ற வகையில் சரியானதாகவே உள்ளது.

பாரம்பரியத்தின் ஆதாரமூலம் முக்கியமானதாக உள்ளது. ஒரு பாரம்பரியம் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளதென்றால், அதை நடைமுறைப்படுத்துதல் சரியானதாக உள்ளது. மனிதரிடத்தில் இருந்து வந்துள்ள ஒரு பாரம்பரியம், தேவன் தெரிவை ஏற்படுத்தியுள்ள வட்டாரத்திற்குள் இருப்பவற்றில் எதையும் மீறும் என்றால் அதை நடைமுறைப்படுத்துதல் தவறானதாக உள்ளது.

## ஆவியோடு ஆராதித்தல்

ஆராதித்தல் என்பது வடிவத்தில் மட்டுமல்ல, ஆனால் ஆவியோடும் சரியானதாக இருக்க வேண்டும். தேவன் உதடுகளின் அசைவைக் கண்டு அதன் இசையமைப்பைக் கேட்பது மாத்திரமின்றி, அவர் இருதயத்தின் இசையையும் கவனிக்கிறார். புறம்பான அசைவு மற்றும் இயக்கம் என்பவை மனிதனின் ஆத்துமாவில் இருந்து வராதவரையில் அவைகள் ஆராதனையின் கணம் ஒன்றை உண்டாக்க முடியாது. ஆராதனை என்பது உண்மையோடு "இருக்க வேண்டும்" அதுவுமல்லாமல் ஆவியோடும் "இருக்க வேண்டும்" (யோவான் 4:23, 24). தேவன் கட்டளையிட்டவற்றை மாத்திரம் உள்ளடக்கியிருக்கும் ஆராதனை வடிவங்கள்கூட ஆவியின் ஈடுபாடு இல்லாதபோது மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை.

*தேவன் நேர்த்தியான ஒலிகளை மாத்திரமே விரும்பியிருந்தார் என்றால், சபை கூடும் இடம் ஒன்றில் தொழில்முறையிலான இசை, ஜெபங்கள், மற்றும் பிரசங்கங்கள் ஏற்படுத்தப்படலாம். தேவன் ஆவியோடு ஆராதித்தல் என்ற கருத்தின்மீது ஆர்வமற்றவராக இருப்பார் என்றால், மற்றவர்கள் இதை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் அல்லது ஒலிப்பதிவு செய்த நிகழ்ச்சியை ஒலிபரப்பிக்கொண்டிருக்கையில் சபையார் தங்கள் வீடுகளிலேயே இருக்கலாம்.*

*தேவன் நமது புறம்பான வெளிப்பாடுகளை விரும்புகிறார்; ஆனால் அதைக்காட்டிலும் அதிகமாக, அவர் இருதயத்தின் கூட்டிணைவை விரும்புகிறார். கிறிஸ்தவர்கள் "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உ[த]ங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ண" வேண்டும் என்ற செயல் ஆராதனையில் உள்ளடக்கப்பட்டாக வேண்டும் என்று பவுல் எழுதினார் (எபேசியர் 5:19). நாம் நமது இருதயங்களின் ஆழத்தில் இருந்து தேவனைச் சென்றடைந்தால் மாத்திரமே நமது செயல்பாடுகள் ஏற்புடையவைகளாக இருக்கும்; இல்லையென்றால், நமது முயற்சிகள் யாவும் வெறுமையும் மதிப்பற்றவைகளுமாக இருக்கும்.*

*இயேசுவுக்குக் கீழ்ப்படிதல்மூலம் நாம் அவர்மீது கொண்டுள்ள நமது அன்பைக் காண்பிக்க முடியும் (யோவான் 14:15, 21-23). சீஷர்களானவர் களுக்கு, தாம் கட்டளையிட்ட யாவற்றையும் போதிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்களுக்கு அவர் கூறினார் (மத்தேயு 28:20).*

*அவர் கட்டளையிட்ட யாவற்றையும் நாம் செய்தல் என்பதில் உள்ள மறைவான கருத்துக்கள் யாவை? (1) நாம் அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் செய்வோம், எந்தக்கட்டளையையும் செய்யப்படாது விடாமல் இது நடைபெறும். (2) நாம் அவர் கட்டளையிட்டவற்றிற்கும் அதிகமாக எதையும் செய்யமாட்டோம். அவர் கட்டளையிட்டவற்றைக் காட்டிலும் கூடுதலாக எதையேனும் செய்தல் என்பது அவர் கட்டளை யிட்டவற்றைச் செய்தோம் என்பதாக இருக்காது. (3) நாம் அவர் கட்டளையிட்டவற்றிற்கும் குறைவாக எதையும் செய்யமாட்டோம். நாம் அவ்வாறு குறைவாகச் செய்தால், அவர் கட்டளையிட்ட யாவற்றையும் கைக்கொள்வதில்லை என்றாகும். (4) நாம் அவர் கட்டளையிட்டவற்றில் எதையும் மாற்றாமல் இருப்போம். நாம் அவ்வாறு மாற்றினால், அவர் கட்டளையிட்டவை எவையோ, அவைகளைச் செய்பவர்களாக இருக்க மாட்டோம்.*

*அப்போஸ்தலர்கள் இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் கடைப் பிடிக்கும்படி அவரது பின்பற்றாளர்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர். முதல் கிறிஸ்தவர்களைப் பற்றி லூக்கா, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தி[ல்] ... உறுதியாய்த் தரித்திருந்தனர்" என்று எழுதினார் (நடபடிகள் 2:42). சபையின் ஆராதனைக்கான வழிகாட்டும் குறிப்புகள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் "எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்" என்று பவுல் போதித்தார் (1 கொரிந்தியர் 4:6).*

# தொகுப்புரை

உண்மையான ஆராதனை என்பது தேவனால் அமைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குள்ளானதாக இருக்க வேண்டும். அவர் தம்மை ஆவியோடும் உண்மையோடும் நாம் ஆராதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர் கட்டளையிட்டவற்றில் இருந்து நாம் எதையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது, ஆனால் அவர் கேட்டுக்கொண்டுள்ள ஆராதனையின் எளிய வனப்பிற்கு நம்மையே நாம் வரையறைப்படுத்திக் கொண்டாக வேண்டும். நாம் மனிதர்களைப் பிரியப்படுத்துவதற்கல்ல, ஆனால் தேவனைத் துதிப்பதற்காகவே ஆராதிக்க வேண்டும்.

## 8

# ஜெபத்தின் மூலம் ஆராதனை

ஜெபம் என்பது நாம் தேவனுடன் நெருங்கிய வகையில் உறவுகொண்டிருக்கக்கூடிய ஒரு வழியாக உள்ளது, ஏனெனில் ஜெபத்தில், நாம் நமது உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தவும் நமது ஆத்துமாக் களை முற்றிலுமாக திறந்து காட்டவும் முடியும். ஜெபத்தின் மூலமாக நாம், தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கவும், மிகவும் அற்பமானவற்றில் இருந்து நமது வாழ்வின் மிக முக்கியமான அம்சங்கள் வரையிலான நமது இருதயங்களில் உள்ள எவற்றையும் அவருக்குத் தெரிவிக்க முடியும். "எல்லா வற்றையும்" (பிலிப்பியர் 4:6) நமது ஜெபங்களில் உள்ளடக்கப்பட முடியும், ஏனென்றால் எந்த ஒரு விஷயமும் தேவனுக்கு மிகவும் அற்ப மானதல்ல.

ஒருவேளை நமது ஜெபங்களில் பெரும்பான்மையானவை தேவனிடத்தில் இருந்து உதவிக்கு வேண்டுகோள்களாக இருக்கலாம். ஜெபத்திற்கு அப்படிப்பட்ட ஒரு அணுகுமுறையானது மிகவும் வரை யறைக்கு உட்பட்டதாக உள்ளது. நமது ஜெபங்கள், நன்றி செலுத்துதல், துதி, மற்றும் அவருடன் நாம் பகிர்ந்துகொள்ள விரும்பும் மற்ற பல சிந்தனைகள் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும். கருத்து விஷயம் எல்லைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. நமது வாழ்வின் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் தேவன் அக்கறை கொண்டுள்ளார்: நமது தோல்விகள், வெற்றிகள், இடர்ப்பாடுகள், மற்றும் சந்தோஷத்திற்கான காரணங்கள்.

நாம் ஜெபிக்கும்போது, பின்வருபவற்றை உணர்ந்தறிய வேண்டும்:

1. தேவன் தம்முடன் உரையாடுவதற்குத் தமது பிரசன்னத்திற்குள் நம்மை வரவேற்கத் தயாராக இருக்கிறார் (மத்தேயு 7:7; எபிரெயர் 4:16).

2. ஆவியானவர் நமக்கு உதவுகிறார் (ரோமர் 8:26, 27).

3. தேவன் சர்வவல்லமை உடையவராக இருக்கிறார் மற்றும் அவர் நமது வேண்டுகோள்களுக்கு பதில் அளிக்கக் கூடியவராக இருக்கிறார் (எபேசியர் 3:20).

4. நாம் நமது உள்ளார்ந்த உணர்வுகள், விருப்பங்கள், மற்றும் ஆசைகள் ஆகியவற்றைத் தேவனிடத்தில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உடையவர்களாக இருக்கிறோம் (பிலிப்பியர் 4:6).

5. நமது அன்றாடத் தேவைகளைச் சந்திப்பதற்கு நாம் தேவனைச் சார்ந்திருக்கிறோம் (பிலிப்பியர் 4:19).

6. நாம் முற்றிலும் வெளிப்படையாக இருப்பது தேவை, ஏனென்றால் தேவனுக்கு எல்லாம் வெளியரங்கமாக உள்ளது (எபிரெயர் 4:13).

7. நாம் சர்வவல்லவருக்கு முன்பாகத் தகுதியவற்றவர்களாக இருக்கி

றோம், ஆயினும் இயேசுவின் மத்தியஸ்தத்தின் மூலம் நாம் ஏற்றுக்கொள்ளப்படுதலைக் கொண்டிருக்கிறோம் (எபிரெயர் 4:14, 15).

8. தேவன் உற்றுக் கவனிக்கவும் மற்றும் பதில் அளிக்கவும் மனவிருப்பம் கொண்டுள்ளார் (1 பேதுரு 3:12).

தேவனை அறிந்தவர்களும் அவருடன் உள்ள நெருங்கிய உறவின் காரணமாக ஜெபிக்கக் கூடியவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில் ஜெபிப்பவர்களாக இருக்கின்றனர்.தேவனைப் பற்றி அறிவதே ஜெபிக்கக் கற்றுக்கொள்ளும் வழியாக உள்ளது. நாம் அவரை அறியும்போது, அவரிடத்தில் சிறப்பாகப் பேசுவது எவ்வாறு என்பதையும் அவருடன் எதைப் பகிர்ந்துகொள்வது என்பதையும் நாம் புரிந்துகொள்வோம். நாம் ஒருபோதும் நமது உள்ளார்ந்த உணர்வுகளைப் போதுமான அளவுக்கு வெளிப்படுத்தக் கூடாதவர்களாக இருப்போம், ஆனால் நமக்கு உதவி உண்டு. பரிசுத்த ஆவியானவர் நமது பெலனற்ற முயற்சிகளை எடுத்து அவற்றைத் தேவனுக்குப் புரியக்கூடிய வகையில் முன் வைக்கிறார் (ரோமர் 8:26, 27).

## வேதாகமத்தின் பாடக்கருத்து என்ற வகையில் ஜெபம்

ஜெபம் என்பது வேதாகமத்தின் மாபெரும் பாடக்கருத்துகளில் ஒன்றாக உள்ளது. எபிரெய வினைச்சொல்லான *palal* ("ஜெபித்தல்") மற்றும் பெயர்ச்சொல்லான *tephillah* ("ஜெபம்") என்பவை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட சில பிரதான சொற்களாக இருக்கின்றன. "மன்றாடுதல்," என்ற அர்த்தமுள்ள *nah* என்ற இன்னொரு எபிரெய வினைச்சொல் "கெஞ்சுதல்" அல்லது "ஜெபித்தல்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில், நாம் கிரேக்க மொழியில் *proseuchomai* ("ஜெபித்தல்") என்ற வினைச்சொல்லையும் *proseuche* ("ஜெபம்") என்ற பெயர்ச்சொல்லையும் காணுகிறோம்.

பழைய ஏற்பாட்டின் முப்பத்தி ஒன்பது புத்தகங்களில் பதினெட்டிலும், புதிய ஏற்பாட்டின் இருபத்தி ஏழு புத்தகங்களில் எட்டிலும், இவ்வார்த்தைகளில் குறைந்தபட்சம் ஒன்றாவது பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்ற புத்தகங்கள் "ஜெபித்தல்" மற்றும் "ஜெபம்" என்ற வார்த்தைகளை பயன்படுத்தியிராமற்போனாலும், அவற்றில் பெரும்பான்மையானவை, ஜெபத்தின் கருத்தை உள்ளடக்கியிருக்கின்றன. இஸ்ரவேல் மக்கள் "விண்ணப்பம் பண்ண" வேண்டும் என்று தேவன் கூறினார் (எசேக்கியேல் 36:37). தேவனிடம் மழைக்காக வேண்டிக்கொள்ளும்படி சகரியா கூறினார் (சகரியா 10:1). யோவான் "ஜெபித்தல்" என்று அர்த்தப்படும்படி "கேட்டல்" என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தினார் (யோவான் 14:13, 14, 16; 15:7, 16; 16:23, 24, 26; 1 யோவான் 3:22; 5:14-16).

# இயேசுவின் ஜெபங்கள்

இயேசுவின் வாழ்வில் அவர் ஜெபத்தில் செலவிட்ட நேரங்கள் கவனிக்கத்தக்க அம்சமாக உள்ளது. அவரது ஜெபங்கள் மற்ற சுவிசேஷ விவரங்களைக் காட்டிலும் லூக்கா சுவிசேஷத்தில் அதிகமாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. இங்கு இயேசு ஜெபித்ததாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள பதினேழு வேளைகளின் நல்ல தொகுப்புரை தரப்படுகிறது:

> *இவைகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்படலாம். (1) அவரது வாழ்வின் முக்கியமான சூழ்நிலைகளில் ஜெபங்கள்: (அ) அவரது ஞானஸ்நானம் (லூக்கா 3:21), (ஆ) அப்போஸ்தலர்களைத் தேர்ந்து கொள்ளுதல் (6:12, 13), (இ) அவர் மேசியா என்று அறிக்கையிடுதல் (9:18), (ஈ) அவர் மறுரூபமாகுதல் (9:29), (உ) சிலுவைக்கு முன் கெத்செமனேயில் (22:39, 40), மற்றும் (ஊ) சிலுவையில் (23:46). (2) அவரது ஊழியத்தின்போது ஜெபங்கள்: (அ) யூதத்தலைவர்களுடன் விவாதத்திற்கு முன்னதாக (5:16), (ஆ) "கர்த்தர் கற்பித்த ஜெபத்தை" அளிப்பதற்கு முன்னதாக (11:1), (இ) கிரேக்கர்கள் அவரிடத்தில் வந்தபோது (யோவான் 12:7, 8), மற்றும் (ஈ) ஐயாயிரம் பேருக்கு உணவளித்த பின்பு (மாற்கு 6:46). (3) அவரது அற்புதங்களின்போது ஜெபங்கள்: (அ) திரளான கூட்டத்தைக் குணமாக்கியபோது (1:35), (ஆ) ஐயாயிரம்பேர்களுக்கு உணவளிப்பதற்கு முன்பு (6:41), (இ) செவிடும் ஊமையுமான ஒருவனைக் குணமாக்குதல் (7:34), மற்றும் (ஈ) லாசருவை மரணத்தில் இருந்து எழுப்புதல் (யோவான் 11:41). (4) மற்றவர்களுக்காக ஜெபங்கள்: (அ) பதினொருவருக்காக ஜெபம் (17:6-19), (ஆ) சபை முழுவதற்கும் ஜெபம் (17:20-26), (இ) அவரைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக (லூக்கா 23:34), மற்றும் (ஈ) பேதுருவுக்காக (22:32).[1]*

இயேசு மற்றவர்களுக்காக ஜெபித்திருந்தபோதிலும், அவரது ஜெபங்களில் அவர் தம்மையும் உள்ளடக்கினார் (யோவான் 17:1-26).

தேவனுடன் உரையாடுதல் என்பது அவருக்கு முக்கியமானதாக இருந்தது. "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபிரெயர் 5:7). அவர் அப்போஸ்தலர்களைத் தேர்ந்துகொள்வதற்கு முன்பு, பிதாவினிடத்தில் இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12-16).

தமது பரலோக இல்லத்தில் இருந்து புறம்பே, பரலோகத்தின் பிதாவை விட்டுப் பிரிந்த நிலையில் இருந்தார். அவர் பிதாவின் சுயபிரசன்னத்தின் நெருக்கத்தை விட்டிருந்தார் மற்றும் அவருடன் அடிக்கடி பேச விரும்பினார் என்பது தெளிவு. நம்மைக் காட்டிலும் அவர் தேவனுடைய பிரசன்னத்தை அதிகம் முழுமையான அளவுக்கு உணர்ந்தறியக் கூடியவராக இருந்தபோதிலும், அவரது ஜெபவாழ்வு நமக்கு உதாரணமாக உள்ளது.

# ஜெபத்தைப்பற்றி இயேசுவின் போதனை

*இயேசு ஜெபித்தது மட்டுமின்றி, ஜெபத்தைப்பற்றி அவர் மாபெரும் பாடங்களையும் போதித்தார். இயேசு ஜெபிக்கையில், அவரது சீஷர்களில் ஒருவர், யோவான் தமது சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுத் தந்ததுபோல், எவ்வாறு ஜெபிப்பது என்று தங்களுக்கும் அவர் கற்றுத்தர வேண்டும் என்று அவரிடத்தில் கேட்டுக்கொண்டார். அவர் மிகவும் அடிக்கடி உண்மையுடன் ஜெபத்தில் இருப்பதை அவர்கள் கண்டது அவர்களை இந்த அறிவுறுத்தலை நாடும்படி செய்தது (லூக்கா 11:1). அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி "கர்த்தருடைய ஜெபம்" என்று அழைக்கப்படுகிற ஜெபத்தைக் கொடுத்தார் (லூக்கா 11:2-4; மத்தேயு 6:9-13ஐயும் காணவும்). "மாதிரி ஜெபம்" என்பது மிகவும் சிறப்பான தலைப்பாக இருக்கலாம்.*

*இந்த ஜெபம் முனைப்பானதாகவும் போலித்தனமற்றதாகவும் உள்ளது. இயேசு தமது சீஷர்களிடம், பிதாவை மதிப்புடன் அழைத்து வேண்டுகோள் விடுத்து, விரைவில் நிலைநாட்டப்பட இருந்த ராஜ்யத்தின் வருகைக்காக வேண்டுகோள் விடுக்கும்படி கேட்டார் (மத்தேயு 4:17; மாற்கு 1:15; 9:1). அவர்கள் தங்கள் அன்றாட உணவுக்காக, பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக, மன்னிக்கும் இருதயத்திற்காக, சோதனை வேளைகளில் உதவிக்காக, மற்றும் தீமையினின்று விடுவிக்கப்படுவதற்காக வேண்டுகோள் விடுக்கும்படி அறிவுறுத்தினார்.*

*இந்த ஜெபம் மனிதரின் அடிப்படைத் தேவைகளை விரிவான மொழியெதுவுமின்றி வெளிப்படுத்துகிறது என்பது இதன் அழகாக உள்ளது. இது தனது பொருளடக்கத்தில் முழுமையாக இருப்பதாகக் கருதப்பட வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. இயேசு, "இந்த ஜெபத்தை ஜெபியுங்கள்" என்று கூறவில்லை. மாறாக, அவர், "நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது" அல்லது "மாதிரியாக"* (KJV) *என்றே கூறினார் (மத்தேயு 6:9). இயேசு இந்த ஜெபத்தை நமது ஜெபங்களில் பண்புபட வேண்டிய எளிமைக்கு உதாரணமாகக் கொடுத்தார்.*

*இயேசு பரலோகத்தின் பிதாவை நோக்கி இரவு முழுவதும் ஜெபித்த போது (லூக்கா 6:12), அவர் இந்த ஜெபத்தை ஒப்பித்துக் கொண்டிருக்க வில்லை. "கர்த்தருடைய ஜெபத்தின்" கருத்துக்கள் எதுவும், பதிவு செய்யப் பட்டுள்ள இயேசுவின் நீண்ட ஜெபத்தில் அடங்கியுள்ள வார்த்தைகளில் அடங்கியிருப்பதில்லை (யோவான் 17:1-26). அவர் தம்மைப் பற்றி, தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றி மற்றும் அவர்களால் மனமாற்றம் அடைபவர்களைப் பற்றித் தமது பிதாவுடனான உரையாடலில் மிகவும் நேரடியாக இருந்தார். இந்த ஜெபத்தின் பொருளடக்கமானது "மாதிரி ஜெபத்தில்" உள்ளதுபோல் இராவிட்டாலும், இந்த ஜெபமானது குறிப்பிட்ட சூழ்நிலை ஒன்றைப் பற்றி ஜெபிப்பதற்கான உதாரணமாக இருக்க முடியும்.*

*நாம் ஜெபிக்கும்போது, பிறரைக் கவருவதற்காகப் புறம்பான காட்சிப்படுத்துதல்களைக் கொண்டிருக்கலாகாது என்று இயேசு போதித்தார். நாம் நமது தனிப்பட்ட ஜெபங்களில் தேவனுடன் அமைதி*

யான மற்றும் எளிமையான வகையில் உரையாட வேண்டும் (மத்தேயு 6:5, 6), நாம் பெருக்கமான வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்த லாகாது (மத்தேயு 6:7). முகத்தை விகாரப்படுத்திக் கொள்ளுதல், பக்தியாகத் தோன்றுகிற வாய்மொழிக்குரல்கள், மற்றும் கைகளின் அசைவுகள் போன்ற ஆடம்பரமான காட்சிப்படுத்துதல்கள் மனிதர்களைக் கவருவதாக உள்ளன. ஆனால் தேவனையல்ல. [இவற்றின்மூலம்] அவர் மனம் கவரப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை, இவற்றினால் அவர் மனம் கவரப்படவும் முடியாது. நாம் நமது மனித பலவீனத்தையும், நமது தேவைகளின் வேளைகளில் நமக்கு உதவுவதற்கு, நாம் அவரைச் சார்ந்திருக்க வேண்டியதையும் உணர்ந்தறிய வேண்டும் (எபிரெயர் 4:16). நாம் அவரைச் சார்ந்திருத்தலும் நாம் அவர்மீது கொண்டுள்ள விசுவாசமும், அவர் காணுகிற மற்றும் மதிக்கிற நெறிகளாக இருக்கின்றன (மத்தேயு 8:10; 15:28).

நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்க வேண்டும் என்று இயேசு உரைத்தார் (மத்தேயு 7:7). ஒரு மனிதர் அப்பம் தேவைப் படுகிற சூழ்நிலையில், அவர் நள்ளிரவு வேளையில் வேண்டுகோள் விடுத்தாலும், அவரது நண்பர் பதில் செய்யும் அதேவழியில் தேவன் நமக்கும் பதில்செயல் செய்வார் (லூக்கா 11:5-13).

நாம் மன்னிப்பிற்காகவும் ஜெபிக்க வேண்டும். தாழ்மையுடன் மன்னிப்புக் கேட்கும் தேவனுடைய பிள்ளைகள், தங்களை மற்ற வர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாகக் கருதுகிற சுயநீதியுடைய மக்களை போலின்றி, நீதிமான்களாக்கப்படுவார்கள் (லூக்கா 18:9-14). பெரிய கடன் ஒன்றை மன்னிக்கப்பட்ட ஒரு மனிதன் தனது சக ஊழியன் தன்னிடத்தில் பட்ட ஒரு சிறு கடனை மன்னிப்பற்ற வழியில் வற்புறுத்தியது பற்றிய உவமையொன்றை இயேசு கூறினார் (மத்தேயு 18:21-35). இவ்வாறு, அவர் நாம் மன்னிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தால், நாம் மற்றவர்களை மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று காண்பித்தார்.

நாம் "நம்பிக்கை இழந்துவிடக் கூடாது, ஜெபிக்க வேண்டும்" என்பது இயேசுவின் மாபெரும் பாடங்களில் ஒன்றாக உள்ளது. இதை விவரிப்பதற்கு, அவர் ஒரு விதவை நீதியற்ற ஒரு நியாயாதிபதியிடத்தில் தொடர்ந்து வந்து வேண்டியதால் அவரிடம் இருந்து உதவி பெற்றது பற்றிய நிகழ்ச்சியைக் கூறினார் (லூக்கா 18:1-8).

இயேசு அவருக்கு வரவிருந்த மரணம் பற்றிய பெருந்துக்கத்தின் ஆழத்தில் இருக்கையில், தமது சீஷர்களிடத்தில் விழித்திருந்து ஜெபிக்கும்படி புத்திகூறினார் (மத்தேயு 26:41). அவர்களின் சூழ்நிலையில் ஜெபம் முக்கியமானதாக இருந்தது, ஆனால் அது தன்னிலே போதுமான தாக இருக்கவில்லை; அவர்கள் விழித்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. ஜெபம் என்பது நம்மை "தட்டுதல்" மற்றும் "தேடுதல்" என்ற நமது பொறுப்புகளில் இருந்து விடுவிப்பதில்லை (மத்தேயு 7:7, 8). நாம் ஞானத்திற்காகக் கேட்கவேண்டியுள்ளது என்றாலும் (யாக்கோபு 1:5), ஞானத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதற்காக, அதைக் கண்டறியும்

நல்ல ஆலோசனைகளைப் பயன்படுத்தி (நீதிமொழிகள் 13:10ஆ), நாம் நமது பகுதிப் பணியையும் செய்ய வேண்டும் (நீதிமொழிகள் 4:5, 7; 23:23). நமது ஜெபங்களுக்கான பதிலைப் பெறுவதற்கு நாம் நம்மால் செய்ய இயலாத வற்றிற்குத் தேவனைச் சார்ந்திருத்தல் மூலம் நமது பகுதிப் பணியைச் செய்ய வேண்டும். ஒரு பழங்கூற்று இந்தக் கருத்தை விவரித்தது: "பதிலானது தேவனை முற்றிலும் சார்ந்துள்ளது என்ற வகையில் ஜெபியுங்கள், மற்றும் பதிலானது உங்களை முற்றிலும் சார்ந்துள்ளது என்ற வகையில் வேலை செய்யுங்கள்."

## ஆதி சபையாரின் ஜெபங்கள்

நடபடிகள் புத்தகத்தின்படி, ஜெபம் என்பது ஆதி சபையாரின் நடவடிக்கைகளில் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக இருந்தது. உறுப்பினர்கள் ஒன்றிணைந்தும் தனித்தனியாகவும் ஜெபித்தனர். அவர்கள் தேவனைச் சார்ந்திருந்தமை மற்றும் அவரிடத்தில் அவர்கள் ஏறெடுத்த விண்ணப்பங்கள் ஆகியவற்றின் காரணமாக, அவர்களுக்கு உதவவும் அவர்களைப் பலப் படுத்தவும் தேவன் அவர்கள் மூலமாகவே கிரியை செய்தார். ஆதிக்கிறிஸ்த வர்களின் ஊக்கமான ஜெபம் என்பது சபை மிக விரைவாக வளர்ந்ததற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். பின்வரும் ஜெபங்களைப் பற்றி லூக்கா தமது நடபடிகள் என்ற புத்தகத்தில் குறிப்பிட்டார்:

1. புதிதாய்ப் பிறந்த சபையானது ஜெபத்தில் தரித்திருந்தது (நடபடிகள் 2:42).

2. பேதுருவும், யோவானும் இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக் கூடாது என்று கட்டளையிடப்பட்ட பின்பு, அவர்கள் சீஷர்களிடத்தில் திரும்பி வந்தனர். சபைக்குழுமம் ஜெபத்தில் தேவனைக் கண்ணோக்கினது (நடபடிகள் 4:24-31).

3. அப்போஸ்தலர்கள் தங்கள் நேரத்தை ஜெபத்திற்கும் தேவ வசனத்தின் ஊழியத்திற்கும் அர்ப்பணிப்பதற்காக, உதவிசெய்யும் பொறுப்பைப் பிறரிடத்தில் ஒப்புவித்தனர் (நடபடிகள் 6:4).

4. தேவையில் இருந்த விதவைகளுக்கு உதவிசெய்வதற்காகத் தேர்ந் தெடுக்கப்பட்ட ஏழுபேரிடம் பொறுப்பை ஒப்புவிப்பதற்கு முன்னர், அப்போஸ்தலர்கள் ஜெபித்தனர் (நடபடிகள் 6:6).

5. ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படுகையில், இயேசுவினிடம் ஜெபித்தார் (நடபடிகள் 7:59, 60).

6. பேதுருவும், யோவானும், சமாரியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அவர்கள்மீது கைகளை வைப்பதற்குமுன் ஜெபித்தனர் (நடபடிகள் 8:15).

7. சீமோன் மன்னிக்கப்படுவதற்காக ஜெபிக்கும்படி கூறப்பட்டார் (நடபடிகள் 8:22), மற்றும் அவர் பேதுரு மற்றும் யோவான் ஆகியோரை நோக்கித் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார் (நடபடிகள் 8:24).

8. பேதுரு தொற்காளை உயிர்ப்பிக்கும் முன் ஜெபித்தார் (நடபடிகள் 9:40).

9. யோப்பாவில், பேதுரு போஜனம் பண்ணுவதற்காக வீட்டின் மேற் கூரையின்மேல் காத்திருக்கையில், ஜெபித்தார் (நடபடிகள் 10:9; 11:5).

10. பேதுரு சிறைச்சாலையில் இருந்தபோது சபையார் அவருக்காக ஜெபித்தனர் (நடபடிகள் 12:5, 12).

11. பவுலையும், பர்னபாவையும் அவர்களின் முதல் சுவிசேஷப் பயணத்திற்கு அனுப்பிவைக்கும்முன், ஜெபம் கூறப்பட்டது (நடபடிகள் 13:3).

12. பவுலும், பர்னபாவும் மூப்பர்களை ஏற்படுத்தும் முன் ஜெபித்தனர் (நடபடிகள் 14:23).

13. பிலிப்பி நகரச் சிறைச்சாலையில், நள்ளிரவு வேளையில் பவுலும், சீலாவும் ஜெபித்தனர் (நடபடிகள் 16:25).

14. எபேசு நகர மூப்பர்களிடத்தில் பவுல் பிரியாவிடை கூறியபோது, அவர்கள் முழங்காலில் இருந்து ஜெபித்தனர் (நடபடிகள் 20:36).

15. பவுல் தீருவில் இருந்து புறப்பட்டபோது கடற்கரையில் ஜெபங்கள் கூறப்பட்டன (நடபடிகள் 21:5).

16. பவுல் தம்மைச் சுத்திகரித்துக்கொள்ளத் தேவாலயத்திற்கு வந்தபோது, அவர் ஜெபித்தார் (நடபடிகள் 22:17).

17. பவுல், புபிலியுவின் தந்தையைக் குணமாக்குவதற்கு முன் ஜெபித்தார் (நடபடிகள் 28:8).

## ஜெபத்தைப்பற்றிப் பவுலின் போதனை

பவுல் அடிக்கடி ஜெபித்தார் என்று நாம் நடபடிகள் புத்தகத்தில் இருந்து அறிகிறோம். அவரது நிருபங்கள் நமக்கு, அவர் பிறருக்காக ஜெபித்தார் என்பது பற்றிய உட்கண்ணோட்டத்தைத் தருகின்றன.[2] மற்றவர்களும் பவுலுக்காக ஜெபித்தனர்.[3]

கிறிஸ்தவர்கள் “இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்” என்றும் (1 தெசலோனிக்கேயர் 5:17) “ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும்” என்றும் (ரோமர் 12:12; கொலோசெயர் 4:2ஐக் காணவும்) பவுல் அறிவுறுத்தினார். நமது ஜெபங்கள் தேவனை மகிமைப்படுத்துவதாகவும் (ரோமர் 15:5, 6), அவரைத் துதிப்பதாகவும் (எபேசியர் 1:6, 12), அவருக்கு நன்றி செலுத்துவதாகவும் (பிலிப்பியர் 1:3; கொலோசெயர் 1:3), அவரிடத்தில் வேண்டுதல் செய்வதாகவும் (1 தீமோத்தேயு 2:1) மற்றும் அவரை ஸ்தோத்திரிப்பதாகவும் (1 பேதுரு 1:3, 4) இருக்க வேண்டும்.

பிலிப்பியர்கள் கவலைப்படுபவர்களாயிராமல், தங்கள் வேண்டுதல்களைத் தேவனிடத்தில் முன் வைக்க வேண்டும் என்று பவுல் புத்திகூறினார் (பிலிப்பியர் 4:6). அவர் ஆட்சியாளர்களுக்காகவும் அதிகாரத்திலிருப்பவர்களுக்காகவும் வேண்டுதல் செய்யும்படி கூறினார் (1 தீமோத்தேயு 2:1, 2).

கூட்டத்தினரை ஜெபத்தில் நடத்துதல் என்பது சபைக்குழுமத்தில் உள்ள ஆண்களின் பொறுப்பாக உள்ளது. பவுல், “அன்றியும், புருஷர்கள் ... எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டும்” என்று எழுதினார் (1 தீமோத்தேயு 2:8). இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வயது முதிர்ந்த ஆண் என்று அர்த்தப்படுகிற *andros* என்ற கிரேக்க வார்த்தையானது ஒரு

ஆணைக் குறிப்பதாக உள்ளது (மத்தேயு 15:38; மாற்கு 6:20). சந்தர்ப்பப் பொருள் இவ்வாறு சுட்டிக்காண்பிக்கும் என்றால், அது ஒரு கணவரை அர்த்தப்படுத்துவதாகும் (மத்தேயு 1:16; மாற்கு 10:12).

இந்த "ஆண்கள்" "எல்லா இடங்களிலும்" ஜெபிக்க வேண்டும் (Gk.: *en panti topo*), என்றால் இது கிறிஸ்தவர்கள் கூடிவரும் எல்லா இடங்களையும் என்று அர்த்தப்படுத்துகிறது. "எல்லா" என்பது "இடங்கள்" என்பதுடன் பயன்படுத்தப்படும்போது, சபை "கூடிவரும் இடம்" என்பதே வழக்கமான அர்த்தமாக உள்ளது (1 கொரிந்தியர் 1:2; 2 கொரிந்தியர் 2:14; 1 தெசலோனிக்கேயர் 1:8). இவ்வசனங்கள் எதிலும் இது "உலகம் முழுவதிலும் உள்ள எல்லா இடங்களிலும்" என்று அர்த்தப்பட முடியாது. "இடம்," என்பது தன்னிலேயே, சிலவேளைகளில் தேவாலயம் போன்ற கூட்டம் கூடும் இடத்தை அர்த்தப்படுத்துகிறது (மத்தேயு 24:15; யோவான் 4:20; 11:48; நடபடிகள் 6:13; 21:28).

பொதுகூடுகைகளில் சபைக்குழுமத்தில் உள்ள ஆண்கள் நடத்தும் பணிப்பொறுப்பை ஏற்கவேண்டி இருந்தது. சபைகூடுகைகளில் பெண்கள் அமைதலுடன் இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் பேசக்கூடாது (1 கொரிந்தியர் 14:34, 35). அவர்கள் அறிவுறுத்துதலை அமைதலோடு பெற்றுக்கொள்ள வேண்டும், அவர்கள் ஆண்களுக்குப் போதிக்கவோ அல்லது அவர்கள்மீது அதிகாரம் செலுத்தவோ கூடாது. பெண்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 2:11, 12).

இந்த அறிவுறுத்துதல்கள் கலாச்சார நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. கி.பி. முதல் நூற்றாண்டின் பெண்கள், புறதெய்வ ஆராதனையில் நடத்துனர்களாக இருந்தனர். அவர்களுக்கு நேர்மாறான வகையில், கிறிஸ்தவப் பெண்கள் பொது சபைகூடுகைகளில் நடத்துவப் பொறுப்புகளை மேற்கொள்ளக் கூடாதிருந்தனர். இது தேவனுடைய படைப்பின் முறைமை மற்றும் ஏதேன் தோட்டத்தில் பெண்ணின் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது (1 கொரிந்தியர் 11:3, 8, 9; 14:34). இது அனேகமாக தோட்டத்தில் பெண்ணின் மீறுதலுக்காக அவளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை பற்றிய குறிப்பாக இருக்கலாம்: "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" (ஆதியாகமம் 3:16ஆ; 1 தீமோத்தேயு 2:13, 14ஐக் காணவும்).

தேவனுடைய முறைமையை மதிக்கிற பெண்களும் ஆண்களும், ஜெபங்களில் வழிநடத்துதல், சபைக்கூடுகைகளில் போதித்து உரையாற்றுதல், மற்றும் ஆராதனை ஊழியங்களைப் பொறுப்பேற்று நடத்துதல் ஆகியவற்றை ஆண்கள் செய்யும்படி பார்த்துக் கொள்வார்கள். தேவ பக்தியுள்ள பெண்கள், நடத்துனர்கள் என்ற வகையில் ஆண்களை மதித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள்.

## ஜெபத்திற்கான அறிவுறுத்தல்கள்

ஜெபத்தில் உடல்ரீதியான நிலை முக்கியமானதாக உள்ளது என்று மக்களில் சிலர் நினைக்கின்றனர். இயேசுவினால் குறிப்பிடப்பட்ட ஒரு

உவமையில், சுயநீதியுள்ள பரிசேயன் ஜெபிக்கும்போது நின்று கொண்டிருந்தான் என்பதால் (லூக்கா 18:11), ஜெபிக்கையில் நின்றுகொண்டிருத்தல் தவறானது என்று ஒரு மனிதர் கூறினார். அந்த மனிதர், தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்பட்ட மனம்வருந்திய மனிதரும் நின்றுகொண்டுதான் இருந்தார் (18:13; மாற்கு 11:25ஐயும் காணவும்) என்ற உண்மையைப் புறக்கணித்துவிட்டார். ஜெபத்தில் மற்ற பல்வேறு உடல் நிலைகள் யூகிக்கப்படுகின்றன. இயேசு, ஸ்தேவான், மற்றும் பேதுரு ஆகியோர் ஜெபிப்பதற்கு முழங்காலில் இருந்தனர் (லூக்கா 22:41; நடபடிகள் 7:60; 9:40). இயேசு ஜெபிப்பதற்கு முகங்குப்புற விழுந்தார் (மத்தேயு 26:39; மாற்கு 14:35ஐயும் காணவும்). உடலின் நிலையல்ல, ஆனால் இருதயத்தின் நிலையே, முக்கியமானதாக உள்ளது.

பவுல், "நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ..." என்று ஒப்புக்கொண்டார் (ரோமர் 8:26). நாம் வெளிப்படுத்தச் சிரமப்படுகிற அந்த எண்ணங்களைப் பரிசுத்த ஆவியானவர் எடுத்து அவற்றைத் தேவனுக்கு முன்வைப்பதன்மூலம் அவர் நமது ஜெபங்களில் உதவுகிறார்.

## ஜெபம் என்பது ஒரு பதிலியாக இருப்பதில்லை

பல வேளைகளில் நாம் தேவனிடத்தில் நமது சொந்த பொறுப்பாளியாக இருப்பதை அவர் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். நமக்காக எல்லாவற்றையும் செய்வதாகவோ அல்லது எல்லா சிரமங்கள், தோல்விகள், மற்றும் துன்பங்கள் ஆகியவற்றில் இருந்து நம்மைப் பாதுகாப்பதாகவோ தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பதில்லை. சிலவேளைகளில் வாழ்வின் பிரச்சனைகள் என்பவை தொடர்ந்த ஆசீர்வாதங்களைக் காட்டிலும் அதிக மதிப்புடையவைகளாக இருக்கின்றன (எபிரெயர் 12:3-11; யாக்கோபு 1:2-4). சங்கீதம் 119ல் தாவீது பின்வருமாறு எழுதினார்,

> நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்;
> இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன் (வசனம் 67).

> நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது;
> அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன் (வசனம் 71).

ஜெபம் என்பது நமக்காக நாமே செய்தாக வேண்டியவற்றிற்கோ அல்லது தேவனுடைய சித்தத்தின்படி நாம் செய்ய வேண்டியவற்றிற்கோ ஒரு பதிலியாக இருப்பதில்லை.

1. உபத்திரவத்தின் வழியில் நாம் நம்மையே முன்னெச்சரிக்கையின்றி உட்படுத்திக்கொண்டு, பின்பு தேவன் நம்மைக் காக்க வேண்டும் என்று ஜெபிக்கக்கூடாது. தேவாலயத்தின் உப்பரிகையில் இருந்து குதிக்கும்படி

*இயேசுவினிடத்தில் சாத்தான் கூறியபோது, அவர், "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" என்று பதில் அளித்தார் (மத்தேயு 4:7).*

*2. ஜெபம் என்பது கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை. தேவன் தம்முடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து தமது பார்வையில் பிரியமாயிருக்கிறவர்களுக்கே தமது ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார் (1 யோவான் 3:22).*

*3. கிறிஸ்தவர்கள்-அல்லாதவர்களும், இரட்சிக்கப்படாமல் பாவத்தில் இழந்துபோகப்பட்டுள்ளவர்களும் ஜெபத்தின் மூலமாக மன்னிக்கப்படுவதில்லை. இயேசு கீழ்ப்படிதலைக் கேட்கிறார் (எபிரெயர் 5:9; பிலிப்பியர் 2:12ஐயும் காணவும்). தேவனுடைய பிள்ளைகளாகி இருப்பவர்கள் மாத்திரமே மன்னிக்கப்படுவதற்காக ஜெபிக்கும்படி கூறப்பட்டுள்ளனர் (நடபடிகள் 8:22).*

*4. ஜெபம் என்பது மருத்துவ உதவிக்கான பதிலியாக இருப்பதில்லை. தீமோத்தேயு குணப்படுவதற்காக அவர் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் அறிவுறுத்தவில்லை. தீமோத்தேயுவின் வயிற்றிற்காகவும், அவருக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் அவர் கொஞ்சம் திராட்ச ரசமும் கூட்டிக்கொள்ள வேண்டும் என்று பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 5:23). தீமோத்தேயு நலமடைய அவர் தம்மால் செய்ய முடிந்ததைச் செய்ய வேண்டியிருந்தது. குணமாக்கப்படுவதற்கு ஜெபிக்க வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது (யாக்கோபு 5:14-16), ஆனால் இது நாம் நலமடைய நம்மால் செய்ய முடிபவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்ற மறைவான அர்த்தம் கொண்டிருப்பதில்லை. நமது உலகத்தில் தேவன் குணம் தரக்கூடிய பொருட்களை வைத்துள்ளார் என்பது தெளிவு. நம்மால் முடிந்தவற்றை நாம் செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.*

*இயேசு மருத்துவர்களைப் பயன்படுத்துவதற்கு எதிரானவர் அல்ல. அவர், "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" என்று உரைத்தார் (மத்தேயு 9:12; மாற்கு 2:17; லூக்கா 5:31ஐயும் காணவும்).*

*அற்புதவிதத்தில் சுகமாக்குதலை நிகழ்த்தக் கூடியவர்களாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அதை ஜெபத்தினால் மாத்திரம் செய்யவில்லை. குணமாக்கும் வல்லமையை அவர்களுக்கு இயேசு கொடுத்தார் (மத்தேயு 10:1). அற்புதவரம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு, அவர்கள் விசுவாசத்தையும் மற்றும் ஒருவேளை ஜெபத்தையும் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது (மத்தேயு 17:20, 21). வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்புதங்களில் எதுவும், ஜெபம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் அடிப்படையில் மாத்திரம் நிகழ்த்தப்படவில்லை. அற்புதங்களை நிகழ்த்த ஒரு நபருக்கு வல்லமை தரப்பட வேண்டியிருந்தது, அதன்பின்பு அவர் தமக்குத் தரப்பட்ட வல்லமையை செயல்படுத்துவதற்கு முன் அவர் விசுவாசம் கொண்டிருக்க வேண்டியிருந்தது. பேதுருவுக்குத் தண்ணீர்மீது நடக்கும் வல்லமை தரப்பட்டது; அவரது விசுவாசம் தவறியதால் அவர் [தண்ணீர்மீது நடப்பதில்] தோல்வியுற்றார் (மத்தேயு*

*14:31). அப்போஸ்தலர்களுக்கு அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமை தரப்பட்டு, இதற்குமுன் அவர்கள் அவற்றைத் துரத்தியிருப்பினும், அவர்கள் ஒரு அசுத்த ஆவியைத் துரத்துவதில் தோல்வியுற்றனர் (மத்தேயு 10:1; மாற்கு 3:15; 6:13). அவர்களின் தோல்வியானது வல்லமைக் குறைவினால் அல்ல, ஆனால் விசுவாசக் குறைவினாலேயே உண்டானதாக இருந்தது (மத்தேயு 17:20).*

*5. ஜெபம் என்பது கிரியைக்குப் பதிலியாக இருப்பதில்லை. நாம் நமது அன்றாட உணவிற்காக ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 6:11), ஆனால் அது நாம் உணவைப் பெற்றுக்கொள்வதற்கு ஒன்றும் செய்யவேண்டியதில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை. நாம் பிறருக்குக் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பதற்கு வேலை செய்ய வேண்டும் என்று பவுல் எழுதினார் (எபேசியர் 4:28). வேலை செய்யா தவர்கள் சாப்பிடுவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது (2 தெசலோனிக்கேயர் 3:10). பெற்றுக்கொள்வதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் கேட்பது மாத்திரமே என்று இயேசு போதிக்கவில்லை. கேட்பதுடன்கூட, "தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" என்றும் இயேசு கூறினார் (மத்தேயு 7:7). நம்முடைய ஜெபங்களுடன்கூட, நாம் நமது பகுதியை - தேடுதல் மற்றும் தட்டுதல் ஆகியவற்றை - செய்ய வேண்டும் என்று தேவன் எதிர் பார்க்கிறார்.*

*நியூஜெர்ஸி என்ற இடத்தில் இருந்த ஒரு பெண் தனது வேலையை இழந்தாள். அவள் வேறொரு வேலைக்கு விண்ணப்பிக்கவோ அல்லது அதைத் தேடவோ இல்லை. அவள் இந்த செயல்களைச் செய்தால், தனது புதிய வேலையானது தேவன் தனக்காகத் தேர்ந்துகொண்டதாக இராமல் தானே தனக்காக தேர்ந்துகொண்டதாக இருக்கும் என்று அவள் நம்பினாள். ஒரு ஆண்டுக்குப் பின்பும்கூட, அவள் வேலை எதுவும் கிடைக்கப் பெறாத வளாகவே இருந்தாள். "தேடுங்கள்" மற்றும் "தட்டுங்கள்" என்று இயேசு கொடுத்த அறிவுறுத்துதலுக்கு அவள் கீழ்ப்படியாதிருந்தாள்.*

## ஜெபத்திற்கு பதில்கள்

*நமது ஜெபத்திற்குத் தேவன் எவ்வாறு பதில் அளிக்கிறார் என்பதை நாம் ஒருக்காலும் அறியாதவர்களாக இருக்கலாம். பவுல் ரோமாபுரிக்குச் செல்ல விருப்பம் கொண்டிருந்தார் (நடபடிகள் 19:21). அவர் ரோமா புரியில் இருந்த கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்களுடன் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொள்ளக் கூடும்படி அங்கு செல் வதற்குத் தம்மை அனுமதிக்கும்படி தேவனிடத்தில் ஜெபித்தார் (ரோமர் 1:10-14). ஆவியானவர் பிலிப்புவை ஆசோத் என்ற நகரத்திற்குக் கொண்டு சேர்த்தது போன்று (நடபடிகள் 8:39, 40) பவுல் ரோமாபுரி செல்வதற்கு ஒரு இலவசப் பயணத்தைப் பெற்றுக்கொள்ளும்படி பரிசுத்த ஆவியானவரைத் தேவன் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக, தேவன் பவுலுக்கு ரோமா புரி செல்ல இலவசப் போக்குவரத்து வசதியைக் கொடுப்பதற்கு ரோமாபுரி அரசாங்கத்தைப் பயன்படுத்திக்கொண்டதன் மூலம், பவுலின் ஜெபத்திற்குப் பதில் அளித்தார் (நடபடிகள் 27; 28).*

தேவன் எவ்வாறு நமது ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார் என்பதைக் கணக்கிடுவது நமது பொறுப்பல்ல. அவர் நமது ஜெபத்திற்குப் பதில் அளிக்கத் தம்மிடத்தில் உள்ள வழிமுறைகளில் எதையாவது பயன்படுத்து வார் என்று விசுவாசித்து நாம் அவரிடத்தில் கேட்க வேண்டும். அவர் நம்மையோ, மற்றவர்களையோ, இயற்கையையோ, அல்லது பிறவழிமுறை களையோ பயன்படுத்துவதன் மூலம் நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்க முடியும்.

சிலவேளைகளில் நாம் நமது ஜெபங்களுக்கு நேர்மறையான பதில்களைத் தடைசெய்கிறோம். நமது ஜெபங்கள் நாட, தட்ட, மற்றும் கவனத்துடன் இருக்கத் தவறுதலினால் (மத்தேயு 7:7, 8; 26:41); சந்தேகங்களினால் (யாக்கோபு 1:6, 7); கேட்பதற்கு நாம் தவறுவதினால் (யாக்கோபு 4:2ஆ); தவறான நோக்கங்களினால் (யாக்கோபு 4:3); அல்லது தவறான வாழ்வினால் (1 பேதுரு 3:7அ, 12) தடைசெய்யப்படக் கூடும்.

தேவன் எல்லா ஜெபங்களுக்கும் பதில் தருகிறார்; அவர் அவற்றிற்கு வேறுபட்ட வழிகளில் பதில் தருகிறார். அவர் "ஆம்" என்று சொல்லி உடனடியாக வேண்டுகோளை நிறைவேற்றலாம் (யாக்கோபு 5:17, 18). "சற்றே காத்திரு" என்பது இன்னொரு பதிலாக இருக்கலாம். அந்த வேண்டுதலை நிறைவேற்றத் தேவன் அறிந்திருக்கும் சரியான வேளை வரைக்கும் அவர் காத்திருக்கலாம் (1 சாமுவேல் 1:7-17). ஞானமுள்ள தேவன் என்ற வகையில், அவர் சில வேளைகளில் "இல்லை" என்று கூறுகிறார் (2 கொரிந்தியர் 12:7-9). மத்தேயு 26:39ல் இயேசுவின் ஜெபத்தைத் தேவன் கேட்டார் (எபிரெயர் 5:7ஐயும் காணவும்), ஆனால் அவர் தமது குமாரனுடைய வேண்டுகோளை நிறைவேற்றவில்லை. இயேசு சிலுவையில் மரிக்க வேண்டியதாக இருந்தது. தேவன் நமக்கு மிகச்சிறந்த வற்றையே கொடுக்கிறார்.

## தொகுப்புரை

ஜெபத்திற்குப் பதில் அளித்தல் என்பதற்கான வல்லமை ஜெபத்தில் அல்ல, ஆனால் தேவனிடத்தில்தான் உள்ளது. ஜெபத்தில் நாம் தேவனைச் சென்று சேர்வதன்மூலம், நாம் இந்த அண்டத்தில் உள்ளவற்றிலேயே மாபெரும் வல்லமையுடன் அவரிடத்தில் செய்தித் தொடர்பு கொள் கிறோம். நாம் அவரது சித்தத்தைச் செய்பவர்களாகவும் அவரிடத்தில் உதவியைக் கேட்பவர்களாகவும் இருந்தால், இந்த மாபெரும் வல்லமை யுடன் தொடர்புகொள்வதன்மூலம் நாம் உதவியைப் பெறுகிறோம். ஜெபம் என்பது "தேவைகளின்" பட்டியல் ஒன்றைத் தேவனுடன் பகிர்ந்து கொள்ளுதலைவிட அதிகமானதாக உள்ளது. நாம் ஜெபத்தில் தேவனைத் துதித்து, அவருக்கு நன்றி செலுத்தி, மற்றும் அவரை மகிமைப்படுத்த வேண்டும்.

இயேசு நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். அவர் தேவனுடன் ஒரு உறவை வளர்த்துக்கொள்வதற்காக அல்ல, ஆனால் தேவனுடன் மிகவும் நெருங்கியிருந்ததால் ஜெபம் செய்தார். தேவனுடனான நமது நெருங்கிய தன்மையானது நமது ஜெபவாழ்விலும் காணப்பட முடியும். நாம் தேவனே

அறிந்துகொள்ளவும் அவருடன் நடக்கவும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நாம் அவருடன் சரியான வகையில் உறவு கொண்டிருந்தால், அவருடன் நாம் அடிக்கடி செய்தித்தொடர்பு ஏற்படுத்த விரும்புவோம்.

---

குறிப்புகள்

[1]Peter Toon, "Prayer," in *The New International Dictionary of the Bible*, ed. J. D. Douglas and Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing Co., 1987), 817. [2]*ரோமர் 1:10; 10:1; 2 கொரிந்தியர் 13:7, 9; எபேசியர் 1:16; பிலிப்பியர் 1:4, 9; கொலோசெயர் 1:3, 9; 1 தெசலோனிக்கேயர் 1:2; 2 தெசலோனிக்கேயர் 1:11; 2 தீமோத்தேயு 1:3; பிலேமோன் 4.* [3]*ரோமர் 15:30; 2 கொரிந்தியர் 1:11; பிலிப்பியர் 1:19; கொலோசெயர் 4:3; 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 3:1; எபிரெயர் 13:18.*

*9*

# கர்த்தருடைய இராப்போஜனம்

*கர்த்தருடைய இராப்போஜனம் இயேசுவின் மதத்தில் ஒரு மைய இடத்தைக் கொண்டுள்ளது. இராப்போஜனமானது ஒரு எளிய காட்சியமைவில் வைக்கப்பட்டிருப்பினும், அதன் நோக்கம், இயல்பு, மற்றும் ஆசரிக்கும் கால இடைவெளி ஆகியவற்றைப் பற்றி விவாதம் எழுந்துள்ளது. இதைப் புதிய ஏற்பாடு "பகிர்ந்துகொள்ளுதல்" அல்லது "ஐக்கியம்" (1 கொரிந்தியர் 10:16), "கர்த்தருடைய போஜனபந்தி" (1 கொரிந்தியர் 10:21), "கர்த்தருடைய இராப்போஜனம்" (1 கொரிந்தியர் 11:21), மற்றும் "அப்பம் பிட்குதல்" (நடபடிகள் 2:46; 20:7; 1 கொரிந்தியர் 10:16; ஒருவேளை லூக்கா 24:30, 35; மேலும் மத்தேயு 26:26; மாற்கு 14:22; லூக்கா 22:19 ஆகிய வசனங்களையும் காணவும்) என்று குறிப்பிடுகிறது.*

*பல்வேறு வசனப்பகுதிகளில், பொதுவான உணவும்கூட "இராப் போஜனம்" (யோவான் 12:2; 1 கொரிந்தியர் 11:20) மற்றும் "அப்பம் பிட்குதல்" (நடபடிகள் 2:46; 20:11; 27:35ஐக் காணவும்) என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தச் சொற்றொடர்களில் கர்த்தருடைய இராப்போஜனம் அர்த்தப்படுவது எப்போது என்பதைத் தீர்மானிக்கச் சந்தர்ப்பப்பொருள் மாத்திரமே பயன்படுத்தப்பட முடியும். "அப்பம் பிட்குதல்" என்பது (நடபடிகள் 2:42) கர்த்தருடைய இராப்போஜனத்தை அர்த்தப்படுத்தும் போது கிரேக்க சுட்டுச் சொல்லாகிய* tou ("the") *என்பது வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. "அப்பம் பிட்குதல்" என்பது பொதுவான உணவாக இல்லாமல், அப்பத்தைக் கர்த்தர் பிட்கும் நிகழ்ச்சியான, ஒரு குறிப்பிட்ட வகையான அப்பம் பிட்குதலாக உள்ளது.*

*"கர்த்தருடைய"* (Gk.: *kuriakos*) *என்பது கர்த்தருக்கு உரிய இராப் போஜனமாக உள்ளது என்று அர்த்தப்படுகிற பெயரெச்ச விகுதியாக (உரிமைத்துவப்) பெயர்ச்சொல்லாக இருப்பதில்லை. மாறாக, "கர்த்த ருடைய" என்ற பெயர் உரிச்சொல் "கர்த்தரைக் கனப்படுத்துகிற" என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது (1 கொரிந்தியர் 11:21). இது நாம் கிறிஸ்டோபர் கொலம்பஸ் மற்றும் அமெரிக்க நாட்டின் நிபுணர்களைக் கனப்படுத்த ஒதுக்கி வைத்துள்ள விசேஷநாட்களைக் குறிப்பிடுவதற்கு, "கொலம்பஸின் நாள்" மற்றும் "நிபுணரின் நாள்," என்பதைப் பயன்படுத்துதலுடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. இதே பயன்பாடு வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் காணப்படுகிறது, அவ்விடத்தில்* kuriakos *என்பது கர்த்தரைக் கனப்படுத்தும் நாள் என்பதாக வேறுபடுகிறது.* Kuriakos *என்பதன்*

இந்தப் பயன்பாடு, அந்த நாளும் இராப்போஜனமும் ஆகிய இரண்டுமே கர்த்தரைக் கனப்படுத்தும் வகையில் கடைப்பிடிக்கப்படுவதை அர்த்தப் படுத்துகிறது; இவ்விதமாக இவைகள் "மேன்மையான" ("imperial"[1]) நாள் மற்றும் "மேன்மையான" இராப்போஜனம் என்று குறிப்பிடக்கூடும். இவைகள் இயேசுவின் விசேஷித்த நாளையும் இராப்போஜனத்தையும் கடைப்பிடிப்பதால் அவருக்கு மதிப்பளிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளவை யாக இருக்கின்றன.

கர்த்தருடைய இராப்போஜனம், இயேசு தாம் காட்டிக்கொடுக்கப் பட்ட அன்று இராத்திரியில் தமது அப்போஸ்தலர்களுடன் ஒரு பெரிய மேல்வீட்டில் யூதர்களின் பஸ்காவை ஆசரித்துக்கொண்டிருந்த போது ஏற்படுத்தப்பட்டது (மத்தேயு 26:17-28; மாற்கு 14:12-24; லூக்கா 22:15-20; 1 கொரிந்தியர் 11:23-25). பஸ்காவுக்கும் கர்த்தருடைய இராப் போஜனத்துக்கும் இடையில் அநேக ஒற்றுமைகள் உள்ளன என்பதால் அந்த வேளையில் இயேசு அதை ஏற்படுத்தியிருக்கலாம். பஸ்காவானது, நமது பஸ்காவாகிய (1 கொரிந்தியர் 5:7ஆ) கிறிஸ்துவை முன்நிழலிடுகிறது.

## இராப்போஜனத்தை ஆசரித்தல்

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது (1 கொரிந்தியர் 11:21) இயேசுவினால் வித்தியாசமான வகையில் அதிகாரத்துவப்படுத்தப் பட்டதாக, அவரால் ஏற்படுத்தப்பட்டதாக, அவரைக் கனப்படுத்துவதாக, மற்றும் பிற உணவுகள் எல்லாவற்றில் இருந்தும் வேறுபட்டதாக உள்ளது. அப்பம் மற்றும் திராட்சரசம் என்ற பௌதீகரீதியான அடையாளங்கள், அவர் மனுஷீகத்தின் பௌதீக இயல்பை மேற்கொள்வதற்கு தமது தெய்வீகத்தின் ஆவிக்குரிய இயல்பை விட்டு வந்தார் என்பதை நமக்கு நினைவூட்ட வேண்டும் (பிலிப்பியர் 2:7; எபிரெயர் 2:14). அவர் மாம் சத்தில் தெய்வீக இயல்புடையவரானார் (மத்தேயு 1:23; யோவான் 1:14; கொலோசெயர் 1:22). அவர் அப்பத்தையும் திராட்சரசத்தையும் தமது சரீரம் மற்றும் இரத்தம் என்று குறிப்பிட்டார் (மத்தேயு 26:26-28), அதனால் அவைகள் அவரது சரீரம் மற்றும் இரத்தம் என்பது போன்று நாம் அவற்றை மதிப்பதற்காக இவ்வாறு குறிப்பிட்டார்.

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, ஒரே சரீரமாகிய (1 கொரிந்தியர் 10:16) சபை (எபேசியர் 1:22, 23), இயேசுவின் இரத்தமும் சரீரமும் "பகிர்ந்துகொள்ளப்படுதல்" அல்லது அவற்றில் "ஐக்கியமா குதல்" (Gk.: *koinonia*) என்பதாக உள்ளதென்று பவுல் உரைத்தார். இந்தப் பகிர்ந்துகொள்ளுதலானது, அப்பத்தை உண்ணுதல் மற்றும் பாத்திரத்தில் பானம் பண்ணுதல் என்ற பௌதீக நடவடிக்கையின் மூலமாக ஆவிக்குரிய ஒரு கருத்துணர்வில் செய்யப்படுகிறது. நாம் இதைச் செய்கையில், இயேசுவைப் பற்றிய பின்வரும் உண்மைகளைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்: (1) அவர் பரலோகத்தில் இருந்து அனுப்பப்பட்ட தேவ குமாரனாக இருக்கிறார். (2) அவர் ஆவிக்குரிய ஜீவி என்ற வகையில், வாழ்வைப் பற்றி நாம் அறிந்துள்ள வகையில் அனுபவிப்பதற்காக மாம் சத்தின் மனிதரூபத்தை மேற்கொண்டார். (3) அவர் தம் மரணத்தில் நமது

பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டார். (4) அவரது மரணத்தில் நமது பாவங்களுக்காக அவரது இரத்தம் ஊற்றப்பட்டது. (5) அவர் சிலுவையில் இருந்தபோது, நமது பிரயோஜனத்திற்காகத் திரளான கூட்டத்தார் முன்பாக நிர்வாணமாகவும் அவமானம் அடைந்தவராகவும் இருந்தார். (6) அவர் அடக்கம்பண்ணப்பட்டு பின்பு மரணத்தில் இருந்து உயிர்த் தெழுந்தார். (7) நாம் அவருடன் போஜனம்பண்ணுதலை நாடுகையில் அதை அவர் பரலோகத்திலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். (8) அவர் பரலோகத்திற்கு எழுந்தருளி அங்கே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் முடிசூட்டப்பட்டார். (9) அவர் மறுபடியும் வருவார். (10) அவர் செய்த ஒவ்வொன்றையும், நம்மீது அவர் கொண்டுள்ள அன்பினிமித்தமாகவே செய்தார்.

இயேசுவை நினைவுகூருதலில் அவரைப் பற்றித் தியானித்தல் என்பதே [கர்த்தருடைய பந்தியில்] நாம் பங்கேற்றலில் நமது பொறுப்பாக உள்ளது (1 கொரிந்தியர் 11:24, 25). நமது மன ஒருமைப்பாடு அப்பம், திராட்சரசம், அல்லது நம்மோடு அதில் பங்கேற்பவர்கள்மீது இராமல், அப்பம் மற்றும் திராட்சரசத்தினால் குறிக்கப்படுபவரான இயேசுவின்மீது இருக்க வேண்டும். நாம் பங்கேற்கையில் நமது நோக்கம், நமது சொந்த ஆவிக்குரிய தேவை மற்றும் அவருடன் பந்தியிருப்பதில் இருந்து வரவேண்டிய ஆவிக்குரிய புதுப்பித்தல் ஆகியவற்றைப்பற்றி நினைக்க வேண்டும். அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவர்கள் ஆவிக்குரிய வகையில் பலவீனம் அடைவார்கள் என்பதால் (1 கொரிந்தியர் 11:30), இராப்போஜனத்தில் சரியான வகையில் பங்கேற்பதிலிருந்து ஆவிக்குரிய பலம் விளைந் தாக வேண்டும். நாம் ஒரு கூட்டமாக ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும்போது, நாம் இயேசுவோடு உண்கிறவர்களாய் இருக்கிறோம். இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் பௌதீக சின்னத்தின் மூலமாக, நாம் அவரது சரீரம் மற்றும் இரத்தத்தில் ஆவிக்குரிய வகையில் விருந்துண்ணுகிறபோது, கர்த்தருடைய இராப்போஜனம் தகுதியான விதத்தில் உண்ணப்படுகிறது.

கர்த்தருடைய இராப்போஜனத்தை, சடங்காச்சாரம், பொதுவான உணவு, அல்லது ஒரு வழக்கம் மாத்திரமே என்ற வகையில் உண்ணு கிறவர்கள் அதனுடன் இணைந்திருக்க வேண்டிய ஈர்ப்பு பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில்லை. அந்த வேளைக்கு அபாத்திரராக இருந்து அதை உண்ணு கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்ப்பை ("ஆக்கினைத்தீர்ப்பு"; KJV) வரவழைக்கின்றனர், ஏனெனில் அவர்கள் இயேசுவின் பலியின்மீது கவனம்செலுத்துவதில்லை (1 கொரிந்தியர் 11:27-29).

"அபாத்திரமாய்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதில், பவுல் உண்ணுகிற நபரின் தகுதித்தன்மையை அல்ல, ஆனால் இராப்போஜனம் உண்ணப்படுகிற விதத்தைக் குறித்துக் கலந்துரையாடினார். இயேசுவின் பலிக்கு எவரொருவரும் தகுதியானவராக இருப்பதில்லை. நமது வலிமை குன்றிய வகையில், நாம் அப்பத்தையும் திராட்சரசத்தையும் பெற்றுக் கொள்ளும் விதத்தில் தகுதியான மதிப்பையும் பயபக்தியையும் காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் இந்தப்பந்தியில் இயேசுவின்மீது

*கவனம் செலுத்தத் தவறினால், இதில் நாம் "அபாத்திரராக" பங்கேற்கிறோம் என்றாகிறது.*

*நம்மை நாமே சோதித்தறிதல் என்பது (1 கொரிந்தியர் 11:28) நமது வாழ்வை மதிப்பீடு செய்வதற்கானதாகவோ, உண்பதற்கு நாம் தகுதி யானவர்களா என்று தீர்மானிப்பதற்கானதாகவோ, அல்லது கடந்த வாரத்தின்போது நாம் பாவங்கள் செய்திருக்கிறோமா என்று கண்டறி வதற்கானதாகவோ இருப்பதில்லை. நாம் நமது வாழ்வைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும், நமது ஆவிக்குரிய வளர்ச்சியை மறுகண்ணோட்டம் இடவேண்டும், அல்லது நமது கடந்தகாலப் பாவங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுவதும் இல்லை. பாவமற்றதன்மை என்பது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதற்குத் தகுதியாக இருப்பதில்லை; இது தராதரமாக இருக்கும் என்றால், நம்மில் எவரும் இதை உண்ண அனுமதிக்கப்பட மாட்டோம். தவறான சிலவற்றைச் செய்த பாவம் கொண்டிராதவர்கள் அனேகமாக நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாதிருக்கும் பாவம் செய்தவர்களாக இருப்பார்கள் (யாக்கோபு 4:17).*

*மனிதர்கள் என்ற வகையில், நமக்குச் சிலவேளைகளில் காணக்கூடிய நினைவூட்டுதல்கள் தேவைப்படுகிறது. ஒரு மனிதர் மரணம் அடையும் வேளையில், தமது பேரனுக்குத் தமது பேனாக்கத்தியைக் கொடுத்தார். அந்தப்பையன் அதைப் பார்க்கும்போதெல்லாம், அவன் தனது தாத்தாவை நினைக்கிறான். அதுபோன்றே, அப்பமும் திராட்சரசமும், இயேசுவையும் நமக்காக அவர் பலியானதையும் நமக்கு நினைவூட்ட வேண்டும். கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்பதன்மூலமாக, நாம் இயேசுவின் மரணம் மற்றும் அவரது மறுவருகைமீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தை இந்த உலகத்திற்குக் காண்பிக்கிறோம் (1 கொரிந்தியர் 11:26). அப்பத்தையும் திராட்சரசத்தையும் கனப்படுத்துவதற்காக நாம் அவற்றில் பங்கேற்பதில்லை - ஏனெனில் அவைகள் புனிதமானவைகள் அல்ல - ஆனால் அவைகள் பிரதிநிதித்துவப்படுத்துகிற இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் கனப்படுத்தவே, நாம் அவற்றில் பங்கேற்கிறோம்.*

## *யார் இதில் உண்டு பருக வேண்டும்?*

*கத்தோலிக்க சபையானது, பெரும்பாலான திருப்பலிகளில், திராட்ச ரசத்தைப் பொதுமக்களுக்குத் தருவதில்லை; அதைப் பாதிரியார்கள் மாத்திரம் அருந்துகின்றனர். உண்மையில், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க உரிமை கொண்டுள்ளனர் (1 கொரிந்தியர் 10:16, 17). கர்த்தருடைய விருந்து பாவமற்ற மக்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டதாக இருப்பதில்லை, ஏனெனில் நாம் எல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் (ரோமர் 3:23). இராப்போஜனம் என்பது கிறிஸ்துவுக்குள்ளாகவும் அவருடைய ஒரே சரீரத்திற்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெற்றிருப்பதி னால் சுத்திகரிக்கப்பட்ட பாவிகளான மக்களுக்கானதாக உள்ளது (1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:27). அப்பம் மற்றும் பாத்திரம்*

என்பவை கிறிஸ்தவர்களாகிய நமக்காக இயேசு செலுத்திய மாபெரும் பலியை நாம் உணர்ந்தறிய உதவுகின்றவைகளாக இருக்கின்றன.

எபிரெயர் 13:10, "நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை" என்று கூறுகிறது. இவ்வசனப்பகுதி கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிடலாம் அல்லது குறிப்பிடாதிருக்கலாம். எவ்வகையிலும் உண்ணக்கூடாத மக்கள் இருக்கின்றனர் என்று இது கூறுவதில்லை, ஆனால் சிலருக்கு உண்ண உரிமையில்லை என்றும்கூட கூறுவதில்லை. தேவனுடைய குடும்பத்தில் உள்ளவர்கள் மாத்திரமே அவரது உணவு மேஜையில் உண்ண உரிமை கொண்டுள்ளனர். அந்நியர்களை விருத்தசேதனம் பஸ்காவில் பங்கேற்கத் தகுதிப்படுத்தினாலும் (எண்ணாகமம் 9:14ஐக் காணவும்), விருத்தசேதனமில்லாத அந்நியர்கள் பஸ்கா உணவை உண்ணக் கூடாதிருந்தது (யாத்திராகமம் 12:43-45, 48), இருப்பினும், அந்நியர்கள் அதில் கலந்துகொள்ள விருத்தசேதனம் அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்கியிருக்கும் (எண்ணாகமம் 9:14ஐக் காணவும்). பஸ்கா என்பது கர்த்தருடைய இராப்போஜனமல்ல, ஆனால் பஸ்காவைப் பற்றியதான விதிமுறைகள், தேவனுடைய மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் பங்கேற்கும் உரிமை தகுதியுள்ள மக்களுக்கு மாத்திரமே உள்ளது என்ற கொள்கையை ஆலோசனை கூறலாம். கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்ண உரிமையுள்ளவர்களாக இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 10:16, 17).

ஒரே சரீரத்தின் உறுப்பினர்களாய் இருப்பதாகத் தாங்கள் கருதும் மக்களுக்கு மாத்திரமே கிறிஸ்தவர்கள் பந்தியை அளிக்க வேண்டுமா? அதாவது, கிறிஸ்தவர்கள் "மூடுதலான பந்தியை" நடைமுறைப்படுத்த வேண்டுமா? இப்படிப்பட்ட கட்டளை எதுவும் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. ஒருவேளை கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாகக் கூடிவந்துள்ளவர்களுக்கு, ஒரே சரீரத்தில் ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்கள் (1 கொரிந்தியர் 12:13), இதை உண்ண உரிமைகொண்டுள்ளனர் என்று அறிவுறுத்துதல் என்பது மிகச்சிறந்த கொள்கையாக இருக்கலாம். இராப்போஜனத்தில் பங்குகொள்வதற்கான நோக்கம் மற்றும் வகை ஆகியவற்றைப் பற்றி ஒவ்வொரு நபரும் "தன்னைத் தானே" சோதித்தறியுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 11:28).

## நாம் உண்ண மற்றும் பருக வேண்டியவை யாவை?

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் அப்பத்தை உண்டு திராட்சரசத்தைப் பருகவேண்டும் என்று அவர் உரைத்தார் (மத்தேயு 26:26-28; மாற்கு 14:22-24; லூக்கா 22:19, 20; 1 கொரிந்தியர் 11:23-25). இதைக்காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செய்தல் என்பது இயேசுவின் அறிவுறுத்துதலை மீறுவதாகும். புளிப்பில்லாத அப்பம் மாத்திரமே இயேசு பயன்படுத்திய ஒரே உணவாக இருந்தது. திராட்சரசம் அவர் பயன்படுத்திய பானமாக இருந்தது. அது wine என்று அழைக்கப்படுவதில்லை. எனவே அது நொதியேறாத சாறாக இருந்தது என்று அர்த்தப்படுகிறது. ஒரு நபர் இன்னொரு அப்பத்தைப்

*பயன்படுத்தினால் அல்லது அப்பத்துடன் இன்னொன்றைக் கூட்டினால், அவர் இயேசு போதித்தவற்றிற்கு அப்பால் செல்லுகிறார். மேலும், ஒரு நபர் திராட்சரசத்தில் இருந்து வேறுபட்ட சாற்றைப் பயன்படுத்தினால் அல்லது இன்னொரு சாறைக் கூட்டினால், அவர் இயேசுவின் அதிகாரத்துவம் இன்றி அதைச் செய்கிறார்.*

*மார்மன் சபையார் திராட்சரசத்திற்குப் பதிலாகத் தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர். சிலர் திராட்சரசத்துடன் மற்ற சாறுகளைக் கலந்து, இன்னொரு சாறைப் பயன்படுத்துகின்றனர், அல்லது ஒரு மென் பானத்தைப் பதிலியாகப் பயன்படுத்துகின்றனர். இவைகள் இயேசு கட்டளையிட்டதைச் சேதப்படுத்துவதாகவும் அவரது அதிகாரத்துவத்தை மீறுவதாகவும் உள்ளன, சிலர் திராட்சரசத்துடன் தண்ணீரைக் கூட்டிக் கொண்டுள்ளனர், இது ஞானமுள்ளதாக இராதிருக்கலாம், ஆனால் தண்ணீர் கூட்டப்பட்டால் கூட அது இன்னமும் திராட்சரசமாகவே உள்ளது, அதே வேளையில் வேறொரு சாறைக் கூட்டுதல் என்பது இரு சாறுகள் உள்ளன என்பதைத் தெளிவாக்குகிறது. மற்ற உணவுகளை அல்லது சாறுகளைக் கூட்டிக்கொள்ளுதல், இயேசு குறிப்பிட்ட அடையாளச் சின்னங்களுக்குப் பதிலியாகப் பிற பொருள்களைப் பயன்படுத்துதல் அல்லது திராட்சரசத்தை மக்களுக்குக் கொடாதிருத்தல் ஆகியவற்றைப் பற்றி இயேசுவின் கட்டளையில் அதிகாரத்துவம் காணப்பட முடியாது. அப்படிப்பட்ட செயல்கள் இயேசுவினால் கட்டளையிடப்பட்டதைச் செய்வதாக இருக்காது, அவருக்கே சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது (மத்தேயு 28:20).*

*இயேசு, "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" என்று இயேசு கூறியபோது (யோவான் 6:55), அவர் நேரடியான அர்த்தத்தில் பேசினார் என்று சிலர் முடிவு செய்கின்றனர். அவர் கூறியவற்றை யூதர்கள் நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொண்டபடியால் அவர்கள் மனதில் குத்தப்பட்டனர். இயேசு தாம் உருவக நடையில் பேசியதாகக் காண்பித்ததன்மூலம் அவர் தாம் அர்த்தப்படுத்தியது என்ன என்று தெளிவாக்கினார்: "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63). இயேசுவின் சரீரத்தின் ஒரு சிறுதுண்டை உண்பது அல்லது அவரது இரத்தத்தைப் பருகுவது என்பது பயனுள்ளதாக இராது. அவரது வசனங்களின் மூலமாகவே ஆவிக்குரிய வாழ்வு அவரிடத்தில் இருந்து வருகிறது (யோவான் 6:63; 1 பேதுரு 1:23). நாம் அவரில் விசுவாசம் கொள் வதின்மூலம் அவரது சரீரத்தை உண்டு ஆவிக்குரிய வகையில் அவரது இரத்தத்தைப் பருகுகிறோம். இதைச் செய்வதன்மூலம் நாம் ஜீவனைப் பெறுகிறோம் (யோவான் 3:36; 6:47).*

## நாம் எவ்வாறு உண்ண மற்றும் பருக வேண்டும்?

### முறையான வகையில்

*ஆராதனை வேளையின்போது கர்த்தருடைய பந்தி எப்போது கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பது பற்றிப் புதிய ஏற்பாட்டில் ஒன்றும் வெளிப்படுத்தப்படவில்லை. இருப்பினும், வேதாகமம், ஆராதனை முறைமையை ஆளுகை செய்யும் கொள்கைகள் சிலவற்றைத் தருகிறது. பவுல், "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 14:40). ஒரே வேளையில் பல செயல்கள் செய்யப்படுமானால், ஒரு செயல் இன்னொன்றுடன் இடையூறை ஏற்படுத்துவதாக இருக்கும். பவுல், "யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்றுபேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்" என்று உரைத்தார் (1 கொரிந்தியர் 14:27; வசனங்கள் 29-31ஐக் காணவும்).*

*கிரேக்க மொழியில் taxis ("கிரமமாயும்"; 1 கொரிந்தியர் 14:40) என்ற வார்த்தை, "வரிசை முறையில், நிலையான வளர் அமைப்பில்/முறையில் … அநேகமாக 'ஒன்றுக்குப் பின் மற்றொன்று' என்ற முறையான வகையில்" என்பதாகப் பயன்படுத்தப்படுகிறது.[2] கொரிந்தியர்கள், ஒரு செயல் இன்னொரு செயலுக்கு இடையூறு ஏற்படுத்துவதைக் கொண்டிருக்கக் கூடாது என்று பவுல் புத்திகூறினார். ஒவ்வொரு செயலும் முறையான வகையில், ஒரு செயலுக்குப்பின் இன்னொரு செயல் என்ற வகையில் செய்யப்பட வேண்டும்.*

*இந்தக் கொள்கையானது ஒரே வேளையில் இரு மனிதர்கள் பிரசங்கித்தலை நீக்குகிறது. இது ஒரு மனிதர் பிரசங்கிக்கையில் இன்னொருவர் ஜெபத்தில் வழிநடத்துவதை அல்லது சபையார் கர்த்தரின் இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதைத் தடைசெய்கிறது. சபையார் பாடிக்கொண்டிருக்கையில் ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்கக் கூடாது. இதே கொள்கையானது, கர்த்தருடைய இராப்போஜனம் கடைப்பிடிக்கப் படுகையில் ஒரு பாடல் பாடப்படுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. உறுப்பினர்கள் இயேசுவைப் பற்றி, தங்களுக்காக அவர் செய்த தியாகம் பற்றி மற்றும் தாங்கள் அவருடன் கொண்டுள்ள உறவுமுறை பற்றித் தியானிப்பதற்கு, உறுப்பினர்களுக்கு நேரம் அளித்தல் என்பதே இராப்போஜனத்தின் நோக்கமாக உள்ளது.*

*நமது தற்கால சமூகமானது, ஒவ்வொரு கணமும் செயலினால் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்றும், அமைதியான எந்தக்கணமும் நீக்கப்பட வேண்டும் என்றும் நினைக்கும் காரணத்தினால், கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது ஒரு பாடலைப் பாடுதல் என்ற வழக்கம் எழுந்திருக்கலாம். ஆராதனைக்கு ஏற்பாடு செய்பவர்கள், இராப்போஜ னத்தின்போது பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் அவசியமாயிருக்கும் தனிப்பட்ட ஈடுபாடு பற்றி உய்த்துணராமை என்பது இன்னொரு காரணமாக இருக்கலாம். சபைக்குழுமத்தில் உள்ள ஒவ்வொரு நபரும், இராப்போஜனத்தினால் அளிக்கப்படுகிற ஆவிக்குரிய பலத்தைப் பெறு வதற்கு இராப்போஜனத்தை உண்ணுதல் அவசியமானது என்று ஆழ்ந்து*

சிந்திப்பதை தமது சுயமான ஆவிக்குரிய தேவைகளாகக் கொண்டுள்ளார். எல்லாத் தனிநபர்களுக்கும் மற்றும் இராப்போஜனத்தின்போது ஏற்படுகிற இயேசுவுடனான தனிப்பட்ட இணைவிற்கும் எந்த ஒரே ஒரு பாடலும் தேவையானவற்றை அளிக்க இயலாது.

இந்தக் காரணத்தினால், இவ்வேளையில் ஒரு பாடலைப் பாடுதல் என்பது ஆராதனை செய்பவருக்குப் பிரச்சனையை உருவாக்குகிறது. அவர் பாடலின் வார்த்தைகளின்மீது கவனம் செலுத்துவாரென்றால், அவரால் இயேசுவின் உடல் மற்றும் இரத்தம் ஆகியவை பற்றியும் இயேசுவுடனான தமது தனிப்பட்ட உறவுமுறை பற்றியும் தனது தனிப்பட்ட தியானத்தில் ஈடுபட இயலாது. அவர் கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தம் ஆகிய வற்றின்மீது கவனம் செலுத்துவாரென்றால், அவரால் பாடலின் வார்த்தை களை பின்பற்ற இயலாது. கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது சபைக்குழுமத்தைப் பாடச்செய்தல் என்பது கர்த்தருடைய சரீரம் இன்னதென்று "முடிவுசெய்ய" (Gk.: *diakrino*) அல்லது "நிதானிக்க" நாடுகிற ஆராதிப்பவர்களின் தியானங்களுக்கு இடையூறாக உள்ளது (1 கொரிந்தியர் 11:29).

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றில் ஐக்கியமாகுதல் மற்றும் அவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பதாக உள்ளது (1 கொரிந்தியர் 10:16). ஒரே வேளையில் [ஒன்றுக்கு மேற்பட்ட] செயல்கள் கடைப்பிடிக்கப்படும்போது, அவைகள் ஆராதிப்பவர்களை இந்தப் பகிர்வில் இருந்து விலக்குவதாகவும் இடையூறு ஏற்படுத்துவதாகவும் உள்ளன. அது பவுலினால் போதிக்கப்பட்ட "கிரமமாக" என்பதை மீறுவதாக உள்ளது. ஒரே வேளையில் பாடுதலும் ஐக்கிய விருந்தில் கலந்துகொள்ளுதலும் செய்யப்படுமானால் அவை ஒன்றுக்கொன்று இடையூறை ஏற்படுத்தும், இது காணிக்கை செலுத்தும் விஷயத்தில் உண்மையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கொடுத்தலின்போது விசேஷித்த கவனக்குவிப்பு எதுவும் தேவைப்படுவ தில்லை. சபைக்குழுமம் பாடுகிறபோது கொடுப்பவரின் ஆராதனைக்கு இடையூறு ஏற்படுத்தப்படுவதில்லை.

சபைகூடுதல்களை, அர்த்தம் நிறைந்த ஆராதனை கூடுகைகளாக்க நாடுவதில் தவறு எதுவுமில்லை. இருப்பினும், அவ்வாறு செய்வதில், சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும், புதிய ஏற்பாட்டுப் போதனையின் வரையறைகளுக்குள்ளாகச் செய்யப்பட வேண்டும். ஆராதிப்பவர்கள் இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தத்துடன் ஐக்கியம் கொள்ளுகையில் இயேசுவுடனான தங்கள் உறவுமுறையின்மீது கவனம் குவிப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் எதையும் திட்டமிடக்கூடாது.

### எந்த வரிசைமுறையில்?

கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும் வரிசைமுறை பற்றிப் பின்வரும் கேள்வி எழுப்பப்படுகிறது: "அப்பமா அல்லது திராட்சரசமா, எது முதலில் எடுத்துகொள்ளப்பட வேண்டும்?" சுவிசேஷ விவரங்களில்

*இரண்டும் கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய நிருபமும், முதலில் அப்பம் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து திராட்சரசம் பானம்பண்ணப்பட்டதாகவும் உரைக்கின்றன (மத்தேயு 26:26-28; மாற்கு 14:22-24; 1 கொரிந்தியர் 11:23-25). லூக்கா முதலில் திராட்சரசமும் பின்பு அப்பமும் பின்பு திராட்சரசமும் எடுத்துக்கொள்ளப்பட்டதாகக் குறிப் பிட்டார் (லூக்கா 22:17-20). லூக்காவில் சுவிசேஷ விவரம் சாத்தியமான இரண்டு காரணங்களினால் மற்றவற்றில் இருந்து மாறுபட்டுள்ளதாகக் காணப்படுகிறது. சிலர், லூக்கா பஸ்காவின் முடிவில் பாத்திரத்தில் பானம் பண்ணுதலைக் குறிப்பிட்டுப் பின்னர் கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதலைப் பதிவுசெய்தார் என்று நினைக்கின்றனர். இயேசு முதலில் பாத்திரத்தை முன்வைத்தார், ஆனால் அப்போஸ்தலர்கள் அப்பத்தை உண்ணும்வரையிலும் மற்றும் இயேசு பாத்திரத்தின் அர்த்தத்தை விளக்கும் வரையிலும் அந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணவில்லை என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது.*

*அனேகமாக இந்த இரண்டாவது விளக்கம்தான் நடந்திருக்கும். பஸ்காபண்டிகையின் பாகமாகத் திராட்சரசம் பானம்பண்ணப்படுதலுக்கு அளிப்பு எதுவும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது பண்டிகையின்போது அப்போஸ்தலர்கள் திராட்சரசம் பானம்பண்ணவில்லை என்று அர்த்தப் படுவதில்லை, ஆனால் இது பண்டிகையின் பாகமாகப் பாத்திரம் பானம் பண்ணப்பட்டது என்ற கருத்தின்மீது சந்தேகத்தை வைக்கிறது. இயேசு பாத்திரத்தைப் பற்றி முதலில் குறிப்பிட்ட உடனே அவர்கள் பாத்திரத்தில் பானம்பண்ணினர் என்று லூக்கா உரைக்கவில்லை. அதற்குப் பதிலாக லூக்கா, இயேசு ஒரு பாத்திரத்தை எடுத்தபின்பு, "தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லை" என்று கூறினார் என்பதாகவே எழுதினார் (லூக்கா 22:18). மத்தேயுவும் மாற்குவும், பாத்திரத்தைப் பற்றிய இயேசுவின் விளக்கங்களுக்குப் பின்பு இதேபோன்ற கூற்றை வைத்தனர் (மத்தேயு 26:29; மாற்கு 14:25). லூக்கா சுவிசேஷத்தில், இயேசு பாத்திரத்தைப் பற்றி முதலில் குறிப்பிட்டபோது அவர் அதற்காக நன்றி செலுத்தினார், ஆனால் இரண்டாம் முறை அவர் அதைப்பற்றிக் குறிப்பிட்டபோது அவர் நன்றிசெலுத்துதலைத் திரும்பவும் செய்யவில்லை (லூக்கா 22:17-20). மத்தேயுவும் மாற்குவும், கிறிஸ்து அப்பத்தை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தபின்பு, பாத்திரத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்குச் சற்று முன்னர் பாத்திரத்திற்காக நன்றி செலுத்தினார் என்று பதிவுசெய்தனர்.*

*லூக்கா 22:17ல் பாத்திரம் முதன்முறை குறிப்பிடப்படுகிறபோது, அது* "a" cup *என்று அழைக்கப்பட்டுள்ளது; ஆனால் லூக்கா 22:20ல்* "a" cup *என்பதற்குப் பதிலாக இது* "the" cup *என்று அழைக்கப்படுகிறது.* "The" cup *என்ற விளக்கமானது முன்பு குறிப்பிடப்பட்ட* "a" cup *என்பதையே குறிப்பிடுவதாக இருக்க வேண்டும். இயேசு* "a" cup *என்பதை எடுத்தார். பின்பு அவர்* "the" cup *என்ற அதே பாத்திரத்தை எடுத்தார்.*

*லூக்கா சுவிசேஷத்தில் உள்ள விவரம், முதலாம் பாத்திரத்தைப் பஸ்காவின் பாகம் என்று ஏற்படுத்தியிராத நிலையிலும்கூட, மத்தேயு,*

மாற்கு மற்றும் 1 கொரிந்தியர் ஆகியவற்றின் விவரங்களுடன் இசைவுள்ளதாக இருக்கிறது. லூக்கா தந்த வரிசைமுறை பின்வருமாறு: இயேசு "a" cup என்பதை எடுத்து, அதற்கு நன்றி செலுத்தி, அப்போஸ்தலர்கள் அதைப் பங்கிட்டுக்கொள்ளும்படி கூறினார்; ஆனால் அதை அந்த வேளையில் அவர்களுக்கு அவர் தரவில்லை. பின்பு அவர் அப்பத்தை எடுத்து அதற்கு நன்றிகூறி, அவர்களுக்குக் கொடுத்து அதில் புசிக்கும்படி கூறினார். இதைத் தொடர்ந்து, அவர் "the" cup என்பதை எடுத்து, அவர்களுக்குக் கொடுத்து, அது தமது இரத்தத்தைக் குறிப்பதாகக் கூறினார். அவரின் நினைவாக அவர்கள் அதில் பானம்பண்ண வேண்டியிருந்தது.

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதில் பின்வரும் வரிசை முறை இருக்க வேண்டும்: மக்களுக்கு அப்பத்தைக் கொடுப்பதற்கு முன்னர் அதற்காக நன்றி செலுத்துதல். பின்பு திராட்சரசத்திற்கு நன்றி செலுத்தி அதை மக்களுக்குக் கொடுத்தல்.

## எப்போது நாம் புசித்து பானம் பண்ண வேண்டும்?

ஞாயிற்றுக்கிழமை - வாரத்தின் முதல்நாள் (நடபடிகள் 20:7), ஓய்வுநாளுக்கு அடுத்தநாள், மற்றும் கர்த்தர் உயிர்த்தெழுந்த நாள் (மத்தேயு 28:1; மாற்கு 16:1, 2; லூக்கா 23:56ஆ-24:1) என்பதே கர்த்தருடைய இராப்போஜனம் கடைப்பிடிக்கப்பட்ட நாள் என்று சுட்டிக்காண்பிக்கப் படும் குறிப்பு ஒன்றுதான் வேதாகமத்தில் உள்ளது. கர்த்தருடைய பந்தியை கடைப்பிடிக்கவோ அல்லது தங்கள் பொருள்களில் இருந்து காணிக்கை கொடுக்கவோ (1 கொரிந்தியர் 16:2) கிறிஸ்தவர்கள் விசேஷித்த நாளாக வேறு எந்த நாளிலும் கூடினர் என்று வேதாகமத்தின் வேறு எந்தக் குறிப்பும் சுட்டிக்காண்பிப்பதில்லை.

ஓய்வுநாள் பற்றி இயேசு மற்றும் பவுல் ஆகியோரின் பேச்சு பற்றிய குறிப்புகள் யாவும் (மத்தேயு 12:9, 10; மாற்கு 1:21; லூக்கா 4:16, 31; 13:10; நடபடிகள் 13:14, 44; 16:13; 17:2; 18:4) கிறிஸ்தவர்களுக்கல்ல, ஆனால் யூதர்களுக்கு முன்வைக்கப்பட்ட உரையாடல்களையே குறித்தன. யூதர்கள் ஓய்வுநாளில் கூடிவந்ததால் அது அவர்களுக்குப் பிரசங்கிக்க ஒரு நல்ல வேளையாக இருந்தது.

நியாயப்பிரமாணத்தின்படி, ஓய்வு நாள் என்பது இளைப்பாறும் நாளாகப் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருந்தது (யாத்திராகமம் 31:14-16; உபாகமம் 5:12-15). அது தேவன் எகிப்தில் இருந்து இஸ்ரவேல் மக்களை விடுவித்ததை நினைவுகூரும் விசேஷித்த நாளாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டியதாக இருந்தது (உபாகமம் 5:15). நியாயப்பிரமாணத்தின் எவ்விடத்திலும் இதை ஆராதனையின் நாளாக ஒதுக்கி வைக்க வேண்டும் என்று இஸ்ரவேல் மக்களுக்குக் கட்டளையிடப்படவில்லை.

"ஓய்வுநாளை நினைவுகூர்ந்து அதைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக" என்பது கட்டளையாக இருந்தபடியால் (யாத்திராகமம் 20:8; உபாகமம் 5:12ஐக் காணவும்), ஆராதிக்கக் கூடுதல் மறைமுகமாய் உணர்த்தப்பட்டது என்று சிலர் முடிவு செய்துள்ளனர். "அதைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக"

என்ற சொல்விளக்கம் ஆராதிக்கக் கூடுதலை அர்த்தப்படுத்துவதில்லை. அது ஓய்வுநாளில் வேலை செய்யாதிருக்கும்படி அதை மற்ற வேலை நாட்களில் இருந்து தனியே பிரித்து வைத்தலை அர்த்தப்படுத்திற்று. எரேமியா மக்களிடத்தில், நீங்களோவெனில், "ஓய்வுநாளில் இந்த நகரத்தின் வாசல் களுக்குள்ளே சுமையைக் கொண்டுவராதபடிக்கும்" "ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யாமல் அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கும்" என்றும் "நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் ஓய்வுநாளிலே சுமையை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்துவராதிருக்கும் படிக்கும்" என்று நினைவூட்டினார் (எரேமியா 17:24, 27அ). இஸ்ரவேல் மக்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி அவர்களுக்குக் கூறப் பட்டது, ஆனால் ஓய்வுநாளில் ஆராதனைக்காகக் கூடும்படி எவ்விடத்திலும் கட்டளையிடப்படவில்லை.

வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையன்று கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தல் என்பது அப்போஸ்தலர்களைப் பின்பற்றி உடனடியாக வந்த காலத்தில் சபையின் உலகளாவிய நடை முறையாயிற்று. இது பரிசுத்த ஆவியானவரால் சகலசத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்ட (யோவான் 16:13, 14) அப்போஸ்தலர்களால் ஞாயிற்றுக் கிழமை [கர்த்தருடைய இராப்போஜனம்பண்ண வேண்டிய நாள் என்று] நிலைநாட்டப்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கும். அவர்கள் ஆவியானவரால் உதவி செய்யப்பட்ட நிலையில், போதிக்கும்படி தங்களுக்கு இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் (மத்தேயு 28:19, 20) கடைப்பிடிக்கும்படி மனமாறியவர்களுக்கு அறிவுறுத்தக் கூடியவர்களாக இருந்தனர்.

பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது வந்து இறங்கின பின்பு (நடபடிகள் 2:1-4), அவர்கள் தேவனுடைய வசனத்தை மக்களுக்குப் போதித்தனர். தொடக்ககால சபையானது அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தது (நடபடிகள் 2:42), இது சபையானது அப்போஸ்தலர்களிடத்தில் இருந்து கற்றுக்கொண் டிருந்தவற்றையே அவர்களின் [அப்போஸ்தலர்களின்] மரணத்திற்குப் பின்பும் தொடர்ந்து நடைமுறைப்படுத்திற்று என்று அர்த்தப்படுகிறது. சபைக்குழுமங்கள் யாவும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க வாரத்தின் முதல்நாளில் கூடிவந்தன. இது அவர்கள் ஐக்கிய விருந்திற்கு ஞாயிற்றுக்கிழமையில் கூடிவர வேண்டும் என்று அவர்களுக்கு அப்போஸ் தலர்கள் போதித்திருந்ததாக அர்த்தப்பட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடிவந்தனர். கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக்கொள்ளுதல், அவர்கள் கூடிவருதலுக்கான நோக்கமாயிருந்தது. வாரந்திரமும் இதைக் கடைப்பிடித்தல் என்பது அப்போஸ்தலர்களால் நிலைநாட்டப்பட்ட மாதிரியாக இருந்திருக்க வேண்டும். இன்றைய நாட்களில், அப்போஸ்தலர் களுடைய போதனையை, முதல் கிறிஸ்தவர்கள் செய்தவாறு பின்பற்றத் தொடருவதை விரும்புபவர்கள், இயேசுவை நினைவுகூருவதற்குக் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கூடிவர வேண்டும்.

கிறிஸ்தவர்கள் கூடிவருவதற்கான விசேஷித்த நாளானது "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்பட்டது. இது *he kuriake hemera* என்ற கிரேக்கச் சொற்றொடரின் மொழியாக்கமாகும் (வெளிப்படுத்தின விசேஷம் 1:10), இது அப்போஸ்தலர்களைப் பின்பற்றிய மனிதர்களின் எழுத்துக்களில் ஞாயிற்றுக்கிழமையைக் குறித்தது. இந்தச் சொற்றொடர், "கர்த்தரின் நாள்" (தேவன் தண்டிக்கவும் அக்கிரமத்தை ஒழிக்கவும் செயல்பட இருக்கும் நாள்) என்ற சொற்றொடரில் இருந்து வேறுபடுகிறது. ஞாயிற்றுக்கிழமையானது, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதன்மூலம் கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு மதிப்பைக் காண்பிக்கும் விசேஷ நாளாக இருந்ததால், அது "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்படுகிறது.

ஜஸ்டின் மார்ட்டியர் என்பவர் எழுதியவற்றின் அடிப்படையில், இரண்டாம் நூற்றாண்டில் இருந்துகூட கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளை[3] "ஞாயிற்றுக்கிழமை" என்று குறிப்பிட்டனர் என்று நாம் அறிகிறோம். இது அவர்கள் ஜெபிக்கவும், வேதவசனங்களை வாசிக்கவும், ஐக்கிய விருந்தில் பங்கேற்கவும், தங்கள் வருமானத்தில் இருந்து காணிக்கை கொடுக்கவும் கூடிவந்த நாளாக இருந்தது. மார்ட்டியர் என்பவர், "ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கப்பட்ட நாளில், ஒரு நாளில் அல்லது ஒரு கிராமப்புறத்தில் வாழ்ந்த [கிறிஸ்தவர்கள்] எல்லாரும் ஒரே இடத்தில் கூடிவரும் கூடுகையொன்று உள்ளது" என்று எழுதினார்.[4]

கிறிஸ்தவர்கள், இயேசுவின் பாடுகளையும் உயிர்த்தெழுதலையும் நினைவுகூருவதற்காகக் கூடிவரும் ஒரு விசேஷித்த நாளாக, வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை விளங்கிற்று என்ற அதே சத்தியத்திற்குப் பிற்கால எழுத்தாளர்களும்கூட சான்று பகர்ந்தனர். அன்றிலிருந்து கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிப்பதற்காக வாரத்தின் முதல் நாளான ஒவ்வொரு ஞாயிறுதோறும் கூடிவந்துள்ளனர். அவர்கள் மற்ற வேளைகளிலும் கூடிவந்தனர், ஆனால் ஞாயிற்றுக்கிழமை - கர்த்தருடைய நாள், அவருடைய நாள் - என்ற நாளில்தான் அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றனர், ஏனெனில் அந்த நாளில்தான் அவர் மனிதகுலத்தின் சார்பாக மரணத்தை ஜெயித்து மேற்கொண்டார்.

## தொகுப்புரை

அப்பத்தைப் புசித்துத் திராட்சரசத்தைப் பானம்பண்ணுதல் மூலம் இயேசுவை நினைவுகூருவதற்காக கூடிவருவதற்குக் கிறிஸ்தவர்கள் ஒரு விசேஷித்த நாளைக் கொண்டுள்ளனர். இதை நாம் வாரத்தின் முதல் நாளான, ஒவ்வொரு ஞாயிறுதோறும் செய்ய வேண்டும். இவ்வாறு, நாம் நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவும் பரலோகத்தில் அவருடன் நித்தியஜீவனைக் கொண்டிருப்பதற்காகவும், நமக்காகப் பாடுபட்ட அவரைக் கனப்படுத்தி அவருக்குப் பயபக்தியைச் செலுத்துகிறோம். இது இயேசுவை நினைவுகூருவதற்கும் அவர் மீண்டும் வரும்வரைக்கும் அவரது மரணத்தைக் காண்பிப்பதற்குமான எளிய மற்றும் அழகுநிறைந்த வழியாக உள்ளது.

குறிப்புகள்

[1]*The Greek-English New Testament*, Revelation 1:10 (New York: Iversen-Norman Associates, 1975), 725. [2] Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 989. [3]Justin Martyr *Dialogue* 41.4. [4]Justin Martyr *Apology* 67.1.

# கிறிஸ்தவக் கொடுத்தல்

*நாம் கர்த்தரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டவற்றிற்குத் தக்க விகிதத்தில் அவருக்குத் திரும்பக் கொடுப்பதற்குக் காரணம் கொண்டுள் ளோம். நாம் உடைமையாகக் கொண்டுள்ள ஒவ்வொன்றும் அவரிடத்தில் இருந்தே வந்துள்ளது. நாம் பெற்றுக்கொள்ளாதது என்று எதுவும் இல்லை (1 கொரிந்தியர் 4:7). நாம் கொடுக்கும்போது, நம்மீது அவர் பொழிந்துள்ள கொடைகளில் இருந்தே எடுத்துக் கொடுக்கிறோம்.*

*கொடுத்தல் என்பது புதிய ஏற்பாட்டின் பிரதான ஆய்வுக்கருத்தாக இருப்பதில்லை. இது இயேசுவும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் பணத்தைப் பயன்படுத்துவது பற்றி ஒன்றும் போதிக்கவில்லை என்று கூறுவதாகாது, ஏனெனில் அது வேதாகமத்தின் பிரதான ஆய்வுக்கருத்து களில் ஒன்றாக உள்ளது.*

## பணத்தைப் பற்றி இயேசுவின் போதனைகள்

*மலைப்பிரசங்கத்தில் இயேசு பின்வருமாறு கூறினார்,*

> *பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத்தேயு 6:19, 20).*

*விசுவாசம் என்பதே இப்படிப்பட்ட அணுகுமுறைக்கு அடிப்படையாக உள்ளது. தொடர்ந்து இயேசு, "அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சய மல்லவா?" என்று கூறினார் (மத்தேயு 6:30). நாம் தேவனுக்குக் கொடுத்த அளவின்படியே அவர் நமக்குத் திரும்பக் கொடுப்பார் என்று விசுவாசித்துக் கொடுக்கும்போது நாம் மிகச்சிறந்தவற்றைக் கொடுக்கிறோம் (2 கொரிந்தியர் 9:6, 10, 11).*

*ஏழைகளுக்குத் தர்மம் கொடுப்பதைப் பற்றி இயேசு கலந்துரையாடு கையில், இது ரகசியமாக வெளிப்படையான காட்சிப்படுத்துதலின்றி செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார். இவ்வாறு கொடுப்பவர் களுக்குத் தேவன் பலன் அளிக்கிறார் (மத்தேயு 6:1-4). ஒருவேளை தேவையில் உள்ளவர்களுக்கு உதவுதல் என்பது "மனுஷர் உங்களுக்கு*

எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர் களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12) என்ற கொள்கையினால் ஆளப்பட வேண்டியிருக்கலாம்.

ஒரு இளம் பணக்கார அதிகாரி கொண்டிருந்த எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுக்கும்படி இயேசு கூறினார். மேலும் அவர், "என்னைப் பின்பற்றிவா" என்றும் கூறினார் (மத்தேயு 19:21ஆ). அந்த இளைஞனின் உடைமைகள் அவனை ஆட்கொண்டிருந்தன என்பது தெளிவு. அவற்றை அவன் கொண்டிருக்கும் வரையில், அவன் எவ்வித கவனமாற்றமுமின்றி இயேசுவைப் பின்பற்ற மாட்டான் என்பது தெளிவு. அந்த இளைஞன் துக்கமடைந்தவனாகச் சென்றுவிட்டான் (மத்தேயு 19:22). இதற்கு நேர்மாறாக, அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் நேரத்தைச் செல விடுவதற்காகத் தாங்கள் சொந்தமாக கொண்டிருந்த எல்லாவற்றையும் விட்டுவிட்டனர் (லூக்கா 5:11). இவ்வுதாரணங்களில் இருந்து, நாம் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக இருப்பதிலிருந்து கவனத்தை மாற்றும் எதையும் - பணம், உறவினர்கள், வியாபாரம் அல்லது எதுவாக இருப் பினும் அவற்றை - நம்மை விட்டு விலக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டாக வேண்டும்.

தீரு சீதோனின் கடலோரப் பகுதிகளில் போதிக்கையில் இயேசு பின்வருமாறு கூறினார்,

> கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக்கா 6:38).

இன்னொரு சமயத்தில் இயேசு, "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை" என்று கூறினார் (லூக்கா 12:33).

பரிசேயர்களால் இயேசு சோதிக்கப்பட்ட வேளையில், நாம் அரசாங் கத்திற்கு உரியவற்றை அரசாங்கத்திற்கும் தேவனுக்கு உரியவற்றைத் தேவனுக்கும் கொடுக்க வேண்டும் என்று அவர் போதித்தார் (மத்தேயு 22:21). நாம் தேவனுக்குக் கொடுக்கத் தவறினால், அவருக்கு உரியவற்றை நாம் வைத்துக்கொள்கிறோம் என்றாகிறது. நாம் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்காதபோது, நாம் தேவனுக்குரியவற்றை நமக்குச் சொந்த மாக வைத்துக்கொள்கிறோம், இது தேவனிடத்தில் களவு செய்தலாக, தேவனை வஞ்சித்தலாக உள்ளது (மல்கியா 3:8ஐக் காணவும்).

## தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுடைய பணத்தின் பயன்பாடு

தொடக்ககால சபையில் சிலர் கைவிடப்பட்டவர்கள் ஆனபோது,

அவர்களுக்கு உதவும் வகையில் மற்ற உறுப்பினர்கள் கொடுத்தனர். அவர்கள் தங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் விற்றுவிடவில்லை, ஆனால் அவர்கள் மற்றவர்களின் தேவைகளுக்கு உதவுவதற்காகத் தங்களின் உடைமைகள் சிலவற்றை விற்றுவிட்டனர் (நடபடிகள் 2:45; 4:36, 37). அவர்கள் தங்கள் வீடுகளை விற்றுவிடவில்லை, இது கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளைக் கொண்டிருந்தனர் என்று குறிப்பிடப்படும் உண்மையில் இருந்து தெளிவாகிறது (நடபடிகள் 12:12; 21:8; ரோமர் 16:5; 1 கொரிந்தியர் 16:19; கொலோசெயர் 4:15; பிலேமோன் 2; 2 யோவான் 10). எல்லாவற்றையும் சமத்துவமாகக் கொண்டிருத்தல் என்பதல்ல, ஆனால் அதற்கு மாறாக தேவையில் இருந்தவர்களுக்குக் கொடுத்தல் என்பதே கிறிஸ்தவர்களின் இலக்காக இருந்தது. உபகார உதவி என்பது தனிப்பட்ட நபர்களுடைய தேவைகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது (நடபடிகள் 2:45; 4:35). நாம் பின்வருமாறு கொடுக்க வேண்டும் ...

- முறையாக - வாரத்தின் முதல்நாளில் (1 கொரிந்தியர் 16:2).
- தகுந்த விகிதத்தில் - நமது வரவுக்குத் தக்கதாக (1 கொரிந்தியர் 16:2).
- திராணிக்குத் தக்கவாறு - நம்மிடம் இருப்பவற்றின் அடிப்படையில் (2 கொரிந்தியர் 8:12).
- நியமித்தபடி - நமது மனதில் நியமித்தபடி (2 கொரிந்தியர் 9:7).
- உற்சாகமாய் - விசனமாயல்ல (2 கொரிந்தியர் 9:7).
- தாராளமாய் - கொஞ்சமாய் அல்ல, ஏராளமாய் (2 கொரிந்தியர் 9:7; ரோமர் 12:8).
- மனவிருப்பமாய் - கட்டாயமல்ல (2 கொரிந்தியர் 9:7).

தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் தேர்ந்துகொள்ளும் வகையில் பயன்படுத்த முடியும், ஆனால் அவற்றை நாம் பயன்படுத்திக்கொள்ளும் விதம் பற்றி நாம் கணக்கு ஒப்புவித்தாக வேண்டும் (மத்தேயு 25:19; லூக்கா 16:2; 19:15; நடபடிகள் 5:4ஐக் காணவும்). தேவன் நமக்குக் கொடுத்துள்ள வற்றிற்கு நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். “அவனவன் பெற்ற வரத்தின் படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்” (1 பேதுரு 4:10). நாம் கொண்டுள்ள எல்லாமுமே தேவனுக் குரியவைகளாக உள்ளன (நடபடிகள் 4:32). “பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது” (1 கொரிந்தியர் 10:26). பவுல், “உனக்கு உண்டாயிருக்கிற வைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது?'' என்று கேட்டார் (1 கொரிந்தியர் 4:7). “ஒன்றுமில்லை” என்பதே இக்கேள்விக்குப் பதிலாகும். நாம் கொடுக்கிற போது, தேவன் நமக்குக் கொடுத்தவற்றில் ஒரு பகுதியை மாத்திரமே அவருக்குக் கொடுக்கிறோம்.

வேதாகமத்தின் இந்த சத்தியத்தை, “We Give Thee but Thine Own”

*என்ற ஆங்கிலக் கீர்த்தனை அழகாக விளக்கப்படுத்துகிறது:*

*எதை யாம் அளிப்பினும் அது உமதே*
*கொடை எதுவாயிருப்பினும்,*
*யாம் கொண்டுள்ள யாவும் உமதே,*
*ஒரு நம்பிக்கை, ஓ கர்த்தாவே, உம்மிடமிருந்தே.*

*நிறைவாய்க் கொடுப்பதினால் யாம்*
*உண்மையாய் பெறும் உக்கிராணக்காரராயிருக்க*
*நீர் எங்களை ஆசீர்வதித்ததினால் யாம்*
*உமக்கு களிப்பாக முதற்கனிகள் தந்தோம்.*[1]

*நமது நிதிநிலை சார்ந்த விஷயங்களை, நாம் கர்த்தருக்குத் தாராளமாய்க் கொடுக்க இயலாத அளவு நாம் நிர்வகித்தால், நாம் நல்ல உக்கிராணக்காரர்களாக இருப்பதில்லை. நாம் கொடுத்த பின்பு, நம்மிடத்தில் எஞ்சியுள்ளவற்றை நாம் பயன்படுத்தும் விதம் பற்றி புறக்கணித்தல் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. நாம் கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொண்டுள்ள அதே பொறுப்பை நம்மிடத்தில் வைத்துக் கொண்டுள்ளவற்றைப் பயன்படுத்தும் விதத்திற்கும் கொண்டுள்ளோம்.*

*தேவனுக்கு நாம் தாராளமாய்க் கொடுத்தால், அவரிடத்தில் இருந்து நாம் ஏராளமாய்ப் பெறுவோம் என்று அவர் நமக்கு உறுதியளித்திருக்கிறார். நாம் விதைத்த அளவிற்கு ஏற்றவாறே அறுப்போம் (2 கொரிந்தியர் 9:6; கலாத்தியர் 6:7). ஒரு விவசாயி, தான் விதைக்கிற விதையின் அளவுக்குத் தக்கவாறே விளைச்சலை எதிர்பார்க்க முடியும். தேவன் நமக்கு ஏராளமாய்க் கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தால், நாம் அவருக்குத் தாராளமாய்க் கொடுக்க வேண்டும். உற்சாகமனதுடன் கொடுப்பவர்களில் அவர் அன்புகூருகிறார் (2 கொரிந்தியர் 9:7).*

*தேவனுக்கு நாம் கொடுக்கும்போது அவர் நமக்குக் கொடுக்கிறார் என்ற காரணத்திற்காக, நாம் நமது சொந்த விருப்பங்களுக்காக அதை மிதமிஞ்சிச் செலவிட முடியும் என்பது அல்ல. கிறிஸ்தவர்களுக்கு யாக்கோபு, "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" என்று எழுதினார் (யாக்கோபு 4:3). நாம் தேவனுடைய ஊழியத்தைத் தொடர்ந்து ஆதரிக்கும்படியாகவே அவர் நமது கொடுத்தல்களுக்குப் பதில் கொடுப்பது என்ற வகையில் நம்மை ஆசீர்வதிக்கிறார்:*

> *விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப் பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார். தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள் (2 கொரிந்தியர் 9:10, 11).*

*நமது கொடுத்தல்களுக்குச் சுயநலமான நோக்கங்கள் என்பவை அடிப்படையாக இருக்கலாகாது. நாம் நமது சொந்த உடைமைகளில் பெருகக்கூடும், நமது பொழுதுபோக்கிற்கான விருப்பங்களை, சந்தோஷங்களை மற்றும் ஆடம்பரங்களை நிறைவேற்றக் கூடும் என்பதற்காகவோ அல்லது நமது சமுதாய தராதரத்தை மேம்படுத்தக் கூடும் என்பதற்காகவோ கொடுக்கிறவர்களாக இருக்கக் கூடாது. தேவனுடைய ஊழியத்தை ஆதரித்தல் என்பதே கொடுத்தலுக்கான நமது நோக்கமாக இருக்க வேண்டும். நாம் பெற்றுக்கொள்பவற்றைப் பயன்படுத்துவதில், தேவனுடைய ஊழியத்தை ஆதரிக்கும்படி அவரை முதலிடத்தில் வைத்தால், நமது தேவைகளை அவர் பார்த்துக்கொள்கிறார் (மத்தேயு 6:33) மற்றும் நாம் நல்ல நோக்கங்களுக்காகத் தொடர்ந்து கொடுக்கக் கூடியவர்களாக இருப்போம். நமது தேவைகளை நிறைவேற்றக்கூடியவர்களாகவும் தேவனுக்குப் பதிலாகக் கொடுப்பதற்கு நாம் ஏராளமானவற்றைக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கும்படிக்குத் தேவன் நமக்குக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்து நாம் கொடுக்க வேண்டும்.*

## *ஒரு கொடையின் அளவு*

*ஒரு கொடையின் மாபெரும் தன்மை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? அது பின்வரும் அளவீடுகளைக் கொண்டு அளக்கப்பட முடியும்:*

*1. கொடையின் மதிப்பு. செல்வந்தர்கள் தேவாலயத்தின் காணிக்கைப் பெட்டியில் ஏராளமான தொகைகளைப் போட்டதை அப்போஸ்தலர்கள் கண்டபோது, அவர்கள் மனப்பதிவு பெற்றனர். ஆனால் இயேசு அவ்வாறு இருக்கவில்லை. அவர்களின் கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று அவர் கூறவில்லை, ஆனால் அவர்களின் கொடைகள் மாபெரும் கொடைகளாய் இருக்கவில்லை என்று அவர் கூறினார் (மாற்கு 12:41-44).*

*2. கொடையின் தொகையானது கொடுப்பவர் கொண்டுள்ளவற்றுடன் ஒப்பிடப்பட்டது. ''ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும்'' (2 கொரிந்தியர் 8:12). செல்வந்தர்கள் தங்கள் பரிபூரணத்தில் இருந்து எடுத்துப்போட்டனர் ஆனால் ஏழைவிதவையோ தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் போட்டாள் என்பதால், அவள் மற்ற யாரைக் காட்டிலும் அதிகமாய்க் கொடுத்தாள் என்று இயேசு கூறினார் (மாற்கு 12:41-44).*

*3. கொடுப்பவருக்கு ஆகும் செலவு. தாவீது கர்த்தருக்குப் பலி செலுத்துவதற்காக அர்வனா என்பவருக்குச் சொந்தமான களத்தைக் கிரயத்திற்கு வாங்க விரும்பினார். தாவீது அரசரைக் கௌரவிப்பதற்காக இந்த உடைமையை [இலவசமாக] கொடுக்க அர்வனா மனவிருப்பமாக இருந்தார். தாவீது, ''நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்'' என்று பதில் அளித்தார் (2 சாமுவேல் 24:24அ).*

*4. கொடுப்பவருக்கு மதிப்பு. ஒரு கொடையானது மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கலாம்; ஆனால் அது கொடுப்பவருக்கு முக்கியத்துவ மானதாக இல்லாதிருந்தால், அவரது கொடுத்தல் மதிப்பற்றதாக அல்லது கொஞ்சமே மதிப்புடையதாக இருக்கும். தேவன் நம்மை இயேசுவின் இரத்தத்தினால் மீட்டுக்கொண்டார் (1 பேதுரு 1:18, 19). இயேசு, வான தூதர் சேனைகள் எல்லாவற்றைப் பார்க்கிலும் விலைமதிப்புள்ளவராக இருந்தார், எனவே அவர் பரலோகம் தரக்கூடிய மாபெரும் கொடையாக இருந்தார்.*

*5. கொடுப்பவரின் தனிப்பட்ட ஈடுபாடு. மக்கெதோனியர்கள் தங்கள் கொடைகளைக் கொடுத்ததோடு மட்டுமின்றி, தங்களையே கொடுத்தனர் (2 கொரிந்தியர் 8:5). பல வேளைகளில், மற்றவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்கு நமது நேரத்தைக் கொடுத்தல் அல்லது நம்மையே கொடுத்தல் என்பதைவிடப் பணத்தைக் கொடுத்தல் என்பது சுலபமாக உள்ளது.*

*6. பெற்றுக்கொள்பவரின் தேவை மற்றும் பெற்றுக்கொள்பவருக்கு மதிப்பு. ஒரு பெரிய மற்றும் மதிப்புடைய கொடை என்பது பெற்றுக் கொள்பவரின் தேவையைச் சந்திக்காதவரை மாபெரும் கொடையாக இருப்பதில்லை. நாம் நமது பாவக்கடனைச் செலுத்தக்கூடாதபடிக்கு இயேசு அவற்றைச் செலுத்தித் தீர்த்ததால், இயேசுவின் கொடை மாபெரும் கொடையாக உள்ளது (ரோமர் 5:8).*

*7. பெற்றுக்கொள்பவரின் எண்ணப்போக்கு. பெற்றுக்கொள்பவரின் தேவைக்கு உதவுகிற கொடையும்கூட, பெற்றுக்கொள்பவர் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் மாபெரும் கொடையாக இருப்பதில்லை. ஒரே கொடை சில மக்களுக்கு மாபெரியதாக இருக்கலாம், ஆனால் அந்தக் கொடையை மதிக்காத மற்றவர்களுக்கு மதிப்பற்றதாக இருக்கலாம் (நடபடிகள் 13:46; ரோமர் 2:4, 5). இரட்சிக்கப்படுபவர்களுக்கு இயேசு, கொடைகளில் எல்லாம் மாபெரும் கொடையாக இருக்கிறார்; ஆனால் கீழ்ப்படியாதவர்களுக்கோ அவர் "இடறுதற்கேதுவான கல்லும் விழுதற் கேதுவான கன்மலையுமாக" இருக்கிறார் (1 பேதுரு 2:8).*

*8. கொடுப்பவரின் எண்ணப்போக்கு. கொடுப்பவரின் எண்ணப் போக்கு என்பது ஒருவேளை, அந்தக் கொடையை ஒரு மாபெரும் கொடையாக்குவதற்கான மாபெரும் சோதனையாக இருக்கலாம். அன்பின் காரணமாகத் தேவன் இயேசுவைக் கொடுத்தார், மற்றும் இயேசு தம்மையே கொடுத்தார் (யோவான் 3:16). அன்பில்லையென்றால், ஒரு கொடையானது கொடுப்பவருக்கு மதிப்புள்ளதாக இருப்பதில்லை (1 கொரிந்தியர் 13:3).*

*கொடைகளை நாம் மதிப்பிடும்போது, கொடைகளின் எந்த அளவீட்டின்படியாகப் பார்த்தாலும் கொடுக்கப்பட்டுள்ள எல்லாக் கொடைகளிலும் இயேசுவே மாபெரும் கொடையாக இருக்கிறார். ஒரு கொடையின் விலையேறப்பெற்ற மதிப்பை நாம் அளக்கும் எல்லாத் தராதரங்களையும் அவர் நிறைவேற்றுகிறார். நாம் தேவன் மற்றும் இயேசு ஆகியோரின் உதாரணத்தைப் பின்பற்றி மாபெரும் கொடுப்பவர்களாக ஆக வேண்டும்.*

## தசமபாகம்

*தசமபாகம் கொடுத்தல் என்பது கிறிஸ்தவக் கொடுத்தலுக்கான அடிப்படைக் கட்டளையாக உள்ளதா? கிறிஸ்தவர்கள் தசமபாகம் கொடுக்க வேண்டுமா?*

*"தசமபாகம்" கொடுத்தல் என்பது பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தலாக உள்ளது. ஆபிரகாம் யுத்தத்தில் கொண்டுவந்த பொருட்களில் பத்தில் ஒருபங்கை மெல்கிசேதேக்குக்குக் கொடுத்தார் என்பது வேதாகமத்தில் தசமபாகம் கொடுத்தல் பற்றி முதன்முறையாகக் குறிப்பிடுதலாக இருந்தது (ஆதியாகமம் 14:20). ஆபிரகாம் பத்தில் ஒரு பாகம் கொடுத்தார் என்பதற்கு வேதாகமப்பதிவேடாக உள்ளது இது ஒன்றுதான். யாக்கோபு தமக்குத் தேவன் வளமளித்து தமது தந்தையின் வீட்டிற்கு மறுபடியும் கொண்டுவந்து சேர்த்தால் தேவனுக்குத் தாம் பத்தில் ஒரு பாகம் கொடுப்பதாகப் பொருத்தனை செய்தார் (ஆதியாகமம் 28:20-22). அவர் தமது தசமபாகத்தை எப்போது அல்லது யாருக்குக் கொடுத்தார் என்பதற்கு வேதாகமம் குறிப்பு எதையும் தருவதில்லை. இவைகள் மாத்திரமே நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு பத்தில் ஒரு பாகம் கொடுத்தல் பற்றிய குறிப்புகளாக உள்ளன.*

*சீனாய் மலையில் மோசே மூலமாக இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் வெளிப்படுத்திய நியாயப்பிரமாணத்தில் "தசமபாகம்" என்ற வார்த்தை முதன்முறையாகக் காணப்படுகிறது (லேவியராகமம் 27:30). நியாயப் பிரமாணம் தசமபாகத்தை லேவியருக்குக் கூலியாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இது அவர்கள் பலிகளைச் செலுத்தி தேவாலயத்துக்கு அடுத்த ஊழியத்தைச் செய்கையில் அவர்களை ஆதரிப்பதாக இருந்தது (எண்ணாகமம் 1:50, 51). அவர்களை ஆதரிப்பதற்கு இஸ்ரவேல் மக்கள் கொடுத்த பணமானது மக்களிடத்தில் இருந்து கேட்டு வாங்கப்பட்ட வரிப்பணமாக இருந்ததேயன்றி அது மனப்பூர்வமான கொடையாக இருந்ததில்லை (லேவியராகமம் 27:30).*

> *இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணி விடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக் குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தர மாகக் கொடுத்தேன் (எண்ணாகமம் 18:21).*

> *லேவியர்மாத்திரம் ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்ய வேண்டும்; ... இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தர மாகக் கொடுத்தேன்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று அவர்களுக்குச் சொன்னேன் என்றார் (எண்ணாகமம் 18:23, 24).*

*இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தில் நுழைந்தபோது, அந்த நாடானது தொடர்ந்து சுதந்தரித்துக் கொள்ளப்படுவதற்கென்று கோத்திரங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. லேவி கோத்திரத்திற்குக் கொடுக்கப்பட்ட*

[நில] உடைமையின் பகுதியானது மற்ற கோத்திரங்களுக்குக் கொடுக்கப் பட்ட நில உடைமையின் பகுதிக்குச் சமமானதாயிருக்கவில்லை. மற்ற கோத்திரங்களால் கொடுக்கப்பட்ட பத்தில் ஒருபங்கை லேவியர்களின் தேவைகளுக்கென்று அளித்ததன் மூலம் தேவன் அவர்களின் தேவைகளுக்கு அளிப்புச் செய்தார். தசமபாகம் மனப்பூர்வமான காணிக்கையாக அல்லாமல், ஒரு கடன் என்ற வகையிலேயே செலுத்தப்பட்டது (உபாகமம் 26:12).

தசமபாகத்தைத் தவிர கூடுதலாக, காணிக்கைகள், பொருத்தனைகள் மற்றும் உற்சாக பலிகள் ஆகியவையும் செலுத்தப்பட்டன (லேவியராகமம் 23:37, 38). இந்தக் காணிக்கைகள் மற்றும் தசமபாகம் ஆகியவற்றில் இருந்து ஆசாரியர்கள் பயனடைந்தனர். தேவாலயப் பராமரிப்பு, ஏழைகளுக்குக் கொடைகள் மற்றும் பிற தேவைகளுக்கான பராமரிப்பு போன்றவை பிற கொடைகளினாலும் (உபாகமம் 16:10, 11) மற்றும் வயல்களில் கதிர்களைப் பொறுக்குதலினாலும் (உபாகமம் 24:19-21) ஆதரிக்கப்பட்டன.

இஸ்ரவேல் மக்கள் தங்கள் பொருட்பெருக்கத்தின் பத்தில் ஒரு பங்கை அளிக்கத் தவறியதாலும் நியாயப்பிரமாணம் கேட்டுக்கொண்டபடி மற்ற காணிக்கைகளைத் தருதலைப் புறக்கணித்ததாலும், தேவன் தமது அளிப்பை அவர்களுக்குத் தராமல் நிறுத்தி வைத்தார். அவர்களின் இச்செயலை அவர் தம்மிடம் இருந்து களவாடுதலாகக் கருதினார்.

> மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களை யெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக் கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கிய வான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 3:8-12).

இஸ்ரவேல் மக்கள் பாபிலோனிய அடிமைத்தளையில் இருந்து திரும்பிய பின்பு தசமபாகங்களைக் கொடுத்தனர். புதிய உடன்படிக்கையை அர்ப்பணித்த கிறிஸ்துவின் மரணம் வரையிலும் தசமபாகம் செலுத்துதல் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது (எபிரெயர் 9:15-17).

இயேசுவின் மரணத்தைக் கொண்டு புதிய உடன்படிக்கை அர்ப் பணிக்கப்பட்ட பின்பு (எபிரெயர் 9:15-17), தசமபாகம் செலுத்துதல் அவசியம் என்பது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. இது லேவியர்கள் மற்றும் ஆசாரியர்களை ஆதரிப்பதற்காகத் தசமபாகத்தை நியாயப்

பிரமாணம் கட்டளையிட்டது என்ற காரணத்தினால் உண்மையாய் இருக்கலாம். எல்லாக் கிறிஸ்தவர்களும் தேவனுக்கு ஆசாரியர்களாக இருப்பதாலும் (1 பேதுரு 2:9; வெளிப்படுத்தன விசேஷம் 1:6; 5:10), நியாயப்பிரமாணம் நீக்கப்பட்டிருப்பதாலும் (கலாத்தியர் 3:24, 25; எபேசியர் 2:14, 15; கொலோசெயர் 2:14; எபிரெயர் 7:12, 19), தசமபாகம் செலுத்துதல் இனியும் கேட்டுக்கொள்ளப்படுவதில்லை. நாம் இப்போது நமது வளமைக்குத் தகுந்தவாறும் (1 கொரிந்தியர் 16:2) நமது இருதயத்தில் நியமித்துக் கொண்டபடியும் (2 கொரிந்தியர் 9:7) கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் புதிய உடன்படிக்கையின் கீழ் நாம் இப்போது இருக்கிறோம்.

புதிய உடன்படிக்கையானது கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது, ஆனால் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கூறுவதில்லை. தேவன் நமக்குக் கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்த்தால், நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும். அவர் நமக்குக் கொடுத் துள்ளவற்றிற்கு உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவருக்குக் கொடுக்கும் அளவுக்குத் தக்கதாகத் திரும்பக் கொடுப்பதாக அவர் நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார் (2 கொரிந்தியர் 9:6) கொடுக்கிற தேவனை நாம் சேவிப்பதால், நாம் அவரது முன்மாதிரியைப் பின்பற்றி உதாரத்துவமாகக் கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்களின் கொடைகளில் பணம், உடைமைகள், நேரம் மற்றும் நாம் கொண்டுள்ளவற்றைப் பயன்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கக் கூடும். தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் உபசரிப்பு ஆகியவற்றில் பிலேமோ னிடமிருந்து உதவி வேண்டும் என்று பவுல் விரும்பினார் (பிலேமோன் 20-22). இது சபையின் மூலமாகக் கொடுத்தலாக இராமல், தனிப்பட்ட கொடுத்தலாக இருந்தது.

ஏழைகளுக்கு உதவவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்களை ஆதரிக்கவும் சபைக்குழுமங்களில் கொடைகள் சேகரிக்கப்படலாம் (1 கொரிந்தியர் 9:6-14; 16:1, 2; பிலிப்பியர் 4:15). இந்த நோக்கங்களுக்கான காணிக்கைகள் வாரத்தின் முதல்நாளில் முறையாக சபைகூடிவரும் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் சேகரிக்கப்பட வேண்டியிருக்கிறது (1 கொரிந்தியர் 16:1, 2).

பணம் பெறுவதற்கு லாட்டரி குலுக்கல், சீட்டு விற்பனை, பிற விளையாட்டுகள் போன்றவற்றைப் புதிய ஏற்பாடு அங்கீகரிப்பதில்லை. இவ்வழிகளில் மக்களிடத்தில் இருந்து எடுத்துக்கொள்ளப்படும் பணம் மனப்பூர்வமாய்க் கொடுக்கப்படுவதில்லை. இந்த விளையாட்டுகளை விளையாடுபவர்கள் சாதாரணமாக, கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்தினால் அல்ல, ஆனால் வெற்றிபெற வேண்டும் என்ற சிந்தனையினாலேயே தூண்டப்படுகின்றனர்.

## தொகுப்புரை

*கொடுத்தல் என்பது முக்கியமானதாக உள்ளது. கொடுக்காதவர்கள் எவ்வாறு கொடுக்க வேண்டும் என்று நமக்குக் காண்பிக்க வந்த இயேசுவைப் போலிருக்கக் கற்றுகொள்வதில்லை (2 கொரிந்தியர் 8:9). அவர் எந்தத் தரஅளவையின்கீழும் மாபெரியதாக உள்ள கொடையைத் தந்தார்.*

*தேவன் நமக்குக் கொடுத்துள்ளவற்றின் உக்கிராணக்காரர்கள் என்ற வகையில், அவர் நமது கைகளில் கொடுத்துள்ளவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதற்கு நாம் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். நாம் தேவனுடைய ஊழியத்தை ஆதரிக்கச் சிலவற்றைக் கொடுப்பதற் காகவே அவர் நமக்குக் கொடுக்கிறார் என்பதை நாம் புரிந்துணர வேண்டும்.*

*பகுத்தறிவின்றிப் பணத்தை எல்லாவற்றிற்காகவும் எறிதல் என்பது நம்மை உதாரகுணமுள்ளவர்கள் ஆக்குவதில்லை. முக்கியமானதாக உள்ளதை நாம் ஆதரிக்கக்கூடும்படி நாம் கொண்டுள்ளவற்றை ஞானமாக மேலாண்மை செய்யும்போதுதான் நாம் தாராளமாய்க் கொடுக்கிறவர்களாக இருக்கிறோம்.*

---

குறிப்பு

[1]William W. How, "We Give Thee but Thine Own," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

## 11

# உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள்

தேவன் தம்மைத் தொழுதுகொள்ள நாடும் எல்லா மக்களையும் ஏற்றுக்கொள்கிறாரா? நமது மதரீதியான வெளிப்பாடுகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதை நாம் எவ்வாறு உறுதிசெய்து கொள்ள முடியும்?

தேவனுடைய அன்பில் நிலைத்திருத்தல் என்பது நிபந்தனையாக உள்ளதென்று இயேசு போதித்தார். "நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவான் 15:10ஆ). தேவனைக் குறித்துத் தாவீது, "அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்" என்று எழுதினார் (சங்கீதம் 5:5ஆ). இயேசுவைப் பொறுத்தமட்டில், தேவனுடைய அன்பில் நிலைத்திருத்தல் என்பது அவரில் அன்புகூருதல் மற்றும் அவரது கற்பனைகளைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இயேசுவின் கட்டளைகளைக் கைக்கொள்ளாத நபர் அவரது [இயேசுவின்] அன்பில் நிலைத்திருப்பதில்லை, மற்றும் அக்கிரமம் செய்பவர்களைத் தேவன் வெறுக்கிறார். இது அவர்களின் தொழுதுகொள்ளுதலைத் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

துன்மார்க்கமான மக்கள் பிசாசின் பிள்ளைகள் என்று கருதப்படுகின்றனர் (யோவான் 8:44). காயீன் "பொல்லாங்கனால் உண்டானவன்" என்று யோவான் கூறினார் (1 யோவான் 3:12அ). பிசாசின் பிள்ளைகளாக இருப்பவர்களின் ஆராதனையைத் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது தெளிவு.

காயீனுடைய காணிக்கையைத் தேவன் புறக்கணித்தார் என்ற உண்மையானது (ஆதியாகமம் 4:4, 5), தேவன் எல்லா மக்களையுமோ அல்லது எல்லா ஆராதனையையுமோ ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதற்கு ஆதாரமாக உள்ளது. ஏறக்குறைய உலகில் உள்ள ஒவ்வொரு நாகரிகத்தினரும் ஏதேனும் ஒன்றை அல்லது யாரேனும் ஒருவரை ஆராதித்துள்ளனர். இஸ்ரவேல் நாட்டைச் சுற்றிலும் இருந்த மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் தெய்வங்களை ஆராதித்தனர். அவர்களையோ அல்லது அவர்களின் ஆராதனையையோ தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. இஸ்ரவேல் மக்கள் துன்மார்க்கமாக வாழத்தொடங்கியபோது, அவர்களின் ஆராதனையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களின் அநீதியினிமித்தம், அவர்களின் ஆராதனையைத் தேவன் "வெறுத்து" புறக்கணித்தார் (ஆமோஸ் 5:21-24).

*ஆராதனை என்பதே தேவன் விரும்புகிற யாவுமாக இருப்பதில்லை. நமது ஆராதனை ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருப்பதற்கு இரு கூறுகள் அவசியமானவைகளாக உள்ளன: (1) நாம் அவர் விரும்புகிற ஆராதனையாக ஏறெடுக்க வேண்டும், மற்றும் (2) நாம் அவர் ஏற்றுக் கொள்ளும் மக்களாக இருக்க வேண்டும். தேவனை நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டுமென்று கண்டிருக்கிறோம் (யோவான் 4:23, 24). அடுத்ததாக நாம் தேவன் ஏற்றுக்கொள்ளும் ஆராதனையாளரைப் பற்றிக் காண்போம்.*

## தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள்

*தேவனுடைய பிள்ளைகள் மற்றும் பொல்லாங்கனின் பிள்ளைகள் என்பவர்கள் மாத்திரமே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இருவகை யான மக்களாக உள்ளனர் (மத்தேயு 13:38; 1 யோவான் 3:8, 10). நாம் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு அவரை ஆவியோடும் உண்மை யோடும் தொழுதுகொள்ளும் அவரது நீதிமான்களாகிய பிள்ளைகளுடன் இருந்தால், நமது ஆராதனையைத் தேவன் ஏற்றுக்கொள்வார் என்று தைரியமாக இருக்க முடியும்.*

*இயேசு, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க முடிவதையும் அவரது மரணம் மற்றும் உயிர்தெழுதலின் மூலமாகச் சுத்திகரிக்கப் படுதலையும் நமக்குச் சாத்தியமாக்கியிருக்கிறார் (கொலோசெயர் 1:21-23; 1 பேதுரு 1:3, 4). நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு, இயேசு மறுரூபமானபோது பிதாவானவர் கூறியது போன்று (மத்தேயு 17:5), இயேசுவுக்கு செவிகொடுக்க வேண்டும். இல்லையென்றால், நாம் நிர்மூல மாக்கப்படுவோம் (நடபடிகள் 3:23). அவரது இரத்தத்தில் நாம் விசுவாசம் வைக்க வேண்டும் (ரோமர் 3:25). நாம் உண்மையிலேயே அவரில் விசுவாசம் கொண்டு, நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பினால், கர்த்தர் என்ற வகையில் அவரைச் சேவிப்பதென்று நாம் தீர்மானிக்க வேண்டும் (நடபடிகள் 3:19), அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9, 10), மற்றும் நமது பாவங்கள் மன்னிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெறவேண்டும் (நடபடிகள் 2:38). இவற்றைச் செய்வதினால், நாம் மறுபடியும் பிறக்கிறோம் (யோவான் 3:3-5) மற்றும் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (கலாத்தியர் 3:26, 27).*

## அவரது வசனத்தைக் கேள்விப்படுகிறவர்கள்

*நாம் இயேசுவின் அற்புதங்களைப்பற்றி வாசிப்பதன்மூலம் அவரை விசுவாசித்து நித்தியஜீவனை அடைய வழிநடத்தப்படுதல் என்பது, அவற்றைப் பற்றி யோவான் எழுதியதற்கான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது (யோவான் 20:30, 31). இயேசுவே கிறிஸ்து என்று யூதர்களை நம்பச் செய்வதற்காகப் பேதுரு, இயேசுவின் அற்புதங்களைப் பற்றிப் பேசினார் (நடபடிகள் 2:22, 36). பேதுருவின் பிரசங்கத்தை அவர்கள் கேட்டபோது,*

அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக, இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிய விரும்பினர். கொர்நேலியுவும் அவரது வீட்டாரும் இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவான வார்த்தைகளைக் கூறும்படி பேதுருவை அழைப்பிக்கும்படி கொர்நேலியுக்குக் கூறப்பட்டது (நடபடிகள் 11:13, 14; 10:47, 48உடன் சிந்தித்துப் பார்க்கப்படுகிறது). நாம் தேவனுடைய வசனத்தினாலே மறுபடியும் பிறந்துள்ளதாகப் பேதுரு எழுதினார். கேள்விப்பட்டு, விசுவாசித்து கீழ்ப்படிகிறவர்களுக்கே வசனம் பயனுள்ளதாக முடியும்.

இயேசு கூறுவதைக் கவனிக்காதவர்களும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியாதவர்களும் நிர்மூலமாக்கப்படுவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:8). சுவிசேஷத்தைப் பெற்று அதை உறுதியாய்ப் பற்றிக்கொள்பவர்களுக்கு (1 கொரிந்தியர் 15:1, 2), அது இரட்சிப்புக்கான தேவபெலனாக இருப்பதால் இது உண்மையாக உள்ளது (ரோமர் 1:16).

## அவரில் விசுவாசம் கொள்கின்றவர்கள்

நாம் இயேசுவில் விசுவாசம் கொள்ளவில்லையென்றால் நமது பாவங் களிலே சாவோம் (யோவான் 8:24). இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது நித்திய ஜீவனுக்கு அடிப்படையாக உள்ளது (யோவான் 3:16). இருப்பினும், நாம் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய நாடாத வரையில் நமது விசுவாசத்திற்குப் பலனளிக்கப்படுவதில்லை (எபிரெயர் 11:6). யோவான், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும்" என்று எழுதினார் (யோவான் 3:36). கீழ்ப்படிதலுக்கு நம்மை தூண்டுகிற விசுவாசமே தேவன் ஏற்றுக்கொள்ளும் விசுவாசமாக உள்ளது (யாக்கோபு 2:18, 20, 24, 26). இயேசு, "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராக" இருக்கிறார் (எபிரெயர் 5:9ஆ).

## அவரைச் சேவிக்கத் தீர்மானிக்கிறவர்கள்

நாம் மன்னிக்கப்படுவதற்காக மனந்திரும்பவேண்டும் (நடபடிகள் 2:38; 3:19). மனந்திரும்புதல் என்பது நாம் பாவம் செய்ததற்காக வருந்துகிற விஷயம் மாத்திரமல்ல. "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப் படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" (2 கொரிந்தியர் 7:10). ஞானஸ்நானம் பெற்றுள்ள வர்களே (நடபடிகள் 8:13), "மனந்திரும்பி" "ஜெபிக்கும்" போது மன்னிக்கப் படுகின்றனர் (நடபடிகள் 8:18-22). கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் மன்னிப்பைப் பெறுவதற்காக ஜெபிக்க வேண்டும் என்று ஒருக்காலும் கூறப்படவில்லை.

மனந்திரும்புதல் என்பது ஜெபம் அல்ல. அது பொல்லாங்கில் இருந்து திரும்பி தேவனைச் சேவித்தல் என்று இருதயத்தில் இருந்து

எழும் தீர்மானமாகும். நாம் செய்துள்ள பரிசுத்தமற்ற செயல்களில் இருந்து நாம் மனந்திரும்ப வேண்டும் (நடபடிகள் 8:22; வெளிப்படுத்தின விசேஷம் 2:21, 22; 9:20, 21; 16:10, 11). மனந்திரும்புதலைத் தொடர்ந்து நமது வாழ்வு தேவனைச் சேவித்தலைச் சுற்றி திரும்புவதாயிருக்க வேண்டும் (மத்தேயு 3:8; 26:20; வெளிப்படுத்தின விசேஷம் 2:5).

மனந்திரும்பாதவர்கள் கெட்டுப்போவார்கள் (2 பேதுரு 3:9). மனந்திரும்பி, தேவனிடத்திற்குத் திரும்பி, ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் மன்னிக்கப்படுவார்கள்.

## இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்கிறவர்கள்

நாம் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறோம்:

> … கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும் (ரோமர் 10:9, 10).

இயேசுவே கிறிஸ்துவாக இருக்கிறார் என்பதே (நடபடிகள் 8:37) நாம் செய்ய வேண்டிய அறிக்கையாக உள்ளது. இந்த அறிக்கை, பாவங்களை அறிக்கையிடுதலோ அல்லது மன்னிப்புக்கான ஜெபமோ அல்ல. இரட்சிக்கப்படுவதற்கு ஜெபம்பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதில்லை.

பெந்தெகோஸ்தே என்னும் யூதர்களுடைய பண்டிகை நாளின் தொடக்கத்தில், யோவேல் 2:32அ விலிருந்து பேதுரு மேற்கோள் காண்பித்தார்: "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (நடபடிகள் 2:21). பேதுரு "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ" என்பதை "யாரெல்லாம் ஜெபிக்கிறார்களோ அவர்களெல்லாம்" என்று விளக்கியுரைக்கவில்லை. இந்த மக்கள் இரட்சிக்கப்படுவதற்குத் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது (நடபடிகள் 2:37), அவர்கள் ஜெபிக்க வேண்டும் என்று பேதுரு கூறவில்லை. மாறாக, அவர்களிடத்தில் அவர், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:38).

பவுல் என்று அழைக்கப்பட்ட சவுலிடத்தில் (நடபடிகள் 13:9) இயேசு நகருக்குள் செல்லும்படியும், அங்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குக் கூறப்படும் என்றும் உரைத்தார் (நடபடிகள் 9:6). தமஸ்கு நகரத்தில் அவர் [சவுல்] மூன்று நாட்களாக உபவாசித்து (நடபடிகள் 9:9) ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார் (நடபடிகள் 9:11ஆ). கர்த்தரால்

*அனுப்பப்பட்ட அனனியா என்பவர் (நடபடிகள் 9:10, 11), சவுலிடத்தில், "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறினார் (நடபடிகள் 22:16). சவுல் தாம் மன்னிக்கப்படுவதற்கு ஜெபிக்க வேண்டும் என்று அவருக்குக் கூறப்படவில்லை. அவர் ஞானஸ்நானத்தில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுததினால் மன்னிக்கப்பட்டார். "தொழுதுகொள்ளுதல்"* (Gk.: *epikaleo*) *என்ற வார்த்தை "ஜெபித்தல்" என்று அர்த்தப்படுவதில்லை. அது - பிற்பாடு பவுல் ராயனுக்கு அபயமிட்டதுபோலவே (நடபடிகள் 25:11, 12, 21, 25; 26:32; 28:19) - நியாயம் கேட்பதற்கான வேண்டுகோள் ஒன்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது. நாம் ஞானஸ்நானம் பெறுகிறபோது நம்மைச் சுத்திகரிக்கும்படி தேவனிடத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம் (நடபடிகள் 8:12; 19:5; 2:38; 1 பேதுரு 3:21ஐக் காணவும்). இரட்சிப்புக்கான இந்த வேண்டுகோளானாது இயேசுவின் நாமத்தில் மாத்திரமே ஏற்படுத்தப் படக் கூடும் (நடபடிகள் 4:11, 12).*

*நாம் இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கையிட்டால், நமது கர்த்தர் என்ற வகையில் அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். அவர், "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லு கிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" (லூக்கா 6:46); "பரலோகத்தி லிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21) என்று கூறினார். ஒருவர் கர்த்தருக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிய மனவிருப்ப மின்றி இருந்தால், அவர் இயேசுவை ஆண்டவர்/கர்த்தர் என்று அழைக்க உரிமையற்றவராக இருக்கிறார்.*

*நாம் இயேசுவை அறிக்கையிடாமல் அவரை மறுதலித்தால், அவரும் நம்மைப் பிதாவுக்கு முன்பாக மறுதலிப்பார் (மத்தேயு 10:33).*

## அவருடன் அடக்கம் பண்ணப்பட்டு அவருடன் எழுப்பப்பட்டவர்கள்

*நாம் இயேசுவைப் பற்றி அறிந்து, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி அவருக்காக வாழ்வதென்று தீர்மானித்து, அவர்மீது கொண்டுள்ள நமது விசுவாசத்தை அறிக்கையிட்டு, நாம் மன்னிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெறும்போது, நமது பாவங்கள் கழுவப்பட்டு நாம் இரட்சிக்கப்படுவோம் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21). ஞானஸ்நானம் என்பது நாம் இரட்சிப்பைப் பெறக்கூடுமுன்பு நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு நிபந்தனையாக உள்ளது.*

*ஞானஸ்நானம் என்பது நம்மை நாமே பாவத்தில் இருந்து சுத்திகரிக்கும் கிரியையல்ல: நமது பாவங்கள் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படு கின்றன (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). அவர் சிலுவை மரணத்திற்குத் தம்மை கீழ்ப்படுத்தியதன் மூலம், நாம் நீதிமான்களாக்கப்படும்படிக்கு (2 கொரிந்தியர் 5:21), நமது பாவங்கள் என்ற கடனை அவர் செலுத்தினார்*

(1 பேதுரு 1:18, 19). அவர் கீழ்ப்படிதலுடன் சிலுவையில் மரணத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தபோது அவருக்குச் செய்யப்பட்டதின் மூலம் நம்முடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டார் (பிலிப்பியர் 2:8; எபிரெயர் 5:8, 9). அதுபோலவே, நாம் ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிகிறோம் - இது நாம் செய்யும் சிலசெயல்கள் என்ற வகையில் அல்ல, ஆனால் நமக்குச் செய்யப்படும் சில செயல்கள் என்ற வகையிலானது. ஞானஸ்நானம் என்பது நாம் கீழ்ப்படியும் ஒரு விஷயமாக உள்ளது.

ஞானஸ்நானத்தில், நாம் நமது கடந்தகாலப் பாவங்கள் நீக்கப்படுதல் என்ற (கொலோசெயர் 2:13, 14) ஆவிக்குரிய அறுவைச் சிகிச்சையைப் பெற்றுக்கொள்கிறோம். அறுவைச் சிகிச்சை செய்பவரான இயேசு அறுவைச் சிகிச்சையைச் செய்கிறார். அவர் தாம் வாக்குத்தத்தம் செய்துள்ளதைச் செய்வார் என்ற விசுவாசத்தில் நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறோம். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது அவர் தம்மை மற்றவர்களின் கைகளுக்குக் கீழ்ப்படுத்தியது போலவே, நாம் ஞானஸ்நானத்தில் நம்மை இன்னொரு நபருடைய கைகளில் கீழ்ப்படுத்துகிறோம்.

ஞானஸ்நானத்தில், நாம் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுடன் புதிய வாழ்வை வாழும்படிக்கு அடக்கம் பண்ணப்படுகிறோம் (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). மாற்கு 16:16ல், “இயேசு ஞானஸ்நானத்தை இரட்சிப்புடன் இணைத்தார் - இது இரட்சிப்பை ஏற்படுத்தும் வழி என்ற வகையிலல்ல, ஆனால் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நிபந்தனை என்ற வகையிலானதாக உள்ளது.”[1] இதே சத்தியத்தைப் பேதுருவும் போதித்தார்:

> “அந்தப்பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்” என்று கூறுகையில் (1 பேதுரு 3:20), அவர் பின்வரும் கூற்றை ஏற்படுத்தினார்: “அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது” (1 பேதுரு 3:21).[2]

நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி, நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க இயலாது (யோவான் 3:5). “ஆவியே” சத்தியத்தைக் கொண்டுவந்தது (யோவான் 16:13), வசனமே ஜீவனைக் கொடுத்து (யோவான் 6:63; 1 பேதுரு 1:23) மற்றும் நம்மைப் பாவத்தில் இருந்து விடுவிக்கிறது (யோவான் 8:32). “ஜலம்” என்பது ஞானஸ்நானம் பெறுகிற தண்ணீராக உள்ளது (நடபடிகள் 8:38, 39).

“தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்” (நடபடிகள் 8:12). பிலிப்பு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிப் பிரசங்கித்தார். அதை மக்கள் விசுவாசித்தபோது, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்பதே விளைவாக இருந்தது. அவர்கள் பிலிப்பு பிரசங்கித்த

ராஜ்யத்தினுள் பிரவேசிக்கப் பதில்செயல் செய்தனர் என்பது தெளிவு. அவர்கள் இயேசுவைப் பற்றிய பிலிப்புவின் செய்தியை விசுவாசித்தனர் (நடபடிகள் 8:5), அவர் தம்மூலமாகக் கிரியை செய்த ஆவியானவரின் துணையுடன் அதை பிரசங்கித்தார் (நடபடிகள் 6:3, 5). அவர்கள் ஞானஸ் நானம் பெற்றனர் என்பதே விளைவாக இருந்தது. இவ்வாறு அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது "ஜலத்தினால்" பிறந்தனர். அவர்கள் பிலிப்புவின் மூலம் கிரியை செய்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிய வழி நடத்தப்பட்டதன் மூலம் "ஆவியினால்" பிறந்தனர். அவர்கள் பிலிப்புவின் பிரசங்கத்திற்குச் செய்த பதில்செயல் மூலம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தனர்.

## தொகுப்புரை

தேவன் தம்மைத் தொழுதுகொள்ள நாடுகிற ஒவ்வொருவருடைய ஆராதனையையும் ஏற்றுக்கொள்வதில்லை. நமது ஆராதனை ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்றால், நாம் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று அவரை அணிந்து கொள்ளும் போது, விசுவாசத்தினால் நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆகிறோம். அவரது பிள்ளைகள் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட ஆவியோடும் உண்மை யோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்.

தேவனை ஆராதித்தல் என்பது வாழ்வு நமக்கு அளிக்கக்கூடிய மாபெரும் அனுபவமாக உள்ளது. நமது ஆராதனை தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருப்பதை நாம் உறுதி செய்துகொள்ள வேண்டும். நாம் அவருக்குப் பிரியமான வழியில் அவரை அடைகிற அவரது உண்மையான பிள்ளைகளாக இருந்தால், அவர் நமது ஆராதனையை ஏற்றுக்கொள்வார் என்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்.

---

குறிப்புகள்

[1]Owen D. Olbricht, *Baptism: A Response of Faith* (Delight, Ark.: Gospel Light Publishing Co., 2000), 86. [2]Ibid., 88.